இலண்டன்

# சுடரொளி


CHUDEROLI JAN - FEB தை - மாசி 2008

மார்ச் 21,23 -2008 - மதுரை
4ஆவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு

4,5 ஜுலை 2008 வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கம்
நடத்தும் தமிழ் விழா 2008




துடுப்பெடுத்தாட்டத் துறையில்
நாட்டுக்குப் புகழ் சேர்த்த முத்தையா முரளிதரன்



தமிழீழப் பற்றாளர் தியகராசா மகேஸ்வரன்
மறைவுக்கு உலகத் தமிழர்கள் அஞ்சலி



இனிய பொங்கல்
நல்வாழ்த்துகள்

£1.00 / இலங்கை ரூ. 35.00 / RM 4

# A-Lanka Travel Ltd

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

Worldwide Travel Agent

wimal@a-lankatravel.co.uk
www.a-lankatravel.co.uk

**Special Rates for**
**Colombo £330 + tax,**
**Madras £410 + tax,**
**Canada £199 + tax,**
**Singapore and Europe**




உலகின் எப்பாகத்திற்கும் மலிவான விலையில் விமானச்
சீட்டுக்கள் வாங்கிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

**Main Agent in UK for Aero Lanka & Lion Air**

Wimal@a-lankatravel.co.uk www.a-lankatravel.co.uk

இலண்டன் வாழ் நம்பிள்ளைகள் எம் உறவுகளைக் கண்டு மகிழ்வதற்கும்
நல்லூர்க்குமரனைத் தரிசிப்பதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்




அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி / நிரஞ்சன் /
ரஜீவன் / கலா
Nik / Peter / Ruth;

இலண்டன்
# சுடரொளி
# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

சுடர் 4 ஒளி 22 தை-மாசி 2008

**கௌரவ ஆசிரியர் :**
திரு. சி. சரவணபவன் (சிற்பி), M.A.,

**பிரதம ஆசிரியர் :**
திரு. ஐ.தி. சம்பந்தன்

**சிரேட்ட ஆலோசகர்கள் :**
திரு. பொன் பாலசுந்தரம்
திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)

**ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :**
திரு. மயில் மனோகரன்
திரு. எஸ். கருணானந்தராசா
திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்

**நிர்வாகம் :**
திருமதி. செல்வதி சம்பந்தன், B.A.(Hons)

**வடிவமைப்பு :**
உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை
Email : utpmathi@yahoo.co.in

**கணினி :**
திருமதி. சரோஜா இலட்சுமணன்

**வெளியீடு :**
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

**தமிழகப் பிரதிநிதி :**
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com

**இலங்கைப் பிரதிநிதி :**
திரு. V. தருமலிங்கம்

**மலேசிய தொடர்பாளர் :**
திரு. இராஜசிங்கம், Tel : 017-3793997;
E-mail : Pooganesvari.Arumugan.nielsen.com

| Subscription | | Annual | Life |
|---|---|---|---|
| UK | : | £ 12 | 120 |
| Europe | : | £ 15 | 150 |
| India | : | Rs. 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. 300 | 3000 |
| Malaysia | : | RM 30 | 300 |
| Singapore | : | SG$ 15 | 150 |
| Other countries | : | £ 20 | 200 |

படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு

## இந்த இதழில்

1. மகேஸ்வரன் அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினைகளும் 3
2. எமது நோக்கு - மகேஸ்வரனின் அரசியல் சிந்தனைகள் 5
3. ஈழத்து நாடக மேதை வைரமுத்து - காரை சுந்தரம் பிள்ளை 7
4. Tamil Diaspora - V. Sivasupramaniam 13
5. மறைந்து போன வன்னி மாநகரங்கள் - அ. மயூரன் 18
6. பொங்கல் அன்றும் இன்றும் - மா.கி. கிறிஸ்ரியன் 20
7. கண்ணதாசன் பாடல்களில் பக்திநெறி - விஜயலட்சுமி 23
8. அரங்க அந்தரங்கம் - கதிர் துரைசிங்கம் 29
9. கண்டேன் கலைஞரை! - க. செல்வநாயகம் 31
10. மலைநாட்டுத் தமிழர் உரிமை அரு. கோபாலன் 33
11. தாயக வலம் - இலங்கை அரசியல் ஒரு நோக்கு - சாவன் 37
12. சிறுகதை : வாய்ப்பு 43
13. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! - சோம. வள்ளியப்பன் 46
14. தமிழ் சினிமாவின் வரலாறு கே. டபிள்யூ. செல்வராசா 48
15. கதை நேரம் : தி.க. சந்திரசேகரன் 52

## பொன் விழா ஆண்டில் கம்பவாரிதி இ. ஜெயராஜ்

சைவத்தையும் தமிழையும் உயிர்போல் நேசித்துப் பணியாற்றிவரும் இலங்கை கம்பன் கழக நிறுவனர் கம்ப வாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் பொன்விழா ஆண்டு பொன்னானது. தமிழுக்குத் தொண்டு செய்வதற்காகப் பிரமச்சாரிய விரதம் மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் தமிழ் அறிஞர்.

கம்பன் கழகம் மூலம் தமிழுக்கு அரும்பெரும் பணியாற்றிவரும் கம்பவாரிதி அவர்கள் தமிழ் இலக்கிய கலை உலகில் அற்புதமான சாதனைகள் புரிந்து வருபவர். ஈழத்தமிழர்களும் தமிழக அறிஞர்களுக்கு இணையானவர்களே என்பதை யதார்த்தமாக நிரூபித்தவர். தமிழக அறிஞர்களால் போற்றப்படும் நாவலர் பெருமான், விபுலானந்தர் போன்ற பேரறிஞராக மதிக்கப்படுபவர் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள். கலைஞர் கருணாநிதி அவர்கள் பல்கலைக்கழகம் செல்லாத படித்த பேரறிஞர். அவருக்குத் தமிழகப் பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளன. இலங்கைப் பல்கலைக் கழகங்கள் கம்பவாரிதி அவர்களுக்குக் கௌரவப் பட்டமளித்து கௌரவிக்கத் தயங்குவதேன்?

ஈழத்தறிஞர்களையும் தமிழக அறிஞர்களையும் பரிமாற்றம் செய்து இருநாட்டு அறிஞர்களையும் ஒரே மேடையில் அமர்த்தி ஆய்வரங்கு, விவாத அரங்கு, பட்டிமன்றம் மூலம் எம்மவர்களும் எல்லாத் துறையிலும் இணையானவர்கள் என்ற நட்புறவை வளர்த்த பெருமைக்குரியவர்.

கம்பன் கோட்டத்தை யாழ்ப்பாணத்திலும் கொழும்புத் தலைநகரிலும் அமைத்துத் தொடர்ச்சியாகத் தமிழ்ப் பணியாற்றிவருபவர். தமிழ்ப் பேச்சாளர்களையும் பட்டிமன்ற விவாத வீரர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். திட்டமிட்டபடி விழாக்களை நடத்தும் துணிவும் ஆற்றலும் வல்லமையும் கம்பன் கழகத்திற்குக் கைவந்த கலையே.

கம்பன் விழாக்களை நடத்தும் பாணி. கட்டுப்பாடு, நெறிமுறைகள், மேடை அலங்காரம் யாவும் பாராட்டுக்குரியதே. தமிழ் மக்கள் தங்கள் கலைக் கலாச்சாரங்களை மறந்துபோகாதிருக்கக் கம்பன் கழகம் நடத்தும் விழாக்கள் உற்சாகமளிக்கும் உற்சவங்களாகும்.

அத்தனைக்கும் ஆணிவேராக விளங்கும் கம்பவாரிதி இ. ஜெயராஜா அவர்களின் பொன்விழா ஆண்டைத் தமிழ் உலகம் சிறப்புடன் கொண்டாடவேண்டும்.

அத்தகைய மதிப்புக்கும் பெருமைக்குமுரிய தமிழ் வளர்க்கும் செம்மல் கம்பவாரிதி திரு. ஜெயராஜ் நீண்டகாலம் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற வேண்டுமெனச் சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்திக் கௌரவிக்கிறது.

சிந்தனைப் பகுதி

# தாக்கம் குன்றும் காட்சிகள்

- சி. மாசிலாமணி




கண் எத்தனையோ காட்சிகளைக் காண்கின்றது. அவை எம் உள்ளத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தில்தான் எத்தனை வேறுபாடு! ஒரு காட்சியே சில வேளைகளில் சூழல் மாற்றத்தால் தாக்கம் குன்றுகிறது. எடுத்துக் காட்டிற்கு, சென்ற ஆகஸ்டு மாதம் இந்தியாவின் கூரையாகத் திகழும் கஷ்மீர் மாநிலத்தின் ஸ்ரீ நகரிலிருந்து இந்து நதி ஓடி வரும் பள்ளத்தாக்கின் ஊடாக லடாக் செல்லும் 270 மைல் சாலை வழியே பயணம் செய்து கொண்டிருக்கின்றேன். இதமான காலநிலை, இரு மருங்கும் மலைகள். நீல வானில் இடையிடையே பால் ஒத்த வெண் முகில்கள். அந்த வெண்மைக்குப் போட்டியாக மலை உச்சிகளை மூடியிருக்கும் உறைபனியின் வெண்மை. இவற்றுடன் உலகின் பாரிய மலைத் தொடராம் இமயத்தின் ஊடாகச் செல்கின்றேன் என்று உள்ளத்தின் ஆழத்தில் பதிந்திருந்த எண்ண அலை. மொத்தத்தில் நான்கு சக்கர வண்டியிற் போய்க் கொண்டிருந்த நான் உவகையில் வானில் பறப்பது போன்ற உணர்விலிருந்தேன் என்றே சொல்ல வேண்டும். அளப்பரிய தாக்கத்துடன் அக்காட்சி என் மனத்திற் பதிந்தது. மறு நாளும் அதே பாதையாற் பயணம் தொடர்கிறது. அன்று வெப்பம் சற்று அதிகம். அதனால் காட்சியின் தாக்கமோ பெருமளவு குன்றியது. முழுவதும் முதல் நாளை ஒத்த சூழலாக இருந்தாற்கூட முதல் அனுபவத்தின் தாக்கம் மறு அனுபவம் ஏற்படுத்தாதுதான். இருந்தாலும் வெயிலின் வெப்பம் குன்றச் செய்த தாக்க விகிதம் வியப்பு ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு இருந்தது.

இளம் வயதில் புதிய காட்சிகளால் ஏற்படும் தாக்கம் ஆழப் பதிந்து மனத்தை விட்டு அகலாது. முதல் முறையாக எனது 10 ஆவது வயதில் புகை வண்டியில் கொழும்பு சென்றேன். அது உண்மையான புகை வண்டி. அது கக்கிய புகையுடன் கலந்து வந்து என் தலை முடியுடன் இரண்டறக் கலந்திருந்த கரித் துண்டுகளைக் காலையில் சீப்பால் (இப்போது என் தலையைப் பார்ப்பவர்கள் உனக்கும் சீப்பு உபயோகிக்கும் அளவிற்கு தலை முடி இருந்ததா என்று கேட்கக்கூடும்) வாரி எடுத்த சம்பவம் ஏற்படுத்திய உணர்வு இன்றும் பதிவில் உண்டு. இங்கு இப்போது 100 மைல் வேகத்துக்குக் கூடிய தொடர் ஊர்திகளிற் பயணம் செய்யும்போதுகூட அந்தக் கரிக் கோச்சில் சென்ற தாக்கம் இல்லையே!

பல புதிய காட்சிகளை என் இளம் மனசிற்குத் தந்த பல இடங்களே மறைந்துவிட்டன. அவை மறைந்த மாயம் புரியவில்லை. அதே கரிக் கோச்சுப் பயணத்தில் காலை நாலரை மணியளவில் குருநாகலுக்கு அண்மையாக வலப் பக்கமாகத் தென்பட்ட மலைகளின் காட்சி மனத்தில் ஒரு புதிய உலகையே உருவாக்கியது. யாழ்ப்பாணத்தில் கீரிமலை தவிர வேறு எந்த மலையையுமே பார்த்திராத எனக்கு அம்மலைகளும், காலை வேளைச் சூழலும் ஒரு புதிய உலகையே கண்முன் நிறுத்தியது. அதன் பின் நூறு தடவைக்கு மேல் அப்பாதையால் போயிருக்கின்றேன். அவை சாதாரண மலைகளாகக் காட்சி தந்தனவே தவிர, நான் கண்ட உலகு எங்கோ மறைந்துவிட்டது.

பத்தும் பசி வந்திடப் போகும் என்பர். ஒரு முறை ஒரு காணிக்குச் சென்றேன். அந்தக் காணியின் பின் பக்கம் சென்றபோது, மனத்தை மயக்கும் சூழலில் இரு மருங்கும் பசுமை தரும் மரம் செடிகள் ஊடாக ஓசையுடன் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. காணிச் சொந்தக்காரனிடம் அவர் எவ்வளவு பாக்கியசாலி என்று சொன்னேன். வயிற்றுச் சோற்றுக்கு நாங்கள் திண்டாடும் போது யாரய்யா ஓடும் ஆற்றைப் பார்த்துக் கொண்டிருப்பது என்று அவரின் பதில் வேறு விதமாக வந்தது. எல்லோருமே சுப்பிரமணிய பாரதியார்போல் வறுமையை மறந்து உலை வைக்க சேமித்த அரிசியைப் பறவைகளுக்கு வீசி மகிழ மாட்டார்கள்தானே.

ஒருமுறை நண்பர் ஒருவர் ஆசையுடன் சில வைரக் கற்களை வாங்கி வந்தார். அவை எவ்வளவுக்கு அவரைக் கவர்ந்ததால் அதிக பணம் கொடுத்து அவற்றை வாங்கி வந்திருப்பார். நாம் பார்த்துவிட்டு ஐயையோ இவை போலி, இவை கண்ணாடிக் கற்கள் என்று உண்மையைச் சொல்ல அக் கற்களின் புதிய தோற்றம் அவருக்கு என்ன தாக்கம் ஏற்படுத்தியிருக்குமோ தெரியவில்லை. அவர் தாம் ஏமாற்றப்பட்டுவிட்ட வெட்கத்தில் அதை வெளிக்காட்டாவிட்டாலும் நிச்சயம் பாரிய தாக்கமாகவே அது இருந்திருக்கும். *



நூலகவியலாளர் என். செல்வராஜாவின் மலேசிய சிங்கப்பூர் நூல் தேட்டம் வெளியீட்டு விழா கோலாலம்பூரில் நடைபெற்றது. டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர். சோமா அரங்கில் 1-12-07 அன்று உள்நாட்டு வாணிப மற்றும் பயனீட்டாளர் விவரத்துறைத் துணை அமைச்சர் மாண்புமிகு டத்தோ க. வீரசிகம் தலைமை ஏற்றார். நூலாசிரியர் செல்வராஜா, அவர்தம் துணைவியார் வி.ஜி. செல்வராஜா, நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நிருவாகி டத்தோ சகாதேவன் உடன் உள்ளனர்.

# தியாகராசா மகேஸ்வரன் எம்.பி. அவர்களின் அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினைகளும்

**ஐ.தி. சம்பந்தன்,** இந்து சமய விவகார அமைச்சரின் முன்னாள் இணைப்புச் செயலாளர்



தமிழீழம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் 2000ஆம் ஆண்டில் அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். வர்த்தகத் துறையில் ஈடுபட்டு வெற்றி கண்டவர் அரசியலில் ஏன் இறங்கினார்?

திரு. மகேஸ்வரன் யாழ்-சென்யோ கல்லூரியில் படிக்கும் காலத்தில் தமிழுணர்வும் சமயப் பற்றும் காணப்பட்டதாக அவரைப் படிப்பித்த ஆசிரியர் மூலம் அறியக் கூடியதாகவிருந்தது. அதற்குக் காரணம் அவர்தம் பரம்பரையினர் இலங்கைத் தமிழரசுக் கட்சி, பின்னர்த் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர்களாக இருந்ததே.

இவர் ஐ.தே. கட்சியில் போட்டியிட்டாலும் தமிழ் உணர்வு, தமிழ்ப் பற்று, சமயப் பற்று, நாட்டுப் பற்று இளமையிலேயே அவரிடம் பரந்து காணப்பட்டன. அந்த இளம்வயதில் அரசியலில் ஈடுபடுவதற்குக் குடும்பச் சுமை இடங்கொடுக்கவில்லை. தன் சுயமுயற்சியினால் வர்த்தகத்தில் வெற்றிகண்ட இவர் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வாழ்ந்து வந்தவர். கடந்த 20 வருடப் போர்ச் சூழலால் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் துயரங்கள், உயிர் இழப்புகள், அழிவுகள், அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதை நேரில் கண்டவர். அம்மக்களோடு இருந்து அனைத்தையும் அனுபவித்தவர்தாம் ஒரு தனிமனிதனாக அவர்களது இன்னல்களைப் போக்க எவ்வாறு உதவ முடியும் என்று சிந்தித்தார். அந்தச் சிந்தனையே ஓர் அரசியல் கட்சி ஊடாக நாடாளுமன்றம் சென்று தமிழர் பிரச்சினையை ஒலிக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். அதன் முடிவே 1999ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட்டு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அதுவே அவரது அரசியலின் பிரவேசம். சிங்கள ஆதிக்கம் உள்ள கட்சியில் தேர்தலில் போட்டியிட்டாலும் தமிழர் பிரச்சினையை முன்னெடுப்பதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருந்தார். அவரது கடந்த எட்டு வருட நாடாளுமன்ற வாழ்க்கை அதை நிரூபித்துள்ளது. அவர் தமிழன் என்ற தனித் தன்மையை இழக்காமல் தமிழர் பிரச்சினைக்கும் தமிழர் விடுதலைக்கும் ஓங்கிக் குரல்கொடுத்து வந்தார். நாடாளுமன்றம் செல்வதற்கு ஐ.தே. கட்சியைக் கவசமாகப் பாவித்தாரே அன்றி அதற்கு அடிமையாகாத ஒரு தமிழ் அரசியல்வாதியாக அரசியல் பயணத்தை மேற்கொண்டார். அவரது தமிழ்த் தீவிரப் போக்கே இனவாத அரசின் ஆதரவுடன் துணைப் படைகளினால் படுகொலை செய்வதற்குப் பின்னணியாக அமைந்தது.

இவர் இரு பொதுத் தேர்தல்களில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் மூன்றாவது தேர்தலில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் 57,000 வாக்களினால் வெற்றி பெற்றுத் தமிழர்களுக்குப் பெருமை தேடியவர்.

இவர் இரண்டாவது முறை தேர்தலில் வெற்றி பெற்ற பின் ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்ததால் இந்து சமய விவகார அமைச்சரானார். அந்த அமைச்சில் கட்டுரையாளர் (ஐ.தி. சம்பந்தன்) அமைச்சின் இணைப்புச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் அமைச்சரின் செயற்பாடுகளை நன்கு அறியும் வாய்ப்புக் கிடைத்தது. இக்கால கட்டத்தில் வடகிழக்கு, மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்துத் தீவிரமாகச் செயற்பட்டார்.

அதே வேளை தமிழ்த் தேசியத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் முழுமையாக ஆதரித்து நாடாளுமன்றத்தில் பல உரைகள் நிகழ்த்தினார். அவ்வுரைகளின் சுருக்கம் கன்சாட்டிலிருந்து எடுத்துக் கீழே தரப்படுகிறது.

தமிழர் தேசியப் பிரச்சினை தொடர்பாக, நாடாளுமன்றத்தில் அவர் எடுத்துக்கூறியவை:

1. தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வெளிநாடுகளில் துர்ப்பிரச்சாரம் செய்த கதிர்காமர் இச்சபையில் இருப்பது தமிழ் இனத்திற்கு வெட்கக்கேடு, இவர் உடனடியாக இராஜிநாமா செய்யவேண்டும்.

2. சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற யுத்தத்தால் தென்மராச்சியில் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டன. அவை இதுவரையும் புனரமைப்புச் செய்யப்படவில்லை. தனக்கு மாட மாளிகை கட்டுவதற்குக் கோடிக் கணக்கில் சந்திரிகா செலவு செய்கிறார்.

3. ஜே.வி.பி.யினர் தமிழர்களுக்கு எதிராக இன வாதம் பேசிச் சமாதான முயற்சிகளைக் குழப்பி வருகின்றனர். சமாதான ஒப்பந்தம் முறிவடைந்தால் நாடு இரண்டாகப் பிரியும் என அறுதியிட்டுக் கூறுகின்றேன்.

4. தமிழ் மக்களுக்கு முற்று முழுதாகப் பாதுகாப்புக் கவசமாக விளங்குபவர்கள் விடுதலைப் புலிகளே. தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளும் அவர்களே. சிங்கள ஆதிக்கம் கொண்ட ஐ.தே. கட்சியைச் சார்ந்த ஒரு

தமிழன் இவ்வாறு முழக்கம் செய்யும்போது தந்தை செல்வா உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையைச் சந்தர்ப்பவசத்தால் ஏற்ற 50 வருட அரசியல் அனுபவம் கொண்ட திரு. வி. ஆனந்த சங்கரி விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஏற்பதில் விதண்டாவாதம் பேசுவதேன்?

5. தமிழ்ப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் சிங்கள ஆயுதப்படைகளின் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆகின்றன. தமிழ்த் தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் அரசு கொடுப்பதில்லை. அது பெரும் கொடுமை. சிங்களப் பகுதிகளில் இவ்வாறு நடைபெற்றால் அரசு சும்மா இருக்குமா?

அண்மைக் காலத்தில் கொழும்பு மாவட்டத்தில் அரசப் படைகளால் மிலேச்சத்தனமாகக் கைது செய்யப்பட்டு ஆடுமாடுகள் போல் சிறையில் அடைக்கப்பட்ட கொடுமைகளை நாடாளுமன்றத்தில் வன்மையாகக் கண்டித்தார். இது கோதபாயாவின் கொடிய நடவடிக்கை என்று துணிந்து கூறினார்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று அங்கு நடைபெறும் கொடுமைகளை, ஆட்கடத்தல்களை, இளைஞர்கள் கொலை செய்யப்படுவதை நேரில் தகவல் திரட்டி வந்தவர். அதன் பின் கொழும்பில் சக்தி வானொலியின் மின்னல் நிகழ்ச்சியில் அளித்த பேட்டியில் மகிந்த அரசின் துணைப்படைகள் தினம் 10 பேரை எவ்வாறு கொலை செய்கிறார்கள் என்பதை ஆதாரத்துடன் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது சமர்ப்பிக்க இருப்பதையும் பேட்டியில் வெளியிட்டார். அதன் மூலம் வடகிழக்கில் தமிழர்கள் படும் அவலங்களையும், மகிந்த அரசின் இனஒழிப்பு நடவடிக்கைகளையும், கிழக்குப் பகுதிச் சிங்கள மயமாக்கப்படுவதையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர இருப்பதாகவும் துணிந்து அந்தப் பேட்டியில் கூறிய செய்திகள் அரசாங்கத்தையும் துணைப்படையையும் அதிரவைத்த செய்திகளாகும். தெய்வீகச் சிந்தனை கொண்ட தியாகராசா மகேஸ்வரன் தனது உயிர் பாதுகாப்பைப் பெரிதாகக் கருதாது தமிழ் மக்கள் படும் இன்னல்களை அவரால் சகித்துக்கொள்ள முடியாத நிலையிலேயே மிகக் கடுமையாக அரசையும் கூலிப் படையையும் கண்டித்தார்.

அதுவே அவர் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியது எனக் கூறப்படுகிறது. அவர் படுகொலை செய்யப்படுவதற்கு 12 மணித்தியாலத்திற்கு முன் கொழும்பிலிருந்து என்னுடன் தொலைபேசி மூலம் உரையாடிய போது இத்தகவல்களை என்னிடம் கூறினார். இனிமேல் தகுந்த பாதுகாப்பு இன்றி வெளியில் போக வேண்டாம் என்று ஆலோசனை கூறினேன். தமிழ் மக்களுக்கு இவ்வளவு கொடுமை நடக்கும்போது தன்னால் பொறுத்திருக்க முடியாது என்றார்.


தமிழுணர்வோடு நாட்டுப் பற்றுடன் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இனவாத அரசின் மிருகத்தனமான நடவடிக்கை இதுவேயாகும். திரு.



குமார் பொன்னம்பலம் திரு. யோஜப் பரராசசிங்கம் திரு. ரவிராஜ் போன்றவர்களுக்கு நடந்ததே திரு. மகேஸ்வரனுக்கும் நடந்துவிட்டது.

அன்றைய தொலைபேசி உரையாடலில் மனித உரிமைகள் தொடர்பாக வெளிநாட்டிலுள்ள மனித உரிமை அமைப்புகளைச் சந்திப்பதற்காக ஜனவரி 3ஆம் திகதி ஜேர்மன் செல்லவிருப்பதாகவும் குறிப்பிட்டார். அதன்பின்னர் இலண்டனுக்கும் வருமாறு வற்புறுத்திக் கேட்டேன். இரண்டு நாள் கழித்துத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். நான் அவருடன் தொடர்பு கொள்ள விருந்தபோது புத்தாண்டு அதிகாலையில் எனக்குக் கிடைத்த செய்தி திரு. மகேஸ்வரன் எம்.பி. படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற துக்கச்செய்தி. செய்தியைக் கேட்டதும் மயங்கிவிட்டேன். ✦


RAGU TRAVELS
A WORLD WIDE TRAVEL AGENTS



For reliable, friendly and efficient service at competitive rates

- Air tickets
- Travel Insurance
- Transportation
- Visa arrangement for India

RAGU ESTATE AGENTS

- Property Management
- Lettings, Sales
- Mortgages
- Construction

Call Ragu on
020 8586 2323, 020 8471 9100
258, High Street North, Manor Park, E12 6SB
Tel : 020 8471 4454, Fax : 020 8586 2489

Advertise in Tamil Guardian
Email info@tamilguardian.com
for rates and details.

# எமது நோக்கு

## தமிழீழப் பற்றாளர் மகேஸ்வரனின் அரசியல் சிந்தனைகள்

புதுவருடத் தினத்தன்று தமிழ்மக்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்திய செய்தி-கொழும்பில் வரலாற்றுப் பெருமை பெற்ற பொன்னம்பலவானர் ஆலயத்தில் வழிபாட்டிற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட செய்தியாகும்.

இவ்வாண்டு தமிழ் மக்கள் யுத்தகளத்தையே சந்திக்கப் போகிறார்கள் என்பதற்கான சகுனமே இதுவாகும். அதே வேளை திரு. மகேஸ்வரன் எதற்காகத் தன் உயிரைப் பறிகொடுத்தார் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நாட்டுப் பற்றாளன் தியாகராசா மகேஸ்வரனின் அரசியல் சிந்தனைகளும் செயற்பாடும் தமிழீழ விடுதலை வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துள்ளன. சிங்கள ஆதிக்க அரசியல் கட்சியிலுள்ள ஒருவர் நாட்டுப்பற்றுடன் தூய்மையாக விடுதலைப் போராட்டத்திற்கு அளிக்கும் ஆதரவும் செயற்பாடும் எவ்வளவு வலுவானது என்பதை மகேஸ்வரனின் அரசியல் நடவடிக்கைகள் தெளிவு படுத்தியுள்ளன.

40 ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதியில் கால் வைக்கமுடியாதிருந்த ஐ.தே. கட்சியின் ஆதரவில் 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டு வடபகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். நாடாளுமன்றம் சென்றதும் ஆற்றிய முதல் உரை சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் தமிழ்த் தேச மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் பற்றியதே. சிங்கள இராணுவ குண்டு வீச்சால் அழிக்கப்பட்ட வீடுகள், ஆலயங்கள், தொழிற்சாலைகள் பற்றிய விபரங்களை ஆதாரத்தோடு எடுத்துக் கூறி அரசை அதிர வைத்தார். சிங்கள ஆதிக்கம் கொண்ட கட்சிப் பிரதிநிதியாகத் தமிழர் பிரச்சினையை எடுத்துக் கூறும்போது நாடாளுமன்றத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டது. தொடர்ந்தும் எட்டு ஆண்டுகாலத்தில் நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய அனைத்துரைகளும் தமிழர் பிரச்சினை தொடர்பானவையே.

அதேவேளை, தமிழ்த் தேசியத்தையும், தமிழர் சுயாட்சியையும் வற்புறுத்திப் பேசிய வேளைகளில் குறுக்கீடு செய்யும் ஜே.வி.பி.யினர், ஐ.தே. கட்சி அடிப்படைக் கொள்கையை தமிழீழமாக மாற்றிவிட்டதா? என்று குழப்பத்தை ஏற்படுத்தும்போது தனிமனிதனாகச் சிங்கள மொழியில் பேசி அவர்களின் வாய்க்கு ஆப்புப் போட்ட வல்லவன் இன்று இல்லை.

ஐ.தே. கட்சியின் கட்டுப்பாட்டை மீறித் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து வாக்களித்துத் தமிழ்த் தேசியத்தை நேசித்தத் துணிவு மிக்க மனிதன். கொழும்பிலே தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப் பட்டதையும், ஆட்கடத்தல்களையும் வன்மையாகக் கண்டித்ததோடு, இது கோதபாயவின் செயல் என்று நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாக எடுத்துக் கூறியவர். இதனால் திரு. மகேஸ்வரனின் பாதுகாப்புக் காவலர்கள் 18இலிருந்து 2 ஆகக்குறைக்கப்பட்டனர். அதையும் பொருட்படுத்தாது துணிந்து யாழ்ப்பாணம் சென்று அங்கு இனவாத அரசின் துணையுடன் துணைக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் அன்றாடம் நடைபெறும் கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல் போதல் போன்ற விபரங்களை ஆதாரத்துடன் திரட்டிவந்த துணிவுமிக்க தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர். அவ் விபரங்களை நாடாளுமன்றத்திலும் சர்வதேசச் சமூக அரங்கிலும் சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருந்தார். அவ்வாறு செய்யப்படின் மகிந்த அரசின் இனக்கொலையும் துணைக்குழுக்களினால் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் படுகொலைகளும் சந்திக்கு வரும். ஒரு பலம் வாய்ந்த சிங்களக் கட்சியின் பிரதிநிதியாகக் கூறும்போது சர்வதேசம் விழிப்படையும். அதற்குமுன் அந்தத் தமிழ்க் குரல் அடக்கப்பட்டுவிட்டது.

தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியத்தின் சின்னமாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முழுமையாக வெற்றிபெற வேண்டுமென்பதற்காக யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதைத் தவிர்த்து கொழும்பில் போட்டியிட்டு மூன்றாவது தடவையாக நாடாளுமன்றம் சென்றார். கொழும்பிலிருந்து கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளையே முன்னெடுத்து வந்தார். தமிழன் என்ற உணர்வோடு செயற்பட்ட வீரனின் தீரச்செயலைச் சகிக்க முடியாத இனவாத அரசும் அதன் துணைப்படையும் அவர் உயிருக்கு உலை வைத்துவிட்டனர்.

தமிழர் பிரச்சினையைச் சர்வதேசச் சமூகத்தின் முன் கொண்டுவரவிருந்த மாமனிதனின் படுகொலையை சர்வதேசத் தமிழர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

தமிழீழப் பற்றாளர் தியாகராசா மகேஸ்வரனின் அரசியல் வழியும் சிந்தனையும் செயற்பாடும் தமிழ்த் தேசியத்திற்கு உந்துசக்தியாக விளங்கியவையே. *

**சுடரொளி வெளியீட்டுக் கழக வெளியீடாக விரைவில் வெளிவருகிறது. தமிழீழப் பற்றாளர் தியாகராசா மகேஸ்வரனின் அரசியல் வாழ்வும் நாடாளுமன்ற உரையும் என்னும் நூல்.**

# ஈழத்தில் அவல நிலை

## ஈழத்து இரத்தினம்

தாயிடம் திரும்பச் சேயும், தாய் நாடு திரும்பத் தேச பக்தரும் எப்போதும் துடித்தே நிற்பர். ஆனால், சொந்த நாடு திரும்பிய பின்னும் நொந்தழியும் கோலம் தான் அங்கு உண்டு என்றால் எந்த நெஞ்சம்தான் பொறுக்கும்? அந்தக் குமுறலைப் பாடலாக்குகிறார் கவிஞர்.

கொடுமையிலும் கொடுமை அம்மா
ஈழத் தமிழர் நிலைமை அம்மா
சொந்தநாடு வந்த பின்பும்
நொந்தழியும் கோலம் அம்மா! கொடு...

உயிர்காக்கத் தமிழகம் சென்றோம்
உறவினராய் வாழ்ந்திருந்தோம்
நலமாகும் நிலைமை என்று
பல ஆண்டாய்க் காத்திருந்தோம்! கொடு...
நல்வாழ்வு தருவோம் என்று
நம்பவைத்துக் கப்பல் ஏற்றிச்
சொந்த நாட்டில் இறக்கிவிட்டார்
சிந்தை அமைதி குலைத்துவிட்டார்
இங்கும் இல்லை அங்கும் இல்லை
என்ற நிலையை ஆக்கிவிட்டார்
இருதலைக் கொள்ளியாக
எங்கள் நிலை ஆனதம்மா! கொடு...

தாய்நாடு செல்பவர்க்கெல்லாம்
தக்க தொகை தருவோம் என்றார்
வீடு நிலம் இழந்தோர்க் கெல்லாம்
மாடு மனை கிடைக்கும் என்றார்
வீடுமில்லை மனையும் இல்லை
வீதியோரம் ஏங்குகின்றோம்
உணவும் இல்லை உடையுமில்லை
ஒரு பாதுகாப்பும் இல்லை! கொடு...
உயிருக்கு உறுதியில்லை
உயிர்காக்க வழியுமில்லை
செல்லும் இடம் புரியவில்லை
சிந்தையில் தெளிவும் இல்லை
இரவு பகல் இளைஞர்களை
ஒரு கூட்டம் கடத்துதம்மா
சோதனை என்று சொல்லி
இராணுவம் அழைக்குதம்மா! கொடு..
விமானங்கள் காலை மாலை
தாக்குதல் நடத்துதம்மா-
தமிழ்சாதி செத்துச் செத்து
வீதியில் கிடக்குதம்மா
மனிதாபிமானம் இங்கே
மரணித்துப் போனதம்மா-
ஏன் என்று கேட்பதற்கோ
யாரும் அற்ற நிலைதான் அம்மா! கொடு...

# மகேஸ்வரா நீயென்றும் சாகா மைந்தன்!

## வன்னிமாறன்

அய்யகோ இதுவா சேதி
அஞ்சிடாத் தமிழன் தேச
மெய்யனாம் மகேஸ் வரனை
வீழ்த்தினான் துடக்கன் என்று
செய்தியைக் கேட்டா ரெல்லாம்
செத்தனர் தாமே அம்மா!
பொய்யிடும் அரசம் ஒட்டர்
பொறியொரு கொடுமை அன்றோ!

யாழ்மண்ணே சென்று அங்கே
நடப்பதைக் கண்டேன் அந்தப்
பாழ்பட்ட செயலை எல்லாம்
பகருவேன் சபையில் நின்று
சூழ்முட்டைக் கொடியோன் கூட்டம்
கொன்றிடும் கதைதான் சொல்வேன்
ஏழ்உல கெல்லாம் கேட்பீர்
என்றானே மகேஸ்வ ரன்தான்!

மாதத்திற் கொருநாள் போவார்
மண்ணிலே கொலைகள் செய்வார்
போதத்தில் போகும் புல்லர்
பெண்களின் கற்பைத் தின்பார்
வாதையாய்க் கீறிக் கொள்ளை
வகுப்பாரே கொழும்பில் நிற்கும்
போதையாரி டக்கன் கூட்டப்
பெயரெலாம் சொல்வேன் என்றார்!

கொடுமையாய் இடக்கன் மண்ணில்
கொட்டிடும் படையின் கூட்டில்
அடிமையாய் அந்தி யத்தான்
ஆக்கிடும் காக்கை யாகி
முடியென நிற்கும் இந்த
முகம்பிச கான பொய்யன்
இடியெனும் உரையே கேட்டு
இயமனாய் ஆனான் பாரீர்!

புதியதோர் ஆண்டு என்று
பொன்னம்ப லத்தான் கோவில்
பதியது சென்று ஈசன்
பற்றிலே வணங்கும் காலை
மதியது இல்லா மக்கள்
மகிந்தனின் பலத்தில் வாழ்வார்
இதயமாம் மகேசன் ஏந்தை
இயமனாய் எடுத்தான் அம்மா!

மகேஸ்வரா உன்னை என்றும்
மதித்திடும் தமிழ்மண் ஏற்றும்
புகுந்தனை இளையாய் ஆகிப்
பெற்றனை பதவி மக்கள்
தகுந்தவுன் ஆற்றல் கண்டும்
நெஞ்சிலே வைத்தோம் ஈசா
நிகரிலாத் தொண்டைச் செய்த
நீயென்றும் சாகா மைந்தன்!

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

## - கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

# வாழ்க்கை வரலாறு (18)

*விரல்கள் தாளம் போடும் விழிகள் நடமாடும்*
*சுருதி குருதியோடு சுவைகலந்து பேசும்*
**- அரியாலையூர் வே. ஐயாத்துரை**

இதுவரை குறிப்பிட்ட ரஸக்கோட்பாட்டின் அடிப்படையில் வைரமுத்துவின் நடிப்பினை நோக்குவோம்.

## 1. சிருங்காரம் :

இசை நாடகங்களிற் பெரும்பாலும் சிருங்கார ரஸம் மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம். இந்திய நாடக மரபிற் பிரிக்கமுடியாத ஒன்றாகவும் சிருங்கார ரஸமுள்ளது. எந்த நாடகமாகவிருந்தாலும் அது மங்கள கரமாக முடியவேண்டும் என்பது நாட்டிய சாஸ்திர மரபு. ஆகவே எழுதப்பட்ட பெரும்பாலான இந்திய நாடகங்களில் சிருங்கார ரஸம் முக்கிய இடம் பெற்றதில் வியப்பில்லை. இதற்கு இசை நாடகங்களும் விதிவிலக்காக அமையவில்லை.

பார்ப்போரிடம் சிருங்கார ரஸம் தோன்றும்படி வைரமுத்து பல நாடகங்களில் நடித்துள்ளார். 'அல்லி அர்ச்சுனா', 'பவளக்கொடி', 'கோவலன் கண்ணகி', 'ஸ்ரீவள்ளி', 'ஞானசவுந்தரி' ஆகிய நாடகங்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

ஞானசவுந்தரி நாடகத்தில் இவர் பிலேந்திரன் பாத்திரமேற்று, ஞானசவுந்தரியுடன் சிருங்கார ரஸம் ததும்ப நடிப்பது சுவையானது. காதல் ததும்பும் பார்வையும், இனிய வார்த்தையும், நளினமான அசைவும், முக பாவமும் சிருங்கார ரஸத்தை உண்டாக்கி உள்ளக் கிளர்ச்சியை ஏற்படச் செய்யும்.

**''மயிலே மாங்குயிலே பாடி-இம்**
**மாநகர் போலவித் தாரணி உண்டோ சொல் (மயிலே)**
**ஒயில் மேவும் மரகத மாளிகை**
**உலகத் தவர் எவரும் கண்டதுண்டோ! (மயிலே)**

சிந்துபைரவி ராகத்திலமைந்த இப்பாடலும் வைரமுத்துவின் சிறந்த நடிப்பும் பார்ப்போர் உளத்தில் சிருங்கார ரஸத்தையெழுப்பி அற்புதமான ரஸானுபவத்தை உண்டாக்கக் காணலாம்.

## 2. ஹாஸ்யம்

வைரமுத்து இயல்பாகவே நகைச்சுவை ததும்பப் பேசுபவர். நகைச்சுவையென்பது இவருடன் இயல்பாகவே பிறந்தவொன்றெனலாம். ஆனால் இசை நாடகங்களில் இவர் நகைச்சுவைப் பாத்திரமேற்று நடித்ததில்லை. (சமூக நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திர மேற்று நடித்துள்ளார்.) ஆனால் தான் ஏற்று நடித்த இசை நாடகப் பாத்திரங்களூடாக, சில சமயங்களில் நகைச்சுவை ததும்ப நடித்து ஹாஸ்ய ரஸானுபவத்தை உண்டாக்கியிருக்கின்றார். உதாரணமாக, 'ஸ்ரீவள்ளி' நாடகத்தில் விருத்தனாக நடிக்கும் வைரமுத்து வள்ளியிடம் பெற்றுத் தேனும் தினைமாவும் அருந்திய பின்னர்,

**''தாகம் தீர்ந்ததடி மங்கையே - கொண்ட**
**மோகம் தீரவில்லை யிங்கையே**
**தேக விநோதப்பெண நங்கையே - என்னைச்**
**சேருதற்கேனிந்தச் சங்கையே''**

எனப் பாடும் பாடல் நகைச்சுவை மிக்கது. வைரமுத்துவின் அசைவு, பார்வை, இனிய பாடல் ஆகியன ஹாஸ்ய ரஸத்தை ஏற்படுத்திப் பார்ப்போரிடம் இனிய ரஸானுபவத்தை உண்டாக்கும்.

பூதத்தம்பி நாடகத்தில் அழகவல்லியைக் கண்ட பின்னர்க் காம வசப்பட்டவனாக அந்திராசி அவளை நினைந்து,

**''குயிலோ புனலோ கூந்தல்**
**அயிலோ கனலோ கண்கள்**
**குவிந்த தாமரை மலரோ - அது**
**சிவந்த கோங்கின் இதழோ''**

எனச் சிந்துபைரவி ராகத்திலமைந்த பாடலைப் பாடிய பின்னர்க் கடைசியில் ''அட! அட!! அட!!! என ஆற்றாமையை வெளிப்படுத்தும் போது காண்போர் சிரிப்பை அடக்கமுடியாது. வாய்விட்டுச் சிரிப்பதைக் காணலாம்.

## 3. சோகம் :

வைரமுத்துவின் நடிப்பில் சோக ரஸம்தான் உச்சமானது என்பர். சோகத்தை வெளிக்கொணரும் இவருடைய நடிப்பின் சிறப்பினை 'அரிச்சந்திரா', சத்தியவான் சாவித்திரி', 'ஞானசவுந்தரி', 'நல்ல தங்காள்' ஆகிய நாடகங்களிற் காணலாம்.

அரிச்சந்திராவில் மயானக் காட்சி யாரையும் உருக்கவல்லது. குழந்தையைத் தகனம் செய்ய மயானத் துக்கு வந்தவள் தன்னுடைய மனைவி என்பதையும், இறந்த குழந்தை தன்னுடையது என்பதையும் அறிந்த அரிச்சந்திரன் பதறித் துடிக்கும் காட்சியின்போது வைரமுத்துவின் நடிப்பு ஒப்புயர்வற்றது. துக்கம் மேலிட,

உடல் நடுங்க, சொற்கள் தடுமாற, உணர்ச்சியைக் கொட்டி நடிக்கும் வைரமுத்துவைக் காண்பவர்கள் தம்மை யறியாமலே கண்ணீர் சிந்தியழத் தொடங்கிவிடுவர். இவருடைய நடிப்புத் தனித்துவமானது.

''நான் இந்திய நடிகர்கள் பலர் அரிச்சந்திரனாக நடிக்கும்போது ஆர்மோனியம் வாசித்திருக்கிறேன். தகரக் கொட்டகையிலும், புத்துவாட்டியார் மடுவத்திலும் பலர் நடித்த அரிச்சந்திர மயானகாண்ட நாடகங்களை யும் பார்த்திருக்கிறேன். திரைப்படங்களிலும் பீ.யூ. சின்னப்பா, சிவாஜி கணேசன் ஆகியோருடைய நடிப்பையும் பார்த்திருக்கிறேன். ஆனால் வைரமுத்துவுக்கு இணை வைரமுத்துதான். இதில் எள்ளளவும் சந்தேக மில்லை'' இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டுக் கூறியவர் வேறுயாருமல்லர். புத்துவாட்டி குடும்பத்தைச் சேர்ந்த சிறந்த கலைஞராகிய எஸ். வேணுகோபால் ஆவர்.

காற்பணமும் முழுத்துண்டும் வேதியரிடம் பெற்று வரும்படி சந்திரமதியை அனுப்பியபின் குழந்தையைக் கையில் தூக்கியபடி பாடும் சோகரஸம் ததும்பும் பாடல் மேலும் உள்ளத்தைப் பிழியக் காணலாம்.

**''சூரியன் மரபின்றோடு சோர்ந்ததோ அழிந்து போச்சோ**
**காரியின் எண்ணமாச்சோ கௌசிகன் சதிக்குள்ளாச்சோ**
**கோரிநான் பெற்றபாலன் குவலயம் ஆண்டிடாமல்**
**காரிருள் கானில் பாம்பு கடித்துமே இறந்தாயோடா''**

மேற்படி விருத்தத்தை முகாரி இராகத்திற் பாடிய பின்னர்;

**''தாயை விட்டு வந்து காட்டில்**
**தனியாய் மாண்டாயோ**
**ஆருமற்ற அனாதையான**
**அன்னை வேண்டாயோ''**

எனச் சிந்துபைரவியில் பாடும்பொழுது பார்ப்போர் சோகத்தின் உச்சிக்கே சென்று தம்மையிழந்தவராக அந்த ரஸானுபவத்தில் மூழ்கிவிடுவர்.

''சூரிய மரபின்றோடு...'' எனும் விருத்தத்தைச் சில சமயங்களில் 'மனோலயம்' எனும் ராகத்தின் தாரஸ் தாயியில் (மேல்ஸ்தாயி) பாடி, மத்திய ஸ்தாயியில் அறுதியிட்டு முடிக்கும்போது நாமெலாம் மயானத்தில் நிற்கின்ற உணர்வினைப் பெற்று அதில் நின்றும் விடு படாதிருக்கக் காணலாம். இதனை அடுத்துவரும் சிந்து பைரவி ராகம் மேலும் சோக ரஸத்தைப் பிறக்க வைத்துப் பார்ப்போரை மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டோராக வைத்துவிடும்.

சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் நாரதர் சத்திய வானை நோக்கி சாவித்திரியைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துவார். ''நாடு நகரிழந்து, கண் இழந்த தாய் தந்தையருடன் கானகத்தில் வாழும் எனக்குத் திருமணம் அவசியமா?'' எனச் சோகரஸம் ததும்ப சத்தியவான் கேட்பதாக அமைந்த பாடலை வைரமுத்து பாடி நடிக்கும் போதும் பார்ப்போர் கண்களில் நீர்வழியக் காணலாம்.

**''வனவாச காலத்திலே மணக்கோலமா எனக்கு**
**வனவாச காலத்திலே**
**தனதான ராச்சியமும் சமமான பாக்கியமும்**
**தாரமும் இழந்து இங்குச் சருகு தழைகள் தின்று திரியும்**
**வனவாச காலத்திலே''**

மேற்படி பாடலை 'பைரவி' ராகத்திலேயே வைரமுத்து பாடுவது வழக்கம்.

## 4. ரௌத்திரம்

வைரமுத்து நடித்த ரௌத்திரம் (கோபம்) நிறைந்த பாத்திரங்களாக 'அந்திராசி', 'எமன்', 'இரணியன்', 'இராவணன்' என்பவற்றைக் கூறலாம். இவற்றுள் 'அந்தி ராசி' பாத்திரம் வித்தியாசமானது. பூதத் தம்பியின் மனைவி, தன்னுடைய விருப்பத்துக்கிணங்காமல் அவமதித்து விட்டாள் என்பதை அறிந்ததும் அவன் கோபத்தின் எல்லைக்கே சென்றுவிடுகிறான். ரௌத்திரத்தை வெளிப் படுத்தும் பயங்கரச் சிரிப்புடன் இரு கைகளையும் பிசைந்தபடி, உதட்டைக் கடித்தபடி அங்குமிங்கும் நடக்கும் வைரமுத்துவின் கண்கள் கோபக்கனல் கக்கு வதைப் பார்க்கலாம். ஆஹா! அப்படிச் செய்து விட்டாளா? என்றபடி பாடும் மோகனத்திலமைந்த விருத்தம் மேலும் ரௌத்திரத்தைத் தூண்டும்.

**''அட்டகிரி அசையினும் துட்டர்படை சருவினும்**
**அமரரோடு அசுரர் வரினும்**
**அண்ட முகடிடியினும் கொண்டலிடி பொழியினும்**
**அந்திராசி அசைய வருமோ''**

இந்தப் பாடலூடாகவும், நடிப்பினூடாகவும் அந்திராசி யாவருக்கும் அஞ்சாத ஒருவன் என்பதை வைரமுத்து பார்ப்போர் மனத்தில் பதிய வைப்பர். இப்பாடலடியைப் பாடிய பின்னர் மிருதங்கத்தில் வாசிக்கப்படும் ''தகதிட தகதகிட தகதகிட தாதெய்'' எனும் கண்ட நடைக்கேற்ப வைரமுத்து நடக்கும் நடை மிகவும் அற்புதமானது. இதனைத் தொடர்ந்து;

**''கொட்டியிது கொட்டியிது தொக்கிலே விடுவனோ**
**கேட்டு மவளறிய விலையோ**
**கெறுவம தடக்கியவள் உறுதிநிலை குலையவும்**
**கேடுவினை செய்குவித்தே**
**பொட்டெனச் சிறையதனில் இட்டவள் கலங்கிடப்**
**புவியுளோர் மிக நகைக்கப்**
**பூதனுயிர் மாளவும் சேதமது பண்ணுவேன்**
**புங்கவன் தன்னாணையே**
**திட்டமொடு முத்திரை யெடுத்துமது மார்பினில்**
**சேரவே தானணிந்து**
**சென்றிடுந் தீவிரங் கன்றிடாது மனம்**
**திண்ணமிது திண்ணமிதுவே''**

எனும் முடுகுநடையிலமைந்த இவ்விருத்தத்தைப் பாடுவார். அடுத்துப் பாடப்படும்,

**''என்னவசை பேசிவிட்டாளோ - அவள்**
**ஏதுவசை பேசிவிட்டாளோ''**

எனும் சிந்துபைரவியிலமைந்த பாடலும் ரௌத்திர ரஸத்தை மேலும் வலிமைப்படுத்தக் காணலாம். *

*(தொடரும்)*

# இலண்டனில் நடைபெற்ற
# ஈழத்து நூற் கண்காட்சியும் இலக்கிய விழாவும்


கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி (10-11-2007) இலண்டனில் ஈழத்து நூல்களின் கண்காட்சியும் இலக்கிய விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆண்டுதோறும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளரான முல்லை அமுதன் தனது சொந்த முயற்சியில் இக் கண்காட்சியைக் கடந்த 2002ஆம் ஆண்டு முதலாக இலண்டனில் நடத்தி வருகின்றார். இது இவரது எட்டாவது நூல் கண்காட்சியாகும்.

எழுத்தாளர் முல்லை அமுதன் தன் குடும்பத்தினரின் உதவியுடன் தனி மனித முயற்சியாக இந்த ஈழத்துத் தமிழ் நூற் கண்காட்சியை ஒழுங்குசெய்திருக்கிறார் என்பது பாராட்டத்தக்கது. சுமார் 150பேர் வரையில் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இலண்டன் இல்போர்ட் நகரில் **St. Luke Church Hall** இல் நடந்த இந்த நிகழ்வினை இகதுமலைக் கவிஞர் திரு. கந்தையா இராஜமனோகரன் அவர்கள் தலைமை தாங்கி சுவாரஸ்யமாக நடத்தியிருந்தார். 1000க்கும் மேற்பட்ட ஈழத்து நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு பகுதியை முல்லை அமுதன், விற்பனைக்கும் வழங்கியிருந்தார். கண்காட்சியைப் பார்வையிட வந்தவர்கள் தாம் விரும்பிய நூல்களை அன்றே கொள்வனவு செய்துகொள்ளும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர்.

நிறைவாக, பிற்பகல் 6.30 மணியளவில் ஆரம்பமான இலக்கிய நிகழ்வு தாயகத்தில் உயிரிழந்த எம்மவர்களுக்கான மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தைச் செல்வி நிவேக்கா பூபாலசிங்கம் பாடியிருந்தார். கவிஞர் இராஜமனோகரன் தனது தலைமை உரையில் முல்லை அமுதனின் நூல் சேகரிப்பினை விதந்து கூறியிருந்ததுடன் ஈழத்துத் தமிழ் நூல்களைப் பாரிய அளவில் இலண்டனில் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியும் தெரிவித்திருந்தார். நிகழ்ச்சியின் ஆரம்பமாக செவிக்குணவாக இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன. தேர்ந்தெடுத்த திறமைமிக்க இரண்டாம் தலைமுறையின் இளம் கலைஞர்களின் மேடையேற்றங்களாகவே அவை அமைந்திருந்தன.

முதலில் திவ்வியன் உமாபதி சர்மா, பவித்திரன் உமாபதி சர்மா ஆகிய இரு சகோதரர்களின் புல்லாங்குழல் இசை இடம்பெற்று முழு அவையினரையும் சற்று நேரம் வேய்ங்குழலில் கட்டுண்டு இருக்கவைத்தது. பின்னர் வயலின் இசை தொடர்ந்தது. இதுவும் இளம் கலைஞர்களான கௌசிகன் சற்குணதாஸ், ரமிலா சற்குணதாஸ், ரேணுஷன் பூபாலசிங்கம், டிலக்ஷனா குகநேசன், அக்ஷா எஸ்தர் கனகலிங்கம், ஆகிய ஐவரின் கூட்டு முயற்சியில் அமைந்திருந்தது.

இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றிருந்தன. கவிஞர் எஸ். வேணுகோபால், கவிஞர் மு. பொன்னம்பலம், கரவைக்கனி வீரவாகு, திறனாய்வாளர் திரு. மு. நித்தியானந்தன், சட்டத்தரணியும் தமிழறிஞருமான செல்லதம்பி ஸ்ரீஸ்கந்தராஜா, இயல்விருதாளர் இ. பத்மநாப ஐயர், சுடரொளி சஞ்சிகையின் ஆசிரியர் ஐ.தி. சம்பந்தர், நூலகவியலாளர் என். செல்வராஜா ஆகியோரின் சிறப்புரைகள் இந்நிகழ்வில் முக்கிய இடத்தை வகித்திருந்தன.



அன்றைய தினம் நிகழ்த்திய பெரும்பாலான உரைகள் ஈழத் தமிழர்களின் நூல் வெளியீட்டுச் சிக்கல்களை அனுபவ பூர்வமாக வெளிப்படுத்துவனவாகவும், ஈழத் தமிழர்களுக்கான தேசிய நூலகம் ஒன்றின் தேவையை இலண்டனில் வலியுறுத்துவனவாகவுமே அமைந்திருந்தன். குறிப்பாக சட்டத்தரணி செல்லதம்பி சிறீஸ்கந்த ராஜா அவர்கள் இலண்டனில் ஈழத்து நூல்களைத் தேடிச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கக் கூடியதான ஒரு காப் பகத்தை உருவாக்கி எதிர்காலத்தில் ஈழத்துத் தேசிய நூலகத்திற்கான அத்திவாரத்தை இங்கு இட வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து பேசிய நூலகவியலாளர் என். செல்வராஜாவின் உரையும் திரு. சிறீஸ்கந்த ராஜாவின் கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது. படைப்பாளிகளையும் பணம்படைத்த புரவலர்களையும் இணைக்கும் இணைப்பாளர்கள் எம்மிடையே குறைவாக இருப்பதாலேயே எமது நூலியல் வளர்ச்சியும், அதனைப் பேணிப் பாதுகாத்து வைக்கும் முயற்சிகளும் மந்த நிலையில் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தி. சம்பந்தன் அவர்கள், புகலிட நாடொன்றில் சுடரொளி என்ற தனது சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவதில் அதை விநியோகிப்பதில் உள்ள சிக்கல்களையும் அவற்றைத்தான் எதிர்கொண்ட முறைமையையும் அனுபவபூர்வமாக அங்கு வெளியிட்டிருந்தார்.

நிகழ்ச்சியின் இறுதியில் முல்லை அமுதன் நன்றியுரையை நிகழ்த்தினார். தன் உரையின் போது, புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்நூற் கண்காட்சியில் பங்காளர்களாக வில்லாது போனாலும்கூடப் பார்வையாளர்களாகக்கூடக் கலந்துகொள்ள முன்வராதிருப்பதையிட்டு விசனம் தெரிவித்தார். *

# இலண்டனில் கோலாகலமாக அரங்கேறிய
# விமல் சொக்கநாதனின் "வானொலிக் கலை" நூல்

வானொலிக் கலை இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்துள்ளது. புலம்பெயர் தமிழர்களால் தமிழ் வானொலிச் சேவையும் உலகளாவிய ரீதியில் விரிவடைந்துள்ளது. வானொலிச் சேவையில் பல இளம் அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று பல தமிழர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ, இத்தகைய புதியவர்களுக்கும் வானொலிச் சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இவ்விழாவில் அரங்கேறிய ''வானொலிக் கலை'' நூல் ஒரு சிறந்த வழிகாட்டி நூலாகும். இந்நூலின் ஆசிரியர் தமிழ் உலகம் நன்கு அறிந்த மூத்த ஒலி பரப்பாளர் திரு. விமல் சொக்கநாதன் அவர்கள். தமது நீண்டகால வானொலி அனுபவத்தை அடிப்படையாக வைத்துத் தமிழர் சமுதாயத்திற்குக் குறிப்பாக வானொலி ஊடகவியலாளர்க்குப் பயனுள்ள நூலாக ஆக்கியுள்ளார்.

இந்நூல் ஓராண்டிற்குள் சென்னை, சிட்னி, மலேசியா, கனடா உட்பட இலண்டனில் ஐந்தாவது அரங்கேற்ற விழாவைக் கண்டுள்ளது. இந்நூலின் ஐந்தாவது அரங்கேற்ற விழா அண்மையில் இலண்டன் லூசியம் சிவன் கோயில் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஊடகவியலாளர், எழுத்தாளர், கலைஞர்கள், ஆதரவாளர்கள் உட்பட பெரும் தொகையானோர் கலந்துகொண்டனர்.

மங்களகரமான நாதஸ்வர இசையுடன் விழா ஆரம்பமாகியது. ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நூல் ஊர்வலமாக மேடைக்கு எடுத்து வந்தது ஒரு நல்ல தொடக்கமாகும். தமிழ்ப் பண்பையும் கலாச்சாரத்தையும் பேணும் ஆசிரியர் விமல் சொக்கநாதன் அவர்களுக்கு விருப்பமான ஒன்றை ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டிருந்தது பாராட்டத்தக்கது. ஓதுவார் சாமி தண்டபாணி அவர்கள் தேவாரம் ஓதினார். ஒரு தெய்வீக அலை வீசியது.

இவ்விழாவிற்கு இலங்கை வானொலி முன்னாள் அதிகாரியும் முன்னாள் யாழ் அரசாங்க அதிபருமாகிய திரு. நெவில் ஜெயவீர அவர்கள் தலைமை தாங்கினார். திரு. விமல் சொக்கநாதன் அவர்கள் இலங்கை வானொலிக்கு ஒரு அறிவிப்பாளராகச் சேரும்போது நேர்முகப் பரீட்சை நடத்தித் தெரிவு செய்த அவ் உயர் அதிகாரியே ஆசிரியர் விமலின் நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கியது சாலப் பொருத்தமானதே. விரிவான தலைமை உரையில் அன்று வானொலித் துறையில் பணியாற்றிய தமிழர்களின் திறமையையும் கடமை உணர்வையும் பாராட்டிப் பேசினார். திரு. விமல் சொக்கநாதன் அவர்களின் சகோதரி திருமதி யோகா தில்லைநாதன் அவர்களும் இலங்கை வானொலியில் பணியாற்றியதும் திரு. நெவில் ஜெயவீர காலத்தில் என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்று இலங்கை வானொலி போகும் போக்கையிட்டுத் தலைவர் தமது அதிருப்தியையும் தெரிவித்தார்.

நாடகப் பேராசான் மூத்த ஊடகவியலாளர் ஏ.சீ. தாசீசியாஸ், ஆனந்தராணி பாலேந்திரா, கௌசி ரவிசங்கர், அருணா செல்லத்துரை, யோகியம் இருதயானந்தன், மூத்த பத்திரிகையாளர் பொன் பாலசுந்தரம் ஆகியோர் ''வானொலிக் கலை'' நூலின் பல்வேறு அம்சங்களையும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தனர். அத்தோடு வானொலி ஒலிபரப்புத்துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவரும் சிறந்த எழுத்தாளருமாகிய விமல் சொக்கநாதன் பற்றியும் அவரது அனுபவம் பற்றியும் இத்துறையில் பணியாற்றியவர்கள் மிகச் சுவைபட எடுத்துக் கூறினார்கள். அத்தகையவர்கள் எடுத்துக் கூறும்போதுதான் ஒருவிடத்திலே மறைந்திருந்த திறமைகள் வெளிவரும் என்பதை அப் பேச்சாளர்கள் நிருபித்தனர். நூலின் முதற் பிரதியை வெஸ்டர்ன் நகை மாளிகை மற்றும் சில்க் எம்போரியம் உரிமையாளர் திரு. வே. சிவசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

சிறந்த வானொலி அறிவிப்பாளர் என்று இன்று பாராட்டப்படும் ஐ.பி.சி. வானொலியின் எஸ்.கே. ராஜனின் நிகழ்ச்சித் தொகுப்பு வானொலிக் கலை நூலுக்கு மிகப்பொருத்தமாக அமைந்துவிட்டது. அதேபோன்று நூலின் அட்டைப்படத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர் லவீனா சுதேந்திரன் நன்றியுரை வழங்கினார். இராப் போசன விருந்துடன் விழா நிறைவு பெற்றது. *வண்ணப் படங்கள் பக்கம் 26இல் பார்க்க* ✱

## பிரவாகமாய் ஒளிர்ந்த
## பிரமானந்தா..!

**இங்கிலாந்தின் கலைக்கூடங்களில்**
**இசையைப் பிரசவித்து**
**நாதப் பிரவாகமாய் ஒளிர்ந்த**
**நாகேஸ்வரி பிரமானந்தா!**
**ஆறடி நீளம் இரண்டடி அகலம்**
**என ஒரு வெளியில்...**
**அந்த வெளியை உடைத்துவரும் காற்றாகித்**
**துயர இழைகளில் ஆடிக்கொண்டிருக்கிறீர்கள் அம்மா!**
**உங்கள் இசையின் புன்னகை மட்டும்**
**தனித்து நின்று**
**தெறித்தும் முறிந்தும் சிதறிப்பரவுகிறது...**
**தனித்துவமான கலைச்செல்வமே! எம்**
**விழிகள் வடிக்கும் கண்ணீர்**
**உங்கள் பாதங்களுக்குக் காணிக்கை!**

# மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின்
# தமிழக-புதுவை இலக்கியச் சுற்றுலா

மலேசியத் தமிழ் இலக்கியத்தைத் தமிழகத்திலும், புதுவையிலும் அறிமுகப்படுத்தும் இலட்சியத்தோடு 34 எழுத்தாளர்கள் 19 நாள் இலக்கியச் சுற்றுலாவைத் தமிழகத்திலும் புதுவையிலும் மேற் கொண்டு வரலாறு படைத்தனர்.

இங்கே கால் ஊன்றிய மண்ணில் தமிழை வேரூன்ற வைத்துப் பிழைக்க வந்த பூமியில் தமிழையும் தழைக்கச் செய்திட்ட மலேசியத் தமிழர்களின் இலக்கியத்தை, தமிழர்களின் இலக்கியத்தை, அந்த இலக்கியத்தினூடே இழைந்தோடும் வாழ்க்கையை, அதனை வார்த்தெடுத்த இலக்கியவாதிகளைத் தாய்த் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி, ஓர் இலக்கியப் பண்டமாற்றம் நிகழ்த்திட வேண்டும் என்கிற நீங்காத விழைவாக விளைந்தது இந்த இலக்கியச் சுற்றுலா.

**வேர்களை நோக்கி விழுதுகளின் பயணம்**

தமிழ் நாட்டுப் படைப்புகளை மலேசியர்கள் அறிந்து வைத்திருப்பது போலத் தமிழக இலக்கியம் மீது மலேசியர்களுக்கு இருக்கும் தேடலைப்போலத் தமிழக மக்கள் மத்தியில்... மலேசியப் படைப்பு - படைப்பாளி மீது கவன ஈர்ப்பை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு தொடங்கி இந்த வித்தியாசமான பயணம்.

28-11-2007 அன்று வரலாறு படைத்த மலேசியத் தமிழ் இலக்கியக் குடும்பம், சென்னை விமான நிலையத்தில் வந்து சேர்ந்தபோது, 'தமிழக அரசு உங்களை வரவேற்கிறது' என்று மலர் மாலை, பூங் கொத்து, பொன்னாடை என இசை முழக்கத்துடன் வரவேற்றனர், செய்தி மக்கள் தொடர்புத் துறை தலைமை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், கவிப்பேரரசு வைரமுத்துவின் புதல்வன் கபிலன், பேராயர் ஜேம்ஸ் சந்தோஷம் மற்றும் செய்தியாளர்கள், தமிழக நண்பர்கள்.

தமிழக அரசின் விருந்தினர்களாகவும், மலேசியத் தமிழ் இலக்கியத்தை முறையாக அறிமுகம் செய்ய, குறிப்பாக, பல்கலைக் கழக ஆய்வாளர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் அறிமுகப்படுத்த பல தளங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

புதுவைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், தஞ்சைப் பல்கலைக் கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், பொள்ளாச்சி நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பல இடங்களில் கருத்தரங்குகள், இலக்கியச் சொற்பொழிவுகள், மலேசியத் தமிழ் எழுத்துலக வலைத்தள அறிமுகம், கலந்துரையாடல்கள், மலேசிய நூல் கண்காட்சிகள் நடந்தேறின. பல இலக்கியவாதிகள், நாவலாசிரியர்கள், கவிஞர்கள் சந்திப்புகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுச் சிறப்பாக நடந்தன.

உலகத் தமிழர் மையத்தின் சார்பில், பொதுச் செயலாளர் திருவாளர் இரா. மதிவாணன், துணைச் செயலாளர் நெல்லை இராமச்சந்திரன் இலக்கியக் குழுவினர் அனைவருக்கும் வரவேற்பு இதழ் வழங்கிச் சிறப்பித்தனர்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் மு. கருணாநிதியின் சந்திப்பும், பொள்ளாச்சி, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் 'ஆதி குமணன் அறக்கட்டளை' தோற்றுவிக்கப்பட்டதும் வரலாற்றுச் சுவடுகள்.

கண்டோம்-உண்டோம்-மகிழ்ந்தோம்-திரும்பினோம் என்றில்லாமல் எதிர்கால விளைச்சலுக்கும், மலேசியத் தமிழ் இலக்கியப் பரவலாக்கத்துக்கும் இந்தப் பயணம் வித்திட்டது என்று இந்த இலக்கியச் சுற்றுலா வுக்குத் தலைமையேற்று வழி நடத்திய, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. பெ, இராசேந்திரன் கூறினார்.. இவருக்குத் துணையாக டாக்டர் ரெ. கார்த்தி கேசு, டாக்டர் வெ. சபாபதி மற்றும் திருமதி கிருஷ்ணா' ராஜ்மோகன் இணைந்து செயல் பட்டார்கள்.

28-11-2007 முதல் 13-12-2007 வரை நீடித்த இப்பயணத்தில் இந்த இலக்கிய விழுதுகள் வேர்களுடன் பின்னிக் கொண்டன என்பதில் சந்தேக மில்லை. *வண்ணப் படங்கள் பக்கம் 27இல் பார்க்க* ★

**சீசெல்சு**

## ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலய குடமுழுக்கு விழா

சிவசின்னங்களில் ஒன்றான திருவோடு காய்க்கும் மரங்களைக் கொண்டுள்ள சிசெல்சு நாட்டின் ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத்தின் குடமுழுக்கு விழா சிசெல்சு இந்துகோவில் சங்க ஏற்பாட்டில் 20-1-08 அன்று நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| 15-1-08 | நவக்கிரக ஹோமங்கள் |
| 16-1-08 | அங்குராப் பணம், அஷ்டபந்தன மருந்து சாத்துதல் |
| 17-1-08 | திசா ஹோமம், சாந்தி ஹோமம் |
| 18-1-08 | ரக்ஷா பந்தனம், கும்பாலங்காரம் |
| 19-1-08 | யாக பூஜை, பூர்ணாஹுதி, விசேஷ சாந்தி அஷ்டபந்தனம் |
| 20-1-08 | காலை 5.30 முதல் இரவு 9.00 வரை - குடமுழுக்கு தொடர்பான பல்வேறு சடங்குகள் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டாலபிஷேக பூஜை நடைபெறும். |

ஆன்மிக அன்பர்கள் வருக! அருளாசி பெறுக!

சீசெல்சு இந்து கோவில் சங்கம்

நூல் நயவுரை

# பேராசிரியர் க.இந்திரபாலாவின்

# THE EVOLUTION OF AN ETHNIC IDENTITY

## The Tamils of Sri Lanka C 300 BCE to 1200 CE

பராசக்தி சுந்தரலிங்கம், ஆஸ்திரேலியா

வரலாற்றாசிரியர் ஒருவர் ஒரு நாட்டின் தற்கால வரலாற்றை எழுதுவதற்கும் அதன் புராதன கால வரலாற்றை எழுதுவதற்கும் அதிக வேறுபாடு உள்ளது. அச்சுயந்திரம், தொழில்நுட்பப் பயன்பாட்டினால் வரலாறு, மற்றும் செய்திகள், இன்று முறையாக ஆவணப்படுத்தப் படுகின்றன. ஆனால், ஏட்டுச் சுவடிகளையும் புராணக் கதைகளையும் செவிவழிச் செய்திகளையும் ஓரளவு கிடைத்த சாசனங்களையுமே ஆராய்ந்து பூர்வீக வரலாற்றை எழுதியவர்கள் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

இன்றைய நவீன உலகில் அகழ்வாராய்ச்சி, சாசனவியல், ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக, புராதன வரலாறு பற்றிய புதிய கண்டு பிடிப்புகள், விஞ்ஞான நோக்கில் ஆராயப்படுகின்றன. ஏற்கெனவே எழுதப்பட்ட சரித்திரத்திற்கு ஆதரவாக அல்லது முரணாகப் பல செய்திகள் புதியனவாக வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் பிற்கூறில், இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் நடைபெற்ற (இன்றும் தொடரும்) அகழ்வாராய்ச்சியின் பயனாகவும், சாசனவியல் பற்றிய புதிய அணுகுமுறையினாலும், வரலாறு பற்றிய பார்வையும் மாற்றமடைந்து வருகிறது. இந்த வகையில், பேராசிரியர் இந்திரபாலா, கி.மு. 300 ஆம் ஆண்டு முதல் கி.பி. 1200 வரையிலான, இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றைப் புதிய பல வரலாற்றுச் சான்றுகளுடன், The Evolution of an Ethnic Identity - The Tamils in Sri Lanka - C 300 BCE to 1200 CE என்னும், தமது புதிய நூலிலே ஆராய்கிறார்.

1965ஆம் ஆண்டிலே, இவ்வாசிரியர் இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றை ஆராய்ந்து எழுதிய பின்னர்க் கடந்த நாற்பது ஆண்டுக்கால ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த பல புதிய தரவு களை வைத்துத் தனது முந்திய முடிவுகள் பலவற்றை மீளாய்வு செய்கிறார். புராதன காலம் முதல் கி.பி. 1200 வரை இலங்கையில் தமிழ் மக்கள் எப்படி ஒரு தனி இனமாக வளர்ச்சியடைந்தனர் என்பதை விளக்கும் ஆசிரியர், அக்காலப் பகுதியில், தமிழ் சிங்கள மக்களின் வரலாறு ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி இணைந்து காணப்படுவதால், சிங்கள மக்களும் எப்படி ஒரு தனி இனமாக வளர்ச்சியடைந்தனர் என்பதையும் விளக்குவது தவிர்க்க முடியாததாகிறது.

இலங்கையின் பூர்விகக் குடிகள் தமிழ் மக்களா அல்லது சிங்கள மக்களா என்ற கேள்வி எழுந்துள்ள நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் வந்துள்ள இந்த ஆராய்ச்சி நூல் பல சரித்திர உண்மைகளை விளக்குவதன் மூலம் தமிழ் சிங்கள மக்களின் வரலாற்றை விளங்கிக் கொள்ள ஆதாரமாகிறது.

இங்குக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் ஒரு சில கவிதை வரிகள் பொருந்தி வருவதைக் காணலாம்.

'பார்க்க மறுக்கிறாய்  
நான் நிற்கவா? போகவா?  
போவெனச் சொல்லின்  
என் முதுசக்காணியின்  
பிள்ளைப்பங்கைத் தா  
போய் விடுகிறேன்.'

## எது பொங்கல்?

### கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஏடெடுத்த கவிஞருக்கோ 'கற்பனை'யே பொங்கல்!  
இசையெடுத்த குயிலுக்கோ 'இளவேனில்' பொங்கல்!  
பாடெடுக்கும் உழவனுக்கோ 'பயிர்ச்சிரிப்'பே பொங்கல்!  
பசியெடுக்கும் வறிஞனுக்கோ 'சிறுகவளம்' பொங்கல்!  
நாடெடுத்த சோழனுக்கோ 'புகழ்ப்பரணி' பொங்கல்!  
நரம்பெடுத்த 'யாழோசை' செவியருந்தும் பொங்கல்!  
காடெடுக்கும் 'அருவி'யெலாம் ஓவியனின் பொங்கல்!  
கண்ணெடுக்கும் காதலுக்கோ 'கனவுக'ளே பொங்கல்!

'செங்கதி'ரின் ஊர்வலந்தான் தாமரைக்குப் பொங்கல்!  
சீதளம்சேர் 'நிலவுவிழி' அல்லிக்கே பொங்கல்!  
'நுங்கித'ழோ அவனுக்கே அவள்வைக்கும் பொங்கல்!  
நுண்ணிடையாள் அவனுக்கோ 'குழவிமொழி' பொங்கல்!  
'தெங்கிளநீர் கோதைதரும் தெவிட்டாத பொங்கல்!  
'தேனடை'யோ ஈக்கூட்டம் ஆக்கிவைத்த பொங்கல்!  
மங்காத 'குறளமுதம்' சான்றோர்க்குப் பொங்கல்!  
மழைமேக 'அழகின்உலா' கழனிகட்குப் பொங்கல்!

வாய்ப்பந்தல் பொய்யருக்கோ 'வதந்திக'ளே பொங்கல்!  
மணிப்பேச்சு நாயகர்க்கோ 'கையொலி'தான் பொங்கல்!  
பேய் கோட்சே பாவிக்கோ 'காந்திஉயிர்' பொங்கல்!  
பேனாவின் 'தளிர்நடனம்' எழுத்தாளன் பொங்கல்!  
'சாய்மாலை' ஓய்ந்துவிழும் உடலுக்குப் பொங்கல்!  
'தடயங்கள்' வரலாற்று நூலோரின் பொங்கல்!  
'தாய்ப்பால்'தான் சேய்மழலை நால்வேளைப் பொங்கல்!  
'தமிழ்க்கவிதை' நமக்கெல்லாம் என்றென்றும் பொங்கல்!

# TAMIL DIASPORA

V. SIVASUPRAMANIAM, President, Lions Club : Seychelles

(Continued from Last issue)

SEYCHELLES a group of islands in the Indian Ocean has a history of about 230 years. A shipload of migrants landed here in 1770, composed of diverse ethnicity out of whom five were Tamils from Mauritius/Reunion. Tamil traders from Pondicherry used to visit for purposes of timber trade followed by settlements of Tamils from Tamil Nadu for trading purposes. Later, a trading community was in place here mainly of Tamils and many of them got integrated with the local community. Now there about 4000 Tamils in the trading as well as in the professions. The organization of the Seychelles Hindu Kovil Sangam in 1984 and the building of the first and only Navasakthi Vinayagar temple brought together all the Tamils to further consolidate and nurture their cultural and religious links. The annual Kavadi festival is a major event which is a government holiday for all Hindus. Cultural troupes are invited from time to time to enhance cultural values and links. The organization of the Seychelles Hindu Council, celebration of Deepavali festival on a national scale and the setting up of a crematorium with government support are events worthy of note. The Tamil Cultural Development centre conducting Tamil classes with the support of the Indian High Commission, the Seychelles Tamil Manram with its periodical publication of the Tamil Murasu and contributions and advertisements in Tamil in the national daily are factors contributing to keep the language and culture alive in this country.

SOUTH AFRICA: Tamil migration started as from 1860, first as indentured labour and in the first batch 340 Tamils were there. Now there are more than 250,000 Tamils spread over in many cities, the concentration being in Natal and Durban. The 140 years of residence has given them valuable sense of identity and solidarity and the Tamil heritage has been an inspirational and healing factor during the turbulent periods that they have undergone. Now, there is a sort of Tamil renaissance and the Tamils there take great pride in their age-old traditions. Tamil cultural organizations help a lot to recover the beauty of their language and culture. The Kavadi festival, Tamil dramas and the Hindu festivals have promoted Tamil oneness. During the period 1900 to 1949 many temples were built and the rich traditions are well nourished by Brahmin priests from Sri Lanka. Mahatma Gandhi in all his struggles for justice and fair play had his greatest inspiration from the Tamil community, so much so, that he made a special effort to study Tamil to express his gratitude to them in their mother tongue. It is appropriate to recall that a young Tamil girl of 18 – Thillaiadi Valliammai – was a pioneer in her support to Mahatma, was imprisoned and is commemorated well now in Tamil Nadu and South Africa. It is interesting to note that a young South African national was so inspired by Tamil classical music that he spent three years at the feet of popular musician Dr K.J.Jesudas at his home in India and now his recitals are an exact replica of his master and has become a globally acclaimed Tamil classical music figure.

**TAMILS IN OCEANIA**

AUSTRALIA with a population of over 18 million has about 30,000 Tamils spread out in all the six states but the concentration is mainly in the states of New South Wales and Victoria. There are more than ten Hindu temples spread over in all the states and Tamil is one of the approved subjects for the HSC examination and Tamil skill tests are conducted for children of ages five to sixteen.

NEW ZEALAND has about 3000 Tamils, mostly professionals who have migrated on their own. Attempts are being made to construct Hindu temples and consolidate their cultural and religious links.

FIJI in the Pacific Ocean had a Tamil population of over 110,000 having been taken there to work in the plantations by the colonial masters in the 1880s. Out of an Indian population of 350,000 the Tamils could number about 80,000 now. The number who could speak is about 5000 only and another 1000 could write. It is only about 6000 who declare their origins as Tamils as most of them have got well integrated with the local population. Most of them have lost their Tamil identity and are Tamils only in name. The South Indian Sanmarga Sangam is the pioneer body that forged the Tamil culture, Tamil education and the Hindu practices in the country for a long time. The worship of Lord Muruga is very popular and many Tamils still go by their Tamil names such as Pillai, Mudaliyar, Padayadchy, Samy, Naidu and Gownder.

NEW CALEDONIA and TAHITI in the Pacific Ocean has only about 20 Tamil families who are the decendents of the early Tamil settlers who went to work in the coal mines. Although they have lost their Tamil identity they are known by Tamil names such as Pavalakoddy, Rayappu, Veerasamy, Saminathan and Maria Soosai.

**TAMILS IN THE GULF**

BAHARIN is the home for over 7000 Tamils mostly professionals and workers.

QATAR is the home for about 4000 Tamils mostly from Tamil Nadu. In December 2000 the Qatar Tamil Sangam was inaugurated for conducting Tamil cultural programmes, teaching of Thirukkural and for conducting Tamil elocution contests for Tamil children.

UNITED ARAB EMIRATES (UAE): There are about 10,000 Tamils spread over in many states of the UAE having come from Tamil Nadu and Sri Lanka as professionals and workers in many sectors. There are three Hindu temples in Oman and a Lord Siva worship facility in a religious complex in Dubai. Pongal and New Year are celebrated on a grand scale in Dubai and in a few other states. Recently a Tamil newspaper "Tamilan Kural" circulates in Dubai.

SAUDI ARABIA and KUWAIT are home for a substantial number of Tamils who are recent migrants.

**TAMILS IN EUROPE**

BRITAIN has more than 300,000 Tamils out of whom about 200,000 are from Srilanka.

FRANCE has more than 60,000 Tamils from Pondichery and a substantial number of Srilankan Tamils who went there as refugees. The Tamil electronic and print media radiates

world wide from there and they are very popular. Many Hindu temples are serving the community well religiously and culturally not only in the capital but also in the suburbs.

GERMANY has well over 50,000 Tamils and more than half of them went as refugees from Sri Lanka. Religious fervour among them got intensified as their numbers swelled. Due to the inspirational encouragement of Hawaii Subramaniaswami – the disciple of Yoga Swamigal – two well organized Hindu temples – Sidhivinayagar Kovil and the Kannagi Amman Kovil – are in place in Hamm since 1984. According to the journal "Hinduism Today", the youth are being well trained in their religion and culture at home and in weekend schools in rented halls using texts from Sri Lanka. They even wear Saiva symbols of Vibuthi and Tilak.

ITALY has about 25,000 Tamils, most of whom went as refugees during the last few years.

SWITZERLAND has about 40,000 Tamils the majority of whom are from Sri Lanka who went as refugees. Although they are well entrenched in the country and integrated with the local community, yet they are actively alive to their Hindu religious and Tamil cultural links. Temples, cultural festivals, international conferences, seminars and meetings draw a large number of the Tamil diaspora from other European countries to the various Swiss cities so much so that it has become the nerve centre of Tamil cultural activism. Tamil language classes, dance and music classes run by voluntary bodies are fast increasing.

NETHERLANDS has more than 20,000 Tamils the majority of whom are refugees from Sri Lanka.

NORWAY has about 10,000 Tamils most of whom are Sri Lankan refugees. The city of Bergen is the home for about 400 Tamil families. It has become the centre for Tamil gatherings. Yogarajah Balasingam (Baskaran) is the first elected Tamil member for the city council there.

SWEDEN has a Tamil population of about 2000 and is of recent origin.

DENMARK has over 7000 Tamils the majority being refugees. There are two well patronized Hindu temples – one for Vinayagar and another for Abhirami – and the Tamil population has got well adapted to the Danish environment

**TAMILS IN AMERICAS AND THE CARIBBEAN**

USA is the home for more than 300,000 Tamils both from Tamil Nadu and Srilanka.

CANADA has a large concentration of Sri Lankan Tamils, almost 90% of the Tamil population – amounting to 300,000. Tamil is taught from primary to pre-university level and 75% of them learn the language with interest. The cultural needs of the community are catered to well by round the clock radio/television channels and by numerous Tamil publications – literary and religious. Apart from the World Tamil Organisation there are many more pro-active voluntary organizations keeping the Tamil culture alive and the numerous Hindu temples and churches satisfying the religious fervour of the diaspora community.

GUADELOPE and MARTINQUE in the French West Indies had 20,000 and 15,000 Tamils respectively. The migration was mainly sailings from Pondicherry and Karaikal during the years 1853 – 1883 and since 1893 almost all of them got well integrated with the people there. Presently a microscopic minority of 17 who are in the age range 60-70 could speak Tamil and one Albert Marimuttu is a standout.

GUYANA in South America had a large number of Tamils in their plantations since 1838. Most of the sailings were from Madras and in 1860, 2500 from Madras alone settled there. Tamils were spread in about 60 towns. Dr Cheddy Jagan former President and Shridath Ramphal former Secretary-General of the Commonwealth had their Indian origins.

TRINIDAD and TOBAGO in the Caribbean had Tamils since 1840 and there was a place called Madras settlement near the airport. They were all plantation workers. There was a Siva temple called the "Madras Sivalayam" or the Canra road temple. There was a priest from Gopichettipalayam in 1910. The Deepavali celebration by the Tamils there displayed extra ordinary pluralism but over the years they had lost their knowledge of Tamil. Yet, the Tamils over there moved from servitude to resistance and finally to freedom and were able to retain their self-dignity, preserve and enhance their culture and enrich themselves.

As much as the diaspora love their origins and roots to the lands of their birth and that of their ancestors, there is one core element; a vital bond that holds together the diaspora of Tamils spread across the globe. That is the common language – TAMIL – and its rich and inspiring manifestations. The Tamil language and the encompassing culture of enduring values have transcended national boundaries. It continues to bridge and express all thoughts in writings spanning centuries, and into the time zones.

The Tamil diaspora share a common bond that is fragile. There is an urgent need to restore the primacy in Tamil thought and culture. It is interesting that there is a proposal to launch an International Tamil Centre in the USA to create a global vision for the Tamil population and to meet all the challenges. A Tamil University and Cultural Complex is being created to serve the global community of Tamils. The idea is to foster unity, promote culture, enhance education and enrich the Tamil language. The headquarters will be located in the USA. There will be the International Tamil Centre Complex, University Complex and the Community Housing Complex. This Centre, in course of time, should evolve as an ideal centre to co-ordinate and bring together the valued aspirations of the global Tamil community for greater achievements and success.

**TAMIL MEDIA**

On a global level, apart from the Tamil print media which reaches the nook and corners of the world, the strongest bond that binds the Tamil diaspora is the electronic media that has helped to compress it into a tiny village. On this role, the immense services being rendered by the daily half an hour broadcast by the 'Tamil Osai' from the BBC; the VERITAS from Manila, Philippines; the round the clock Radio/TV by the IBC (Tamil) London; Inbathamil Vanoli from Australia and the web-sites such as tamilnation.org, tamilnet.com, tamilcanadian.com, xlweb.com/heritage/asia, tamilnaatham.com, sangam.com are worthy of mention, among many others.

The Tamil TV, film and music industry have in the past two decades found a niche market among Tamil diaspora and their marketability is said to be next only to Hindi films/music in the competitive overseas market.

*(In the preparation of this article, I am greatly indebted to www.tamilnation.org for all the valuable information obtained.)* ❋

# வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா 2008

## Federation of Tamil Sangams of Nourth America (FETNA)

## proudly presents Tamil Vizhaa-2008

இலங்கைத் தமிழ் மன்றம், புளாரிடா தென்புளோரிடா தமிழ்ச் சங்கங்கள், தம்பா தமிழ்ச் சங்கம் ஆகியோர் ஆதரவுடன் வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் 2008 ஜுலை 4-5 நாள்களில் தமிழிசைப் பேரறிஞர் பெ. தூரன் நூற்றாண்டு விழா பேரவையின் 21-ஆம் ஆண்டு விழா **தமிழ் விழா 2008** ஆகச் சிறப்பாக நடந்திட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாவில் பங்கேற்கும் அயல்நாட்டு பேரா ளர்கள் டிஸ்னிலேண்ட் பகுதியை ஜுலை 6 ஞாயிற்றுக் கிழமை பார்வையிட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழகப் பிரபலங்களான அழகி, பள்ளிக்கூடம், ஒன்பதுருபா நோட்டு பட இயக்குநர் தங்கர் பச்சான், தம்பி பட இயக்குநர் சீமான், பேரா. சுப. வீரபாண்டியன், 'அசத்தப் போவது யாரு' புகழ் ஈரோடு மகேஷ் மற்றும் திரைப்படக் கலைஞர்களும் அறிஞர்களும் இவ்விழா வில் பங்கேற்கின்றனர்.

மெல்லிசை, தமிழிசை, நடனம், நாடகம், கவி யரங்கம், பட்டிமன்றம், இலக்கிய அரங்கம், இளையோர் சந்திப்பு, தமிழ்த் தேன், தமிழர் சங்கங்களின் நிகழ்ச்சி களும் உண்டு. மேலும் தகவல்களுக்காகத் தொடர்பு கொள்க.


| | |
|---|---|
| எஸ். சுப்பிரமணியம்,<br>ஒருங்கிணைப்பாளர்<br>(954) 675 6893 | தில்லை கே. குமரன்<br>தலைவர்<br>(408) 857 0181 |
| டாக்டர் ஆர். பிரபாகரன்<br>துணைத் தலைவர்<br>(418) 420 0111. | 208, South Casalle Street,<br>Suite 814 Chicago,<br>60604, USA |


# ஒப்பற்ற திருநாள்



கவிஞர் பொன். பூங்குன்றன்

ஈப்போ பேரா மாநிலம், மலேசியா

அறுவடையில் நெல்மணியை அறுத்துச் சேர்க்கும்
அழகுதிர்க்கும் தையென்னும் சுறவத் திங்கள்!
அரும்பாடு பட்டுழைத்த உழவர் தம்மின்
அகத்தாரின் எண்ணம்ஈடேறும் காலம்!

கரும்புதரும் சுவைபோலக் கனிவு காட்டும்
கன்னியரின் பொங்கலுள்ளம் காதல் மீட்டும்!
விருப்பமுறும் பணிகளெல்லாம் விரைவு காட்டும்
விருந்துவரும் பொங்கலிங்கே விழுப்பம் கூட்டும்!

அறிவியலார் அரும்பொருள்கள் கண்ட போதும்
அகிலமெல்லாம் அறிவியலால் ஆன போதும்,
பொறியியலார் புதுமைபல செய்த போதும்
பொங்குதற்கோ நெல்மணிகள் இல்லாப் போதும்,

நெறிபிறழ்ந்தே போகுமய்யா ஞாலம்! நல்ல
நிலைதவறிப் போவார்கள் உலக மக்கள்!
அறிவாளர் நெறியாளர் அனைவ ருக்கும்
அறுவடைநாள் திருவிழாவே மகிழ்வாம் கண்டீர்!

சுடர்கின்ற உணர்வலைகள் சூழ்ந்து சிந்தை
சுட்டெரிக்கும் புன்கருத்தைத் தூள்தூ ளாக்கித்
தொடர்கின்ற புரட்சிவெள்ளம் பொங்கல் நாளில்
தொட்டணைத்தே ஊரெல்லாம் துளிர்க்கப் பாயும்!

இடரென்ப தொன்றில்லை எனும் படிக்கே
இனபமிகும் பொங்க(ல்)விழா இருண்மை போக்கும்!
படர்கின்ற புதுக்கருத்தும் பயன்மைக் கூட்டாய்ப்
பண்டுவந்த தமிழினத்தில் பதிக்கு மம்மா!

சுழன்றாலும் ஏர்ப்பின்னே சுழலும் ஞால்ம்
உழுவாரே உலகத்தார்க் காணி மற்று
உழவினார்தம் கைமடங்கின் உலகி லெங்கும்
உளவிழைவை விட்டாரும் உய்யா ரென்றே

பழந்தமிழர் நெறிகாத்துப் புகழும் நம்மின்
பைந்தமிழ்நூல் திருக்குறளும் பாரில் என்றும்,
உழவர்தம் உயிர்காக்கும் உழைப்பைச் சாற்றும்
ஒப்பற்ற திருநாளே பொங்கல் நாளாம்!

மலேசியா குவாந்தான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொழும்பு பொன்னம்பலம் வானேஸ்வரா கோயிலின் குருக்கள் தலைமையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால் குடம் ஏந்தி ஊர்வலம் சென்று விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடினர். - தரவு : இ. பரமானந்தன்





# ஆலயங்கள் வியாபார தலமாக மாறக் கூடாது

இ. பாக்கியராஜன்



'உலகில் கருணை வளர வேண்டும். இன, மதபேதமின்றி உலக மாந்தர் அனைவரும் அன்பு கொண்டவர்களாக வாழ வேண் டும், இச்செய்தியை விடுத்தார் **ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மஹ ராஜ்.** பாடல் பெற்ற தலமான திருக்கோணமலையில் உவர் மலையைத் தளமாகக் கொண்டு அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச் சபையைத் தாபித்து அதன் தலைவராக இருந்து ஆன் மிகப் பணியும் அருட் பணியும் சமய சமூகப் பணியும் ஆற்றிவருபவர் அவர். பசு வதைக்கு எதிராக அவர் சொல்லிலும் செயலிலும் பாரிய பிரசாரப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இந்து மதத்தில் இணைந்து இமயம் வரை சென்று சமஸ்கிருதம் மற்றும் வேத சாஸ்திரங் களைக் கற்று இந்து மதத்தவனுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகின்றார். சுனாமி நிவாரணப் பணிகளுக் காக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவரை நேர் காணும் பாக்கியம் கிடைத்தது.

**கேள்வி : எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாடு பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில் : இந்துக்களில் சிலர் மட்டுமே எம்மதமும் சம்மதம் என்று கூறுகின்றனர். ஏனைய மதத்தவர்கள் அவ்வாறு கூறவில்லை. இதற்கு மதமாற்றம் ஒரு முக்கிய காரணமாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார் திருமூலர். அந்த அடிப்படையில் சீவிக்கிறோம். அனைவரது இதயத்திலும் இனப் பேதம் இன்றி இறைவனைக் காண்கின்றோம். சகல நதிகளும் கடலில் சென்று சேருவதைப் போலப் பல ஆன்மிகப் பாதை களும் இறைவனையே சேரும் என்று இருக்குவேத காலத்தில் ரிஷிகள் கூறியுள்ளனர். தற்போது தவறுதலாக இந்துக்கள் சிலர் எம்மதமும் சம்மதம் என்கின்றன... ஏனெனில் எம்மதம் என்று குறிப்பிடுவது இந்து மதத் திலுள்ள ஏனைய மதங்களையேயாகும். குறிப்பாக மறு பிறப்புத் தத்துவம் உண்மையாக அல்லது பொய்யாக இருக்கலாம். ஒரே பிறப்பு தத்துவம் உண்மையாக அல்லது பொய்யாக இருக்கலாம். ஆனால் இரண்டு தத்துவமும் உண்மையாக இருக்க முடியாது. அன்பே சிவம் என்ற அடிப்படையில் வாழும் போது நமது மதம் மேலானது என்று சொன்னால் தவறு இல்லை.

**கேள்வி : இந்து மதத்தின் சிறப்பு அம்சம் என்ன?**

பதில் : இதில் மறுபிறப்புத் தத்துவம் உண்டு. அதாவது மனிதனின் தன்மை தெய்வீகம். பல ஜென்மங் களின் பின் சகல ஜீவராசிகளும் முக்தியடைவார்கள். மாயையின் காரணமாக நாம் மனிதர்கள் எனக் கனவு காண்கின்றோம். பல ஜென்மங்களில் பக்தியோகம், கர்ம யோகம், ராஜயோகம் செய்தால் தெய்வீகத் தன்மையை மீண்டும் உணரலாம். ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு நிலையான தண்டனை வழங்க மாட்டார். இறைவனும் ஜீவன்களை இவ்வாறே தண்டிக்க மாட்டார். தாய் தந்தையர் தம் பிள்ளைகளைத் தண்டிப்பதும் அரவ ணைப்பதும் போல் கர்ம வினை பற்றி ஜீவனை இறைவன் தண்டிப்பதும் மன்னிப்பதும் இயற்கையாகும். இந்து மதத்தில் நிலையான நரகம் கிடையாது. தென்னாட்டில் சமய குரவர் நால்வர், மகாராஷ்டிராவில் ஞானேஸ்வரர் துக்காராம் ராம்தாஸ் ஆகிய 83 முனிவர்கள், வட நாட்டில் சைதன்யர் பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள். மதமாற்றத்தைத் தடுத்தார்கள்.

**கேள்வி : இந்து மதத்தில் பல தெய்வங்கள் உண்டு. இதன் விளக்கம் என்ன?**

பதில் : ஆதிசங்கரர் இஷ்ட தெய்வ தத்துவத் தைத் தாபித்ததுடன் அத்வைத வேதத்தையும் பிரசாரம் செய்தார். சிலர் சிவனையும் சிலர் விஷ்ணுவையும் சிலர் கணபதியையும் வழிபடுகின்றனர். ஒருவர் சாரனையும் வேட்டியையும் காற்சட்டையையும் அணிகிறார். ஆனால் ஒரே நபர்தான். இதே போன்று இந்து மதத்திலும் ஒரே கடவுள்தான். இதனை நிர்குண பிரம்மம் என்பர். அதிலிருந்து சகுண பிரம்மம் ஏற்படுகிறது. கீதையிலே கண்ணன் அருச்சுனனுக்கு உபதேசிக்கும் போதும் விஸ்வ ரூபத்தைக் காட்டும் போதும் எல்லாம் நான்தான் என்று கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லாம் சிவன் என்றே திருமந்திரத் திலே திருமூலர் சொல்லியிருக்கிறார். கிறிஸ்தவ மதத்தில் இயேசு, மேரி போன்ற வழிபாடுகள் இருப்பது போல இந்து மதத்திலும் கடவுளர் பலர் பல பெயர்களால் வழிபடப்படுகின்றனர். எனவே இந்துக்கள் ஏனைய மத வழிபாடுகளை மதிக்க வேண்டும். ஏனைய மதத்தினரும் இந்துக்களை அன்புடன் மதிக்க வேண்டும்.

**கேள்வி : இந்து மத வேதங்கள் திருமுறைகளைப் படித்துள்ளீர்களா? அவற்றிலுள்ள விசேடம் என்ன?**

பதில் ஆம் நான்கு வேதங்களில் இருந்து வந்த இந்து மதத்தின் ஞான சாஸ்திரம் - அதாவது உப நிடதங்கள் யோக தத்துவங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து படித்துள்ளேன். காலப்போக்கில் இப்பொக்கி சங்களிலிருந்து தமிழ் வேதம் (12 திருமுறைகள்) உண் டாக்கப்பட்டன. இந்துக்களில் சிலர் தேவாரம், திருவாச கம் தெரியாமலிருப்பது பற்றி ஆச்சரியப்படுகிறேன். இந்து மதம் ஒரு மகா சமுத்திரம் போன்றது. ஏனைய மதங்களைப் போன்று ஒரே ஒரு புனித நூல் மட்டு மில்லை. இந்துக்கள் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். பக்தியுடையவர்களாக இருப்பதுடன் இந்து மதத்தின் மகிமை பற்றியும் தத்துவங்கள் பற்றியும்

தெரிந்திருத்தல் வேண்டும். இந்து மதத்தின் மீது பற்றும் பாசமும் மிக்கவர்களாதல் வேண்டும். நான் இந்து என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். இதனை நாம் சிந்திக்க வேண்டும். திருவாசகத்தில்

**வெண்ணீறணிவித்துத் தூய**
**நெறியே சேரும் வண்ணம்**

என்று மணிவாசகர் பாடியுள்ளதுதான் எமது பாதை.

**கேள்வி : மதமாற்றச் சட்டம் பற்றி உங்கள் கருத்து யாது?**

பதில் : இது ஒரு அவசியமற்ற சட்டமாகும். ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றலாம். இந்து மதத்தை அடிமட்டத்திலிருந்து பலப்படுத்துவோம். அவ்வாறு பலப்படுத்தினால் மத மாற்றத் தடைச் சட்டம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. எம்மதமும் சம்மதம் என்ற போலிக் கொள்கை நிறுத்தப் பட வேண்டும். தேவஸ்தானங்கள், ஆலயங்கள், நிறு வனங்கள் யாவும் இந்து மதத்தின் பேரால் சேவை செய்ய வேண்டும். ஆலயங்கள் வியாபார தலமாக மாறக் கூடாது. அறநெறிப் பாடசாலைகள் சீராக இயங்க வேண்டும். அருச்சனையைத் தவிர்த்து பூசை அபிசேகம் என்பவற்றைக் குறித்த நேரத்துக்குச் செய்து பணம் படைத்தவர்களுக்கு விசேட பூசைகளுக்கு வழி வகுக் காமல் யாரும் தரிசிக்க இடமளிக்கப்பட வேண்டும். பொறியியல் பட்டம் பெற்ற ஒருவனைப் போலி பொறி யியலாளர் ஏமாற்ற முடியாது. அதேபோன்று இந்து மதம் பற்றி நன்கு அறியாதவர்கள்தாம் மத மாற்றத்துக்கு உட்படுவார்கள். எனவே இந்துக்கள் சரியான முறையில் இந்து மதத்தைப் பின்பற்றினால் மதம் மாற்றப் பிரச்சினை இருக்காது.

**கேள்வி : மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பதில் : தருமத்தின் அடிப்படையில் நாம் வாழ வேண்டும். அன்பு, நேர்மை போன்ற சாத்வீக குணங்களைக் கொண்ட வாழ்க்கை இன்றியமையாதது. வெறும் யாகங்கள், பூசைகளால் நற்பலனைப் பெற முடியாது. ஸ்ரீமத் பாகவத புராணம் இது பற்றி எடுத்துக் கூறுகின்றது. நிஷ்காமிய அதாவது பலனை எதிர்பாராமல் வழிபட வேண்டும். காலையில் மௌன தியானம் செய்தல் அவசியமாகும். பக்தியும் ஒழுக்கமும் இல்லை என்றால் மனநிம்மதி ஏற்படாது. ஏழைகளுக்கும் இல்லாதோருக்கும் உதவ வேண்டும். ✱

## மதுரையில் 4ஆவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாடு 2008

எதிர்வரும் 2008 மார்ச்சு திங்கள் 21, 22, 23 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் இம்மாநாடு மதுரையில் நடைபெறவுள்ளது. அனைத்துலக சைவசித்தாந்த அறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்களை ஒன்றி ணைக்கும் இம்மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதினம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.

சைவ சமயத் திருமுறைகளில் சாத்திரங்களில் தத்துவங்களில் சிறந்த உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர் களும் பேராசிரியர்களும் சான்றோர்களும் கலந்து கொள்ளவும் சைவ சமய ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிச் சிறப்பிக்கவும் விழா ஏற்பாட்டாளர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இம்மாநாட்டில் இந்தியாவிலுள்ள பல சைவ அமைப்புகளும், இலண்டன் பிரித்தானிய சைவத் திருக் கோயில்கள் ஒன்றியம், மலேசியா ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானம், அகில இலங்கை இந்துமா மன்றம், கனடா இந்து கலாச்சார மன்றம் மற்றும் பல சமய ஸ்தாபனங்களும், மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்தி ரேலியா, மோரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலுள்ள சைவ நிறுவனங்களும் பங்கேற்க உள்ளன.

இம்மாநாட்டில் சைவாதீனங்களின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள், உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சர் கள், சிவாச்சாரியர்கள், பல்கலைப் பேராசிரியர்கள், சைவ சமய அறிஞர்கள், ஆலய அறங்காவலர்கள், ஆலய நிருவாகிகள், பலரும் சமய ஆர்வலர்களும் கலந்துகொள்ள உள்ளனர். மகா நாட்டிற்கான சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது.

''வேத, ஆகம, புராண, இதிகாச, சங்க இலக்கிய, திருமுறை, சித்தாந்த சாஸ்திர இலக்கியங்களில் சைவ சித்தாந்தச் செம்பொருள்கள்'' ஆகிய விடயங்கள் பற்றிய கருத்தரங்க ஆய்வும் நடைபெறவுள்ளன.

சகல தொடர்புகளுக்கும் தலைமை அலுவலகத்துடனும் பிராந்திய அலுவலகங்களுடனும் தொடர்பு கொள்ளலாம். மகாநாட்டில் பேராளராகவும் கட்டுரை சமர்ப்பிப்பவர்களும் கட்டணம் செலுத்தி முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

தொடர்புகளுக்கு :

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம், மயிலாடு துறை 609 001.

**K. RAJAPATTER**
Thiruppuramkuntram Devasthanam, Thiruppuramkuntram,
Madurai. Cell : 091-98421 93244

# மறைந்து போன வன்னி மாநகரங்கள்

அ. மயூரன், இலண்டன்

## வாவெட்டி மலை

''வன்னி நாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர் சோலை நாடு
காரளர் வாழும் கன்னியர் நாடு''

என்ற நாட்டார் பாடல் ஒன்றின் கூற்றுக்கிணங்க வான் தொடும் வலிய வண்மைக் காடுகளிடையே அமைந்திருக்கும் அடங்காப்பற்று வன்னியின் பகுதிகளில் ஒன்றான மேற்பற்று வடக்கிலே அமைந்திருக்கும் வாவெட்டி மலை பல ஆய்வாளர்களின் கண்களை மறைத்திருப்பது வியப்புக்குரியது. இவ் வாவெட்டி மலையானது வெறும் புவியியல் அமைவிடமாக மட்டுமல்லாது வரலாற்று ரீதியாகவும் அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

பாலை, முதிரை, வீரை ஆகிய வன்மரங்களும் கொண்டல், இலந்தை போன்ற மென்மரங்களும் காற்றலைகளில் அசைந்து மங்களம் ஒலிக்க, வண்டுகள் ரீங்காரம் செய்ய, பறவைகள் ஒலி எழுப்பப் பல வன்னி மன்னர்கள் இராசதானி அமைத்து அரசாட்சி புரிந்த இறுமாப்புடன் பணியாத மலையாக நிற்கின்றது வாவெட்டி மலை. இந்த வாவெட்டி மலையின் அமைவிடத்தை நோக்கும்போது மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் மணவாளன் பட்டமுறிப்பு என்ற ஓர் இடம் உண்டு. அந்த மணவாளன் பட்டமுறிப்புக்கும் ஒட்டுசுட்டானுக்குமிடையில் மாங்குளத்திலிருந்து ஒன்பதாம் கட்டையில் சரித்திரப் புகழ் பெற்ற வெடுக்கு நாறி மலையிலிருந்து ஊற்றெடுத்து முத்தையன் கட்டு நீரேந்துப் பகுதிக்குச் செல்லும் பேராறானது ஊடறுத்துச் செல்லுகின்றது. இந்த 9 ஆம் கட்டைக்கு அண்மையில் இருந்து தெற்கு நோக்கிச் சிறு நடைபாதை செல்லுகின்றது. அவ்வழியே ஐந்து அல்லது ஆறு மைல்கள் சென்றால் கிட்டத்தட்ட 200 அடிகளிற்கும் மேற்பட்ட உயரம் கொண்ட வாவெட்டி என்னும் கருங்கல் மலையை அடையலாம்.

இந்த வாவெட்டி மலையில் கோயில் கட்டடச் சிதைபாடுகளும் ஒரு பெரிய இராசதானியின் சிதைபாடுகளும் பெரிய குகையும் காணப்படுகின்றன. இதில் அம்மன் மற்றும் சிவன் கோயில்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இதற்கு ''வாவெட்டி மாமரம் தானரசு-மாணிக்கப்பண்டாரம் பூசை செய்து'' என்னும் பாடலடியும் சான்றாகின்றது. அத்துடன் இவ் வாவெட்டி மலையின் சுற்றுப்புறச் சூழலை நோக்கும்போது இம் மலையிலிருந்து பண்டார வன்னியன் கதையுடன் தொடர்புடைய குருவிச்சியாறானது ஊற்றெடுத்துப் பாய்கின்றது. மேலும் இதற்கண்மையில் வாவெட்டிக் குளம் அழிவடைந்த நிலையில் இன்றும் காணப்படுவதோடு மேலும் சில குளங்களையும் காணலாம். இவை கிட்டத்தட்ட ஆயிரம் முதல் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களது கருத்து. இங்கு ஓங்கி வளர்ந்திருக்கும் காடுகளும் கிட்டத்தட்ட இவ்வயதை ஒத்ததே. பேராறும் இதற்கு அருகாகவே பாய்ந்து சென்று இம்மலைப் பிரதேசத்திற்கு வளம் சேர்க்கின்றது. 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் இம்மலைப்பகுதியூடாகவே இரகசிய நகர்வை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இம்மலையில் காணப்படும் குகையானது கிட்டத்தட்ட மூன்றடி அகலமும் நான்கடி உயரமும் உடைய வாசலைக் கொண்டுள்ளதோடு முடிவிலியான நீளத்தையும் கொண்டுள்ளது சிறப்பம்சமாகும். இந்தக் குகையினுள் நீண்ட தடி ஒன்றினை உட்செலுத்தினால் மீண்டும் மீள இழுக்க முடியாது. ஆனால் மறுநாள் காலையில் அந்தத் தடி தானாகவே வெளியே வந்திருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கும், இதற்கு அக்குகையினுள் கரடி இருப்பதாகவும் நாம் தடியை உட்செலுத்தும் போது அதைப் பிடித்துவிட்டு மறுநாட் காலை அக்கரடி வெளியே வரும்போது அத்தடியை வெளியே வீசிவிடுவதாக அங்கு வேட்டைக்குச் செல்வோர் தெரிவித்தனர். இது சாத்தியமானது. ஏனெனில் இது மக்கள் நடமாட்டமற்ற அடர்ந்த காட்டுப்பகுதி என்பதாலும் இம்மலைக்கு இரண்டு மைல் தொலைவில்தான் கரடிக்குழி என்னும் காரணப்பெயர் கொண்ட இடம் இருப்பதாலும் இது சாத்தியமானது. இதைச் சிலர் அங்குப் பூதம் இருக்கின்றது. அதனால்தான் அத்தடி மீள இழுக்க முடியாதுள்ளதாகக் கூறுகின்றனர். இது ஏற்க முடியாததாகும். இந்தக் குகை இருள் சூழ்ந்திருப்பதனால் இப்பிரதேசத்தை ஆராய்வதற்குப் போதிய சாதனங்கள் இல்லாமையே காரணமாகும். இருந்தாலும் இப்பிரதேசம் ஆய்வுகளுக்கு உட்படாமை வருந்தத்தக்கதாகும்.

மேலும் வாவெட்டி மலையானது புவியியல் காரணிகளால் மட்டுமல்ல வரலாற்றுக் காலங்களில்கூடச் சிறப்புற்றிருந்ததைக் காணலாம். முதற்சங்கிலியன் காலத்தில் (கி.பி. 1519-61) அவனுடைய அவைக்களப் புலவனாக விளங்கிய வையாபுரி ஐயரால் பாடப்பட்டதெனக் கூறப்படும் வையாபாடலில் 17, 96 மற்றும் 97 ஆம் பாடல்கள் வாவெட்டி மலை பற்றிக் கூறுகின்றன. அவை ''மாநகர் வாவெட்டி மலை'' எனக்கூறுகின்றன.

அத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்ன னான உக்கிர சிங்கன் சோழ இளவரசியான மாருதபுர வீக வல்லியை மணந்து வாவெட்டி மலையில் இராச தானி அமைத்து ஆட்சிபுரிந்தான் என்பதனை வரலாறு கள் வாயிலாக அறிகின்றோம். உக்கிரசேனன் புதிய தலைநகர் ஒன்றை வன்னிப்பிரதேசத்தில் உருவாக்கும் நோக்கில் வன்னி வந்தபோது வன்னி மன்னர்கள் ஏழு பேரும் எதிர்கொண்டு வன்னி நாடுகளைத் திறை கொடுத்து ஆள வேண்டும் எனக் கேட்க உக்கிரசேனன் சம்மதித்து உருவாக்கிக் கொண்ட தலைநகரே பூநகரி சிங்கநகராகும் என்கிறது வரலாறு. இதைச் சேகராசசேகர மாலை சேகராசசேகரம், தட்சிணைகைலாய மாலை என்பன சான்று பகர்கின்றன. ஆகவே அவன் இதன்போது வாவெட்டி மலையில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்தான் என்பது ஏற்புடையதாகும். இதற்கு வையா பாடலானது தனது 17ஆவது பாடலில் பின்வருமாறு கூறுகின்றது.

“பொன்னகர் திகழும் கதிரையாம் பதியில்
போய் அரன் மகவினை வணங்கிப் பின்னர்
உக்கிர சேனன்றன் பெண்ணொன
இருந்தனன் அதன் பின் மன்னவன்
அடங்காப்பற்றினிலேகி மாநகர்
வாவெட்டி மலையில் தன்னிகரற்ற மண்டபம்
இயற்றித் தன்னரசியற்றினன் இருந்தான்”

(வையாபாடல் 17)

உக்கிர சிங்கன் மட்டுமல்ல, இன்னும் பல மன்னர் களின் ஆட்சிப்பீடமாக வாவெட்டி மலை திகழ்ந்திருக் கின்றது எனலாம். யாழ்ப்பாணத்தை இரண்டு சங்கிலிய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களில் முதலாவது சங்கிலிய மன்னன் முதலில் வாவெட்டி மலையிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆட்சிபுரிந்தான் என அறிகின்றோம். சிங்கைப் பரராசசேகரனின் கடைசி மகனான சங்கிலி மன்னன் வாவெட்டியில் ஆட்சிசெய்து கொண்டிருந்தவேளையில் யாழ்ப்பாணத்தை ஆண்ட தன் அண்ணனான பரநிருபசிங்கன் தென்னிலங்கை அரசர்களின் கொடுங்கோலகற்ற கண்டி சென்றான். அந்த வேளையில் சடுதியாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி கி.பி. 1519 தொடக்கம் 1561 வரையான 42 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

பலர் வாவெட்டி மலையை ஆண்டது இரண் டாம் சங்கிலியன் எனத் தெரிவித்தனர். இரண்டாம் சங்கிலியனுக்குச் சேகராசசேகரன் என்பதே இயற்பெய ராகும். இவனே யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன். ஆகவே இவ் 2 ஆம் சங்கிலிக்குமாரன் வாவெட்டியை ஆண்டிருக்கச் சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது. அத்துடன் 1542களில் மன்னாரில் கிறிஸ்தவ மதம் மாறிய அறுநூறு பேரைச் சங்கிலி மன்னன் கொலை செய்தான் எனப் போர்த்துக்கேய சாசனங்கள் பட்டயம் கூறுகின்றன. அப்படியானால் சிங்கைப் பரராசசேகரனின் மகனான முதலாம் சங்கிலியே வாவெட்டியை ஆண்டி ருக்க சந்தர்ப்பம் உண்டு. இதை வையா பாடல் தனது 99ஆவது செய்யுளில் மிகத்தெளிவாக விளக்கியிருக் கின்றது.

“எந்நாளுமிம் முறையே யாவரையும் வாழ்விரென
விருத்தியங்கள் மன்னனான இளவலெனும்
சங்கிலியை வாவெட்டி சாரச்செய்து முன்னோக்குப்
புரிபூசை நிதம் தெரிசித்தே முள்ளி வளையாமூரில்
மன்னனான இரவிகுலப் பராசசேகரனும்
வாழ்ந்தானன்றே”

(வையாபாடல் 99)

எனத் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதனூடாக உணரலாம். ஆகவே வரலாற்றுக் காலங்கள் முதற்கொண்டு இவ் வாவெட்டி மலையானது பெரும் செழிப்போடு விளங்கி யிருக்கின்றது என்பதனைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் இன்று யாரும் செல்லாது அம்மலை கைவிடப்பட்டு அழிவடைந்து காணப்படுகின்றது. எனவே இப்பிரதேச மானது ஆராய்ச்சியாளர்களின் மறைபொருளாக இன்றும் திகழ்வது வருந்தற்குரியது. இனியாவது பல்கலைக் கழகங்களோ தமிழீழத் தொல்பொருளாய்வகமோ கவனத்திலெடுத்து ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகின்றேன்.

*

# தமிழே! உன்னைக் காப்பேன்!

- புலவர் வெற்றியழகன்

எடுப்பு

தமிழே என்றும் பயில்வோம்!-இந்தத்
தரணி முழுவதும் உயர்வோம்! - தமிழே

உடனெடுப்பு

அமிழ்தே எனினும் அணடோம்! - இந்த
அகிலமே எதிர்ப்பினும் அஞ்சோம்! - தமிழே

முடிப்புகள்

தமிழினில் பாடங் கற்றால் - இந்தத்
தரணியை மாற்றலாம் முற்றாய்!
அமிழ்தெனும் தமிழே நம்மை - என்றும்
அழியாமற் காப்பதே உண்மை!
இமிழ்கடல் வேலிக் குள்ளே - தமிழ்
இனிப்பத னாலே கள்ளே!
கமழ்மனத் தேன்தான் தமிழே - நான்
காப்பேன்! என்னுயிர் அமிழ்தே! - தமிழே

தமிழினில் பெயரை இட்டால் - அது
தனிச்சுவை நாவைத் தொடட்டால்
உமியெனப் பிறரதை நினைத்தால் - அவா
உமியாய்ப் பறப்பாரநாம் கனைத்தால்!
அமியென உணரார் அவர்தாம் - அவர்
அற்பக் குட்டிச் சுவர்தாம்!
தமிழே என்னுயிர் சொல்வேன் - அதற்குத்
தாழ்வெனில் என்னுயிர் கொல்வேன்! - தமிழே



# பொங்கல் அன்றும் இன்றும்


மா.கி. கிறிஸ்ரியன் (பிரான்சு)


தமிழ் மக்களின் தனிப்பெரும் திருவிழா பொங்கல். சமயச்சார்பு இல்லாத பெருவிழா பொங்கல். எந்தவிதமான புராணக்கதைகள் கட்டாத, இனத்தின் பண்பாட்டு வீரவிழா தமிழர் திருநாள். வேறெல்லா விழாக்களும் போகும் இடத்திற்காக, பொங்கல் புது நாள் இருக்கும் இடத்திற்காக... மனைகள் தோறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிடும் பொங்கல் புதுநாள். பேச்சில் ஓர் இசை கலந்திடும் நாள் இத்திருநாள். உலகில் பற்பல விழாக்கள் நடாத்தப்படினும், தமிழர்களின் பொங்கற்புது நாள் போன்றதோர் பொன் விழா நிச்சயம் இல்லை என்கின்றார் பேறிஞர் அண்ணா. நாட்டில் கோலாகல விழாக்கள் பற்பல உண்டு. கேளிக்கைகள், மதுபான விருந்துகள், நடனக்களியாட்டங்கள் மிகுதியாக நடைபெறுகின்றதைக் காண்கின்றோம். தமிழர்களின் இந்தப் பொங்கல் விழா ஆர்ப்பரிப்பின்றி அகமகிழ்ச்சியுடன், போலிப்பூச்சுகளின்றிப் புதியதோர் பொலிவுடன் வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் விழாவாகும். பொங்கல் புது நாளுக்கு ஒப்பான விழா எங்குமில்லை.


வீடுகள் எங்கும் எழுகிறதே... புதியவரும், மூதாட்டியும், இளைஞரும், இளநங்கையரும், சிறுமியரும் கலந்து எழுப்பும் பொங்கலோ பொங்கலென்ற இசை எங்கும் இல்லை. இருந்திடத்தக்க விதமான சமூக அமைப்பே இல்லை. இதனால்தான் தமிழர் திருநாள் என்றனர்.

தை முதல் நாளில் திருவள்ளுவர் ஆண்டு பிறக்கிறது. பொங்கல் என்பதும் தமிழர்களின் புத்தாண்டாகவும் மலர்கின்றது. தமிழர் வாழ்வில் வரும் வீரத்திருநாளாகவும் மிளிர்கின்றது. சிந்திய பனியும், உழவரைத் தீண்டிய குளிரும் உழைப்பின் உறுதியும், களைப்பின் வெகுமதியும், எண்ணிய ஏற்றமும், திண்ணிய நெஞ்சமும், விழைவின் வளமும், தாங்கிய நிலையில் வரும் நீல வானம் தமிழர்களை ஒன்று சேர்க்க வரும் திங்களாகத் திகழும். எழுத்தும் பேச்சும் வீரத்திருநாளில் தமிழே எனும் மூச்சாகப் பொங்கல் பொங்கும். உழைப்பில் தோன்றும் மகிழ்வில் மங்கலம் சேர்க்கும். எங்கோ ஏகி விலகிநிற்கும் செங்கதிரோன் எண் கணிப்பில் விஞ்ஞானம் தன்னிலும் ஞானவியல் படைத்த பாங்கு வென்றிடும்.

ஆடி முதல் தை வரைக்கும் அயராது வயல் வெளியில் ஓடி உழைத்த மக்கள் ஓய்வு பெறும் முதல் நாள் கணிப்பும், உழவுக்குத் துணை போன அனைத்துக்கும் நன்றி செலுத்தும் பண்பாடும் உண்டு. இங்குதான் பொங்கல் விழா தொடர்பான அர்த்தங்கள் அல்லது தத்துவங்கள் கணிசமான முக்கியத்துவம் பெறக் காண்கிறோம். பொங்கல் விழாவை நாட்டின் காலநிலையோடு தொடர்புபடுத்தி முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை தமிழனின் மேன்மை நிலையைக் காட்டுவதாயும் அவதானிக்கலாம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களை உள்ளடக்கிய ஆறு மாதங்களிலும் தெற்கு நோக்கி இருந்த சூரியன் தை மாதம் முதலாம் திகதியிலேயே வடக்கு நோக்கித் திரும்பும். தை மாதத்திற்கு முற்பட்ட ஆறு மாத காலத்தையும் தட்சிணாயனம் என்பார்கள். அதாவது சூரியன் தெற்கு நோக்கிச் செல்வதால் இந்தக் காலப் பகுதியில் பல இயற்கைச் சீரழிவுகள் ஏற்படும். கடைசி மாதமான மார்கழி மாதத்தைப் பீடை பிடித்த காலமாகவே நம்மவர் கருதுவர். மார்கழி மாதத்து சுனாமி கடற்கோள் அனர்த்த அதிர்ச்சி என்று மறையும்? மார்கழி மாதத்தைச் சூன்ய மாதம் என்றும் சொல்வார்கள். இதனால் இந்த மாதத்தில் விஷேட கருமங்கள் செய்வதை நம் முன்னோர் நிறுத்தினர். தை முதற் திகதியிலேயே சூரியன் தெற்கே இருந்து வடக்கு நோக்கித் திரும்பும். இக்காலத்தை உத்தராயண காலம் எனக் கணித்தனர். பீடைகள் நிறைந்த மார்கழி நீங்கி உத்தராயணம் தோன்றுவதை எண்ணிய தமிழர் இக்காலநிலை அமைப்புக்கு உட்பட்டதால் பொங்கிப்படைத்துக் கொண்டாடினர். சூரியன் வடக்கு நோக்கித் திரும்பும் முதல் நாளிலேயே தம்மைப் பீடித்திருந்த பீடைகள் நீங்கும் என்று தமிழர் பூரணமாக நம்பிக்கை வைத்து உள்ளனர்.

சூரியன் வடக்கு நோக்கிய பார்வையும் இந்த நம்பிக்கைக்கு ஒரு காரணமாய் அமைகின்றது. இத்தகைய நாளைத் திருநாளாகப் பெருநாளாக உண்மைப் பொங்கல் விழாவாக எடுத்தனர். தை மாதம் முதல் நாளை புண்ணிய காலமாகக் கருதியதோடு நில்லாது அதற்கு மேலாகச் சூரியனைக் குறித்து வழிபடும் சிறப்பு நாளாகவும் கொண்டுள்ளனர். தை முதல் நாள் தமிழர்களாகிய எல்லோர்க்கும் விசேடமான நாள் என்பதால் இந்தப் பொன் நாள் - தமிழர் திருநாள் என்றானது. உத்தராயண காலத்தோடு தொடர்பான இந்தப் பொங்கல் விழா இந்தியாவில் நான்கு நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாக உள்ளது. முதல் நாள் போகிப் பண்டிகை, இரண்டாம் நாள் பொங்கல் திருநாள், மூன்றாம். நாள் மாட்டுப் பொங்கல், நான்காம் நாள் காணும் பொங்கல். இந்த நான்கு நாள்களும் இந்தியாவில் சிறப்புப்பெறும் நாளாகத் திகழ்கின்றது. தமிழ் ஈழத்தில் இந்த நான்கு நாள் சிறப்பு இடம்பெறுவதில்லை.

ஈழத்தில் முக்கியமாகத் தை முதல்திகதியின் பொங்கலே விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. தைமாத முதல் நாள் பொங்கலுக்கான ஆயத்தங்கள் சிறப்பாக இடம்பெறும். இத்திருநாள் சூரியனுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. பயிர் பச்சைகள் செழிக்க சூரிய சக்தி இன்றியமையாதது. சூரியனால் அதிக பயனைப் பெற்ற உழவர்கள் தாம் பாடுபட்டு விளை வித்த அத்தனை பொருள்களையும் பொங்கிப்படைத்து வழிபடுவார்கள். சூரியனால் மழை பெய்கின்றது. பூமி விளைகின்றது. மழை மூலமே நாடு, நகர் செழிப் படைந்து மக்கள் இன்பபோகங்களை நுகர்ந்து வாழக் காரணமாகிறது. இந்தப் பொங்கல் சிறப்பின் மகிமை தனை முற்றத்துப் பொங்கலில் நாம் காண்போம். காலை உதயத்தைத் தரிசிக்க மக்கள் வண்டுகளாய்க் கூடுவர். புத்தடுப்பு வைக்கப்படும். முற்றம் கோலமிடப்பட்டுக் காலமிடும் செழிப்பாய் காணப்படும். பொங்கல்காரர் வருவார், மகிழ்ச்சிக்களிப்பில் ஆடுவார், குடும்பம் புத்தாடை கட்டி அழகு காட்ட, முதல் நாள் ஆச்சி களி மண்ணில் பிடித்த புது அடுப்பு, முனை உடையாத செங்கல் கழுவிக் கோலம்போட்டுப் பொங்கல்காரர் செங்கதிரோன் எழும் திசை காணவைப்பார். புதுப் பானை, மஞ்சள், இஞ்சி, மாவிலை கட்டிக் கோலமிடப் பட்டிருக்கும் புது அடுப்பில் புது நெருப்பு மூட்டியதும் புதிய பானை கொஞ்சம் சரிந்திருக்க வைப்பார். அப்போதுதான் கிழக்கு முகமாகப் பொங்கல் எங்கள் வாழ்வின் திங்களே, பொங்கலே, பொங்கல். சீனவெடி, ஈக்கில் வானம், மூலைவெடி, கடலைப் பட்டாசு என முழங்கும். காளைமாட்டுப் பந்தயங்கள், சேவல் சண்டைகள் அங்காங்குப் போட்டி ஆட்டமாய் நடக்கும். முற்றவெளியெங்கும் கலை நிகழ்வுகள் களைகட்டும். அன்று புன்னகைத்துப் பொட்டுவைத்து இன்பமுற்ற தமிழ்த்திருநாள். சாதி மதமற்ற சந்தோசத் திருநாள். கத்தோலிக்க ஆலய முற்றத்திலும் ஆராதனை வழி பாட்டிலும் அகமகிழ்ந்து வணங்கிய புண்ணிய நாள். பிரசங்கத்தில் மதம் வேறாகலாம் ஆனால் சாதி ஒன்று தான். மதம் என்பது மதி. அதாவது நமது புத்திக்கேற்ற கொள்கையைச் சேர்ந்தது சாதி. நாமெல்லோரும் தமிழ் சாதி. ''நமது பக்திக்கேற்றதும், பண்பாட்டிற்குரியதும், ஒற்றுமையின் வலியதுமான தமிழர் திருநாள்'' இப்படி யாகப் பாதிரியார் யாழ்ப்பாணக் கோயிலில் பிரசங்கம் பொழிந்ததைக் கேட்ட நாங்கள் எங்கள் கவலைகள், துன்பங்கள், பசி, பட்டினி அறியாத மதச்சார்பற்ற அற்புதமான திருநாள். எப்படிக் கூடிக்குலாவி மகிழ்ந் துண்டு வாழ்ந்தனர். எல்லோரும் தத்தமது இயல்புக்கு ஏற்றதைப் பிறர்க்கு வழங்கி மனித நேயம் காத்தனர். இன்பப்பொங்கல் பொதுவெனும் பூங்காவில் பூத்த மல ரென மணந்து மணம் வீசினர். சமத்துவ சகோதரத்துவ சங்கமப் பண்பாட்டின் சிறப்பின் உச்சமே பொங்கல் என விளங்கும். உலகிலுள்ள விழாக்களில் உயர்வானதாகத் துலங்கும் தமிழர் பொங்கல். அன்று எருதுகள், பசுக்கள் பிரதானமாக ஏன் தெய்வமாகக்கூடக் கருதும் வழக்கத் திற்கு முக்கியத்துவம் உண்டு. பசுக்களைச் செல்வமாகக் கருதிய பண்டைய வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன. ஒருவன் வைத்திருக்கும் பசு நிரைகளைக்கொண்டு அவனின் பொருளாதாரநிலை கணிக்கப்பட்டதுண்டு. எருதுகள் பசுக்கள் உழவுத்தொழிலுக்கு இன்றியமை யாதவை. இவற்றைப் பூசிக்கும் நாளாக மாட்டுப் பொங்கல் நாள் அமைகின்றது. இப்பொங்கலையும் தமிழன் இவற்றிற்கு ஆற்றும் நன்றிக்கடன் எனக் கொண்டு தன் செய் நன்றி மரபை மேன்மைப்படுத்து கிறான்.



## இலங்கை எம்.பி. மனோ கணேசனுக்கு உலக சுதந்திரப் பாதுகாவலர் விருது

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி வாஷிங்டனில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு அமெரிக்காவின் 'சுதந்திரப் பாதுகாவலர்' (Freedom desender world wide Award for the year 2007) விருது வழங்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்தையும் மனித உரிமையையும் காப்பதில் கணேசனின் பங்களிப்பைப் பாராட்டி அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தினால் இந்த விருது வழங்கப்படுகிறது.

மனோ கணேசன் இந்திய வம்சாவளித் தமிழர். மேலக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். தமிழீழ மக்களுக்குப் பாரிய பணிகளை ஆற்றிவருபவர். மனித உரிமைத் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் காண்டலீஸாரைஸ், கணேசனுக்கு விருது வழங்கப்படுவதாக அறிவித்தார்.

மனித உரிமையைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் கணேசனின் உயிருக்குப் பல முறை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அப்போதெல்லாம் அவரும் அவர்தம் குடும்பத்தினரும் இந்தியாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

'இந்த விருது கிடைத்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுவேன்' என்று கணேசன் கூறினார்.

'சிவில் கண்காணிப்பு ஆணையம்' என்ற அமைப்பைக் கணேசன் 2006-ஆம் ஆண்டு நிறுவினார். 2000-ஆம் ஆண்டில் மேற்கு மக்கள் முன்னணி என்ற அமைப்பை நிறுவிக் கொழும்பில் மாநகரப் பகுதியில் வசிக்கும் தமிழர்களுக்காகத் தொண்டாற்றிவருகிறார்.

ஊக்கம் உடைமை

# சு.வி. என்னும் சுய ஊக்கம்

கோத்திரன்

சம காலத்துத் தமிழ் இலக்கியவாதிகளுள் மூவர் என் இதயத்துள் இடம் பெற்று இருக்கிறார்கள். அவர்களது இலக்கிய நேர்மையுள் நான் ஈர்க்கப்பட்டவன். ஒருவர் திரு. பத்மநாப ஐயர். மற்றொருவர் திரு. அ. யேசுராசா. அடுத்தவர் கவிஞர் சு. வில்வரத்தினம் அவர்கள். 'வில்வம்' நம்முடன் இன்று இல்லை.

கடந்த ஆண்டு ஐயர் அவர்கள் இலண்டனில் இருந்து வந்து கொழும்பில் அவரது சகோதரர் இல்லத்தில் தங்கியிருந்த நேரம். இந்த இல்லத்தின் படிக்கட்டுகளில் ஏறிப் போய்க் கொண்டிருக்கிறேன். கீழே ஒரு காலடி ஓசை திரும்பிப் பார்க்கிறேன். கவிஞர் கண்ணதாசனைப் போலக் கன்னம் குழி விழச் சிரிப்புடன் காட்சி தருகிறார் சு.வி. ஏறிய படிகளிலிருந்து இறங்க முயற்சித்த என்னைத் தடுத்துவிட்டு மேலே வந்த சு.வி. கரம்பற்றிக் குசலம் விசாரிக்கிறார். 'தகவம்' நகர்ந்ததன் பின் யாழ் மண்ணில் ஒரே ஒரு நாள் அவசர மான-அவலமான சூழ்நிலையில் அவரைக் கடைசி யாகச் சந்தித்திருந்தேன். சு.வி.யுடன் ஐயர் அவர்களைக் கண்டு பேசிய அந்த நாற்பது நிமிடங்கள்தாம் அவருடன் பேசிய கடைசிச் சந்திப்பு. நெஞ்சுள் வலிக்கும் சோகமாக அது நிலைத்து நிற்கிறது.

தீவகத்தின் சிந்தனை வித்தகரான மு. தளைய சிங்கம் பிறந்த மண்ணான புங்குடுதீவுதான் சு.வி.யின் பிறப்பிடம். சுப்பிரமணியம் என்ற மணியத்தார் குடும்பத்தின் இளைய வாரிசுதான் சு.வி. வசதி படைத்த - செல்வாக்கு மிக்க குடும்பத்தின் சிறுவன் என்பதால் அவன் இளமைக்காலம் இனிமையாக இருந்தது. இன உணர்வில் மணியத்தார் குடும்பம் சற்று உணர்ச்சிமயமானது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப காலக் கொள்கைகளிலும் குறிக்கோளிலும் இணைந்து இருந்தவர்கள் இவர்கள். அரசியல் ஈடுபாட்டினால் இவரது அண்ணன்மார் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்ததும் உண்டு. அப்புறம் தமிழரசு மூளை என்று கருதப்பட்ட வ. நவரத்தினம் அவர்கள் 'சுயாட்சிக் கழகம்' உருவாக்கியபோது, தீவகத்தில் மணியத்தார் குடும்பம் அந்தக் கழகத்தை வளர்க்க எடுத்த முயற்சிகள் இன்று வரை அந்தக் குடும்பத்தை நினைத்துப் பார்க்க வைக்கின்றன. அந்தக் குடும்பச் சூழ்நிலையில் வளர்க்கப் பட்டவர்தாம் சு.வி. அதனால் தமிழ்த் தேசியத்தின் தோட்டத்திலேயே வித்தாக விழுந்து தலையிட்ட தன்மை அவரிடம் இறுதிவரை மாறவேயில்லை. அவர் ஏறிய மேடைகளில் அதன் பிரதிபலிப்புகள் தெளிவாகவே கேட்டிருக்கின்றன. தன் எதிராளியைச் சிரித்துக் கொண்டே உரித்துக் காட்டும் சு.வி.யின் பாணி ஒரு வித்தியாசமான பரிமாணம்.

**''என்பிலிகளுக்கு வாழ்தல் இலகு**
**கூனல் குனிதல் - நாலாய் வளைந்து நமஸ்கரித்தல்,**
**எல்லா வகையிலும் இசைவாக்கம் சமரசங்கள்**
**என்பிலிகளுக்கு வாழ்தல் இலகு''**

என்னும் அவர் கவிதை ஓர் எடுத்துக்காட்டு. பெண்ணியல் சமத்துவத்தின் பெருமையைப் போற்றும் சு.வி.யின் 'அகலிகை' இன்னுமோர் உதாரணம்.

1970களிலே வேகமாக இலக்கியக் களத்துள் நுழைந்த சு.வி. அன்றிருந்தே ஆழமாகக் கணிக்கப்பட்டவர். எளிமையான தோற்றம், இயல்பான நட்புணர்வுகள், பண்பான பழக்க வழக்கங்கள், பசுமையான சிரிப்பு, வாரிவிடப்படாத சுருட்டை முடிகள், ஏற்றம் கொண்ட நாசி, சிறிது கருமையான தோற்றம் இத்தியாதி இலட்சணங்கள் அவருடையவை. தன் குரலிலேயே தான் யாத்த பாடல்களைக் கம்பீரமாகப் பாடும் ஆற்றல் அவருக்குண்டு. 'உயிர்த்தெழும் காலத்துக்காக (2001). 'காற்று வழிக் கிராமம்' (1995), (இது வி.பி.வி சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறப்புப் பரிசு பெற்றது.) 'அகங்களும் முகங்களும்' (1985), 'காலத்துயர்', 'நெற்றிக் கண்' (2000), வாசிகம் என்பன நூலுருப்பெற்ற அவர் படைப்புகள், தன் வாழ்வின் இன்னல்களுக்கிடையேயும் தமிழீழத்தின் குறிக்கோளிலிருந்து மாறுபடாமல் வாழ்ந்தவர் அவர், தன் சொந்த மண்ணைவிட்டுப் புறப்பட வேண்டிய காலவோட்டத்தில் சிக்கிக் கொண்ட சு.வி. 1991இல் இருந்து திருகோணமலையை வதிவிடமாகக் கொண்டார். சுதந்திர மனிதனாகத் தீவகத்துள் சுற்றித் திரிந்த சு.வி. கட்டுப்பாடான கடமையொன்றுக்குள் நுழைய வேண்டி வந்தது. வட கிழக்கு மாகாண சபையின் கலாசாரப் பிரிவில் அவர் கடமையாற்றத் தொடங்கினார். இது வாழ்வின் ஒரு முக்கிய திருப்பம். சு.வி. இருக்குமிடத்தில் கலகலப்பு இருக்கும். கருத்தோட்டம் நிலவும். தன் குருநாதராக வரித்துக் கொண்ட மு.த.வின் வீச்சுகள் தெறிக்கும். சு.வி.யின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அவரது தாய் மண்ணும் அந்த மண்ணின் மைந்தரான மு.த. நினைவுகளும் துணைநின்றே வந்துள்ளன. பட்டுக் கோட்டைக் கல்யாணசுந்தரம் எப்படிப் பாரதிதாசன் வசப்பட்டிருந்தாரோ அதே போன்ற உறவு நிலைதான் மு.த.-சு.வி. இடையேயும். சு.வி. தன் உற்சாகத்தில் குறைவடைந்து விடவில்லை என்றுதான் செய்திகள் சொல்லுகின்றன. 1984இல் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியில் பார்த்த சு.வி.யின் படைப்புகள் இன்றும் வரிக்கு வரி நினைவில் நிற்கின்றன. தன் தடயங்களை நம்மிடம் விட்டுவிட்டுத் தன்னை மறைத்துக் கொண்டு விட்டார் அவர். 56 ஆண்டுகள் தமிழ் மண்ணில் அவர் தவழ்ந்து நிமிர்ந்து நின்ற காலங்கள் ஈழத்துக் கவிதைத் துறைக்குள் ஒரு காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. Lutesong and Lament Tamil writing from Sri Lanka. தொகுதியில் ஆங்கில வடிவத்தில் அவர் பாடல் இடம் பெற்றிருப்பதும் அந்தத் தாக்கத்தின் அடையாளங்கள். உற்சாகம் பொங்க சுறுசுறுப்பான சு.வி. இன்று நம்முடன் இல்லை. அவர் நம்முடன் வாழ்ந்த அந்த நினைவுகள்-கன்னங்குழியும் கவர்ச்சியான சிரிப்பும், அடைத்துக் கொண்டிருக்கும் இதயச் சுமையுள் அவர் அடையாளங்களாக நிலைக்கின்றன. உற்சாகம் குறையாத சு.வி.யை வள்ளுவம் இப்படிச் சொல்லுகிறது.

**''ஆக்கம் அதர்வினாய்ச்செல்லும் அசைவு இலா**
**ஊக்கமுடையான் உழை''**

நூல் நயவுரை

ஆய்வாளர் புலவர் கே.கோ. விஜயலட்சுமி, எம்.ஏ., அவர்களின்

# ''கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் பக்தி நெறி''

புலவர் ந. கருணாநிதி, எம்.ஏ., எம்.பில்.,

'ஒன்று பரம்பொருள் நாமதன் புதல்வர்' என்பர் ஆன்றோர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திருமந்திரம். உலகம் முழுமையும் மனித சமுதாயம் ஒன்றே. அவரால் வெவ்வேறு பெயரால் வழங்கப் பெறும் தெய்வங்களும் ஒன்றே. இதுவே உலகத் தத்துவ மேதைகளின் ஒருமித்த கருத்து.

சங்க காலத்தில் இறைவருக்குள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதமில்லை. சமயங்களுள் ஒன்றை ஒன்று உயர்த்தியோ தாழ்த்தியோ சமர் செய்யவில்லை. இடைக்காலத்தில் ஏற்பட்டவையே சமயப் பிணக்குகள், பொய்ச் சாத்திரங்கள், தெய்வ வேறுபாடுகள், இவற்றைக் கண்டு வருந்திய பிற்கால ஞானியர்கள் 'பரம்பொருள் ஒன்றே' என்பதனை வலியுறுத்தினர். ''அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாய் நிற்பது எதுவோ, ஆனந்த பூர்த்தியாகி நின்றது எதுவோ அது இறை'' என உணர்த்தினர்.

கவியரசர் கண்ணதாசன் சான்றோர் பலரின் சமயக் கருத்தை உள்வாங்கிக் கொண்டவர்; திரைப்படப் பாடல்களில் அமைந்த கதைச் சூழலில் ''இறைவன் எங்கோ இருப்பவனில்லை; நம்மோடும் நல்லவரோடும் உறைபவன்'' என்பதை ஓங்கி ஒலித்துள்ளார் என்பதைத் தக்க சான்றுகளுடன் நூலாசிரியர் எடுத்துக் காட்டி யுள்ளார்.

உழைப்பவர் கைகளில் (பக். 14) எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சில் (பக். 14) தெளிந்த நினைவும் திறந்த நெஞ்சம் நிறைந்த இடத்தில் (பக் 15) இசையில், கலையில், கவியில், மழலை மொழியில் (பக் 15) பல நிறமலர்களில் (பக் 16) பிள்ளை வடிவில் (பக் 17) அன்பு நன்றி கருணை கொண்ட மனித வடிவில் (பக் 17) கருணை பொங்கும் உள்ளத்தில் (பக் 17 இறைவனைக் காணச் சொல்கிறார் கவியரசர்.

குடும்பமே கோவில் என்பது தமிழர் கோட்பாடு. நல்ல குடும்பத்தில் தாய் தந்தையரைப் பேணியும் ஈன்ற மக்களைப் போற்றியும், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்தும், அறவோர்க்களித்தும், அன்புத்தீபம் ஏற்றி மனைவியை அரவணைத்தும் வாழ்கின்றவர்க்குத் தில்லையும் வேங்கடமும் தேவையில்லையாம். நான் சொல்லவில்லை, கவியரசர் சொல்கிறார்.

இல்லறம் என்பது இறைவன் கொடுப்பது (பக். 19) கணவன் திருக்கோவில் (பக் 18) குலமகள் வாழும் இனிய குடும்பம் கோவிலுக்கு இணையாகும் (பக் 19) நல்ல மனைவி நல்ல பிள்ளை. நல்ல குடும்பம் தெய் வீகம் (பக் 26) என்பன போன்ற சான்றுகளால் அன்பே சிவம்; அதுவே இல்லறம் என்பதை நூலாசிரியர் நிறுவி யுள்ளார்.




''ராமன் என்பது கங்கை நதி
அல்லா என்பது சிந்து நதி
இயேசு என்பது பொன்னிநதி
நதிகள் பிறக்குமிடம் பலவாகும்.
எல்லா நதியும் கலக்குமிடம்
கடலாகும்''

என்னும் கவியரசரின் திரைப்பாடல் அடிகள் உலக சமய ஒற்றுமைக்கு வித்தூன்றுவதை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளது பாராட்டத்தக்கது.

உண்மை நெறி நடப்பவர்க்கு அவர் கேட்கா மலேயே இறைவன் வந்து உதவுவான் என்பது சான் றோர் நம்பிக்கை. கவியரசரும்,

''நாமறியாமல் தெய்வம் வந்து
நமக்கென உழைக்குமடா'' (பக். 79)

என்கிறார்.

பகுத்தறிவின் எல்லை எங்கே முடிகிறதோ, விஞ்ஞானம் எங்கே விடைகூறமுடியாமல் விழிக்கிறதோ அங்கேதான் மெய்ஞ்ஞானம் இறைவனின் இருப்புக் கொள்கை (Existance of God) உதயமாகிறது என்பர் தவஞானியர். இதனைப் பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு கவியரசர்

''பகுத்தறி வென்பது பகுத்துப் பகுத்து
முடிவில் காண்பது மூலப் பொருளையே
செத்தபின் உயிர்கள் சேர்வது எங்கே?
தெரியும் வரைநீ தெய்வத்தை நம்பு'' (பக். 91)

என்கிறார்.

காதலிலும் கடவுளைக் காண வைக்கிறார் கவியரசர் என்பதனைப் பல சான்றுகளால் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

''முத்திக்கு வித்தாகும் பக்தி நெறி'' என்ற தலைப்பில் ஆய்வாளராகிய நூலாசிரியர் சைவ சித் தாந்தக் கொள்கைகளை விளக்கி அவை கவியரசர் பாடல்களில் எளிமைப்படுத்தப்பட்டிருப்பதை நன்கு சுட்டியுள்ளார்.

''காலங்காலமாகக் கடின வழியாக இருந்த பக்தி நெறியை எளிமையாக்கி இதயத்துள் ஊடுருவச் செய்து விட்டார் கவியரசர்'' என்று நூலாசிரியர் பாராட்டுவது உண்மையான திறனாய்வே!

''தந்தைக்கு உபதேசம் செய்தமலை - எங்கள்
தமிழ்த்திரு நாடுகண்ட சுவாமிமலை''

என்பது கவியரசர் பாட்டு.

தமிழ்த்திரு மக்களால் காணப்பெறும் சுவாமி மலை என்றும், தமிழ் நாடெங்கும் உற்சவமூர்த்தி விக்ரகங்கள் விளங்குவதால், சுவாமி மலை உற்சவ மூர்த்திகள் தமிழ்த் திருநாட்டைக் கண்ட சுவாமிமலை என்றும் பொருள்கொள்ள இடமுண்டு (பக் 58) என இதுவரை யாரும் காண முயலாத அரிய நயத்தை நூலாசிரியர் கண்டிருப்பது அவரது இலக்கியச் சிந்தனை வளத்தைக் காட்டுகிறது.

'அறுபடை வீடுகொண்ட திருமுருகா' என்னும் தொடர் ஆறுபடை வீடுகள் கொண்ட திருமுருகா என்னும் பொருளையும், நம் பாவங்களை அறுக்கும் படைக்கருவியாக முருகப் பெருமான் எழுந்தருளியிருக் கிறான் என்னும் பொருளையும் தரும் என ஆய்வாளர் கூறியுள்ளமை (பக் 60) அவரது எதனையும் நுனித் தறியும் அறிவுக் கூர்மையை நன்கு விளக்குகிறது.

தொடக்கக் காலத்தில் அரசியல் மேடைகளில் கூடியிருப்போர் கைத்தட்டலுக்காக, ஸ்ரீரங்கநாதரையும், தில்லை நடராசரையும் பீரங்கி வைத்துப் பிளக்க நினைத்த அறியாப் பிள்ளையின் புரியாச் செயல்கள், வயதேற, வயதேற ஆன்மீகத் தேன் ஊற ஊற, சிவனது திருவிளையாடல்களையும், திருமாலின் தசாவதாரப் பெருமைகளையும், நாயன்மார்களையும், ஆழ்வார் களையும் மிஞ்சிப் பாடவைத்துவிட்டன என்பதை ஆய்வு அறிஞர் திருமதி கே.கோ. விஜயலட்சுமி சுட்டி யுள்ளமை அவரது வாய்மை நெறிக்குச் சான்றாகும்.

தமிழ் இலக்கியங்களில் பண்டுதொட்டு இன்று வரை உலகு என்ற சொல்லை நூலின் தொடக்கமாகப் புலவர்கள் அமைத்து வருகின்றனர். இந்நெறியைப் பின்பற்றி இந்த ஆய்வுநூல் ஆசிரியரும் இயல்தோறும் உலகைக் குறிக்கும் சொல்லைக் கையாண்டு உலகைச் சிந்தித்திருப்பது பாராட்டத்தக்கது.

நூல் முழுவதும் தம் கருத்தை வலியுறுத்தித் தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருவள்ளுவமாலை, கந்தபுராணம், பெரியபுராணம், நன்னூல், பாரதி, பாரதிதாசன் பாடல்கள் முதலிய இலக்கிய இலக்கண நூல்களி லிருந்து எடுத்துக்காட்டு தந்துள்ளமை ஆய்வாளரின் பன்னூற்பயிற்சியைப் பாங்குற எடுத்துக்காட்டுகிறது.

சுருங்கச்சொன்னால் ஆய்வாளர் புலவர் கே.கோ. விஜயலட்சுமியின் இந்த ஆய்வு நூல் ஆய்வு நெறி எல்லைக்குள் அமைந்து; எளிய இனிய ஆய்வு நடை கொண்டுள்ளது. எந்தப் போட்டியிலும் இந்நூல் முதலி டம் பெறும் தன்மையது. அனைவரும் படித்துப் பயன் பெறத் தக்க நூல் 'கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் பக்தி நெறி' என்னும் இவ் ஆய்வு நூலாகும். ஆய்வாளர் எம்.பில். பட்டத்துடன் எதிர்காலத்தில் 'முனைவர்' பட்டம் பெற என் வாழ்த்துகள். ✱


## திருமண சேவை

திருமண ஒப்பேற்றுத் துறையில் கடந்த 30-10-2007 இல் பன்னிரண்டு ஆண்டுகளை நிறைவுசெய்து, 13 ஆம் ஆண்டில் தொடர்ந்து வீறு நடைபோடுகின்றார். "சுயதெரிவு முறை முன்னோடி" குரும்பசிட்டியூர், மாயெழு **வேல் அமுதன்!** வேல் அமுதனின் முயற்சிகள் வெற்றியீட்ட மனப்பூர்வமான நல்லாதரவு நல்கிய வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகளையும் நவில்கின்றார் வேல் அமுதன்!

**சுலபமாகச் சுயதெரிவு முறையில் மனம்விரும்பும் மணமக்களைத் தெரிந்தெடுக்கலாம்!**
**தாங்கள் நேரில் அல்லது தங்கள் பிரதிநிதியை அனுப்பி**
**மேல் அமுதனைச் சந்தித்தல் வேண்டும்!**
**சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் மாத்திரமே!**



மேலும் விவரங்களைத் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் இலங்கை நேரம்
மாலை மணி 4.30 - 8.30 வரையான நேரத்துள்
சர்வதேசத் தமிழினப் பல்சமூகத் திருமண ஆற்றுப்படுத்துநர்
வேல் அமுதனிடம் விசாரித்தறிக!

வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி
**0094 114 873929, 0094 112 360488, 0094 602158067**
முகவரி : 8-3-3 மெற்றோ மாடி மனை
(வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாகவுள்ள 33 ஆம் ஒழுங்கை வழி)
55 ஆம் ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை,

சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவு முறையே!
மகத்தான திருமணத்திற்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!



பழகப் பழகப் பால் வண்ணம்
அழகுக் கேற்ற எழில் கிண்ணம்

£ 6.99




ஆண், பெண்
இருபாலருக்கும்
ஏற்றதொரு
எழில் கிரீம்...

என்னைப் போல
உன்னழகும் எழில் பெற...

**What benefits can I expect from Fair & Bright?**

Get fair Skin.
Keeps your skin soft, smooth and fresh all day long
It is extracted from Ethereal Flower.
Your delicate skin soft, smooth and fresh the whole day long.
Reduces dark circle from under the eyes.
Removes black spots, black marks and blemishes.
Look younger and sexy in a week.
All ingredients comply with UK standards.

**You can buy 2 ways shop**


Fair & Bright Shop, Unit 1, Chandani Bazar
7, Plaza Parade, 29/33, Ealing Road,
Wembly, Middlesex HA0 4YA
London




Fair & Bright
Fairness Cream

## Free by Post

| Fair & Bright Cream 50ml £6-99 Each | Quantity | Sub-Total |
|---|---|---|
| Free for UK Postage | | |
| | Total | |





I enclose a cheque or postal order made payable to "Fair & Bright Shop"

Name ..........................................................................................

Address ......................................................................................

.................................................. Postal Code ..................................................

Please mail to: Fair & Bright Shop, PO BOX 54558, London E15 3UZ
Tel: 0203 188 10 88 E-mail: info@Fair-Brightshop.co.uk
web: www.Fair-Brightshop.co.uk, Call from abroad: 00 44 203 188 1088



# Fair & Bright

மாற்றும் உண்மை முகமே சொல்லும்...

## இலண்டனில் நடைபெற்ற விமல் சொக்கநாதன் அவர்களின் வானொலிக் கலை நூல் வெளியீட்டு விழா காட்சிகள்

















## சுனில் சோபனா தமிழ்த் திருமணம்





# மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழகத்திலும் - புதுவையிலும் மேற்கொண்ட கல்விச் சுற்றுலா காட்சிகள்






















# UPSLINKK

Group of Companies

Financial Advisers ▪ Mortgage Brokers ▪ Property Sellers ▪ Property Developers


## WIZARDS OF PROPERTY FINANCE

**Kingsbury**
020 8200 6700

**East Ham**
020 8472 2222

**Lewisham**
020 8694 6600

**High Gate**
020 8348 5557




www.upslinkk.net

# UPSLINKK INN

Hotel with deluxe bedrooms in East Ham

Tel: 020 8552 7101
020 8472 2222

E-mail: contacts@upslinkkinn.net
Web: www.upslinkkinn.net

# அரங்க அந்தரங்கம்

கதிர் துரைசிங்கம்

கனடாவில் அதிகளவில் பொதுநிகழ்ச்சிகள், கலை விழாக்கள், களியாட்டங்கள் இடம்பெறும் நகராக ரொறன்ரோ அமைந்துள்ளது. இங்குள்ள இனக்குழுமங் களில் தமிழர்களே மிக்கூடுதலான அளவில் இவ் வாறான வைபவங்களையும் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர்.

தமிழர்கள் மத்தியில் சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள் மற்றும் அமைப்புகள் பெருமளவில் இருப் பதால் இவற்றை ஏற்பாடு செய்வது சுலபமாகவுள்ளது. தமிழ் ஊடகங்களும் சில தனியார்களும் பாரிய அள விலான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது அண்மையில் அதிகரித்து வருகின்றது.

ஆனாலும் எல்லா நிகழ்ச்சிகளும் கட்டுக்கோப் பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதாகக் கூறமுடி யாது. இதற்குக் காரணம் சரியான திட்டமிடப்படா மையும் திட்ட அமுலாக்கலுக்கான கட்டமைப்பு இல்லா மையுமே.

இவை தொடர்பான சில விடயங்களை மேலெழுந்தவாரியாக இங்குப் பார்ப்போம்:

**ஒரு விழாவை அல்லது நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்கு முன்னர் கவனிக்க வேண்டியவை என்ன?**

நடத்த உத்தேசிக்கும் நாளில் வேறு நிகழ்ச்சிகள் என்னென்ன நடைபெறுகின்றன.

எதிர்பார்க்கும் மக்கள்/பார்வையாளர் தொகை.

அதற்குரிய இடம்/மண்டபத் தெரிவு.

போதிய வாகனத் தரிப்பிட வசதியுள்ள இடமா?

பொதுப்போக்குவரத்து வசதியுள்ள இடமா?

அனுமதி பற்றிய பூரண (கட்டணமா- இலவசமா?) விவரங்களை முற்கூட்டியே விளம்பரப் படுத்துதல்.

**அடுத்ததாக அரங்க ஆயத்தம் பற்றிய கவனம்.**

தொழில்நுட்பவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் பங்குகொள்வோர் வரவேண்டிய நேரத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

பார்வையாளர்களை உள்ளே அனுமதிக்கும் நேரம்.

நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரம்.

முடிவடையும் நேரம். முடிந்தபின் வெளியேறும் நேரம். சிற்றுண்டி/ உண்டி வழங்கும் வசதி ஒப்பனை அறை வசதி.

நிகழ்ச்சிப் பொறுப்பாளர்/நிகழ்ச்சி நெறியாளர் பற்றிய முடிவு.

இன்றைய நாள்களில் கலைநிகழ்ச்சிகளில் அனேக மாக இறுவெட்டுகள், பாடல் தட்டுகள் பயன்படுத்தப் படுவதால் அவற்றின் பிரதிகளை முன்கூட்டியே பெற்று ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு நிகழ்ச்சியை வழங்குபவர்களுக்கும் அவர்களுக்கான நேரம் முற்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும். மேடையில் அடுத்தடுத்து ஒரேமாதிரியான நிகழ்ச்சிகள் வராமல் பார்ப்பது நல்லது. உரைகள், பரிசில் வழங்கல், மதிப்பளித்தல், சிறப்புச் செய்தல் போன்றவற்றை நிகழ்ச்சிகளுக்கு இடையில் வைப்பது நல்லது.

நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்து வரவும் ஒழுங்கு படுத்தவும் தமது குழுவில் ஒருவரைப் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்வது கட்டாயம். அவர் நிகழ்ச்சி நெறி யாளருடன் நெருங்கிய தொடர்பினைப் பேண வேண்டும்.

அறிவிப்பாளரிடம் நிகழ்ச்சிப் பட்டியலுடன், அரங்குக்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் விவரம், மற்றும் சகல குறிப்புகளும் முற்கூட்டியே ஒப்படைக்க வேண்டும்.

ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும் விழா அமைப்பாளர்களுக்குமிடையே இணைப்பாளராகக் கடமையாற்ற நன்கு விஷயமறிந்த ஒருவரை நியமிக்க வேண்டும்.

உரையாற்றவிருப்பவர்களுக்கு அவர்களுக்கான நேரம் (நேரக்கட்டுப்பாடு) அவர்களை ஒழுங்குசெய்யும் போதே தெரிவிக்கப்பட வேண்டும். இது மிகமிகக் கட்டாயம். இதனைச் செய்யத் தவறிவிட்டு மேடையில் வைத்துத் துண்டுச் சீட்டு கொடுப்பது பொருத்தமற்றது.

மங்கள விளக்கேற்ற ஓரிருவரை அழைப்பதே நல்லது. அனேகமானவர்களை அழைப்பது குழப்பத்தை ஏற்படுத்தலாம்.

விழாவைக் குறித்த நேரத்துக்கு ஆரம்பிக்க வேண்டும். இனிமேல் வரவேண்டியவர்களுக்காகப் பின் தள்ளுவது. நேரத்துக்கு வருகை தந்தவர்களை அவமதிப் பதாகும்.

நிகழ்ச்சி நிரலில் இல்லாதவர்களை/இல்லாதவற்றை இடைச்செருகல் செய்வது விரும்பத்தக்கதல்ல. குறிப்பிட்ட நேர ஒழுங்குக்குள் வராத நிகழ்ச்சிகளைக் கடைசிக்கு மாற்றிவிட வேண்டும்.

விளம்பர அறிவிப்புகளையும் விளம்பர ஒலி-ஒளி அறிவித்தல்களையும் இடைவேளையில் அல்லது விழா ஆரம்பமாவதற்கு முன்னர் செய்வது நல்லது.

மேடையில் எந்த நிகழ்ச்சி நடக்கும்போதும் முறைத்துப் பார்த்தல், சைகை வழங்கல், நிறுத்துமாறு பணித்தல், பின்னின்று சொறிதல் போன்றவை வர வேற்கத்தக்கவையல்ல.

வெளியீட்டு வைபவங்களில் முதற் பிரதி, சிறப்புப் பிரதி பெற விருப்பவர்கள் வருகை தந்து உள்ளனரா என்பதை நிச்சயப்படுத்திய பின்னர், அவர்களை மேடைக்கு இலகுவாகவும் விரைவாகவும் வருகை தர வசதியான இடத்தில் அமரச்செய்யவும். மதிப்பளிக்க அல்லது சிறப்பளிக்க அழைக்கப்பட்டவர்களையும் விசேட இருக்கைகளில் அமரச் செய்வது நல்லது.

மண்டபத்தில் இல்லாதவர்களை அழைத்தல், முன்னறிவித்தலின்றி ஒருவரை அழைத்தல், முன்னர்ச் சொல்லிவைக்காமல் உரையாற்றப் பணித்தல் ஆகியவை நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இவை பார்வையாளரின் வெறுப்பையும் சம்பாதித்துவிடும்.

அரங்கத்தின் முன்வரிசை இருக்கைகளைச் சிறப்பு விருந்தினர், பிரதம விருந்தினர், மதகுருமார், தலைமை வகிக்க அழைக்கப்பட்டவர் ஆகியோருக்காக ஒதுக்கி வைத்திருக்க வேண்டும். அதற்காகப் பல வரிசைகளை ஒதுக்கி வைத்திருக்கக்கூடாது. இதனால், அந்த வரிசைகள் காலியாகவே அமைந்து விடுவதும் உண்டு.

இங்குச் சொல்லப்பட்டவை சில மட்டுமே. இன்னும் பலவுண்டு. அவை அனுபவத்தால் பெற்றுச் சமயோசிதமாகத் தீர்க்கப்பட வேண்டியவை. *

## நூல் மீளாய்வு, விருது அளிப்பு விழா



பிரென்ட் நகராட்சியின் ஈலிங்கு சாலை நூலகத் தமிழ் வாசகர் வட்டத்தின் பதினொன்றாம் மாதச் சந்திப்பு நூல் மீளாய்வு/விருது அளிப்பு விழாவாகப் பரிணமித்தது. வில்ஸ்டன் கிரீன் நூலகத்தில் 27 அக்டோபர் அன்று மாலையில் இந்நிகழ்ச்சி நடந்தது.

திரு. வேதநாராயணனின் தமிழ்த்தாய் வணக்கத்திற்குப் பிறகு மங்கல விளக்கு திருவாட்டி அரங்க முருகையன், திருவாட்டி வேதநாராயணன் அவர்களால் ஏற்றப்பட்டது. ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் மூவரில் ஒருவரான அமரர் சி. வைத்தியலிங்கம் அவர்களின் உருவப் படத்திற்குப் புலவர் அமுது மாலை அணிவித்தார். வில்ஸ்டன் நூலக நிருவாகி திருவாட்டி நரீந்தர் வரவேற்புரை நல்கினார்.

நூல் மீளாய்வு நிகழ்ச்சிக்குப் பேராசிரியர் தமிழ்மணி அரங்க முருகையன் தலைமையேற்றார். திரு வைத்தியலிங்கம் அவர்களின் படைப்பான கங்கா கீதம் என்ற நூல் மீளாய்வு செய்யப்பட்டது. செல்வி இராணி, திரு. நடராஜன், செல்வி நிலா, திரு. தணிகாசலம் ஆகியோர் இந்நூலைப் பல கோணங்களிலிருந்து நோக்கிப் போற்றினார்கள். ஈழத்திலிருந்து வருகை தந்துள்ள திரு. பொன்னம்பலம் அவர்களது ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களைப் பற்றிய ஆய்வு சிறப்பாக இருந்தது.

அடுத்த பகுதியாகப் பல ஆண்டுகளாக அயராது தமிழுக்காகச் சேவை புரிந்த நூலகர் திருவாட்டி யமுனா சுமங்கலி தருமேந்திரன் அவர்களுக்கு, உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. அக்கழகத்தின் பிரித்தானியக் கிளையின் தலைவரான பேராசிரியர் அரங்க முருகையன் திருவாட்டி யமுனாவின் சேவையைப் பாராட்டினார். திருமதி யமுனா, அவருக்கு உறுதுணையான திரு. தருமேந்திரன் ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. நூலகச் செல்வி என்ற விருது பொறித்த ஒரு பதக்கமும் திருவாட்டி யமுனாவுக்கு அணிவிக்கப்பட்டது. அவரைப் பாராட்டி எழுதப்பட்ட இரு கவிதைகள் வாசிக்கப்பட்டன. பிரென்ட் நகராட்சியில் நூலகச் சேவைப்பிரிவின் உபதலைவரான திரு நீல் டேவிஸ், திருவாட்டி யமுனாவையும் ஈலிங்கு நூலக வாசகர் வட்டத்தையும் பாராட்டிப் பேசினார்.

வாய்ப்பாட்டு, வீணையிசை, பரதநாட்டியம் ஆகிய கலை நிகழ்ச்சிகளோடு விழா இனிது நிறைவுற்றது. சுமார் 200 பேர் வருகை தந்து இவ்விழாவினைச் சிறப்பித்தனர்.

**ச. வேதநாராயணன்**

# கண்டேன் கலைஞரை!
## கண்டதும் சொல்ல நினைத்ததை மெல்ல மறந்தேன்!!

க. செல்வநாயகம், L.L.B., (Solicitor London)

டிசம்பர் 13ஆம் நாள் 2006. எனது வாழ்வில் மறக்க முடியாத மகிழ்ச்சிக்குரிய திருநாள். அன்றுதான் தமிழாய், தமிழனாய், தமிழர் நலம் காக்கும் மனிதனாய், தமிழகத்தின் முதல்வராய் எல்லாவற்றுக்கும் மேலாக உலகத் தமிழினத்தின் முதல் மகனாய் வாழும் கலைஞர் பெருந்தகையை நான் நேரில் சந்தித்த பொன்னாள்.

கலைஞரைக் கண்ட இன்ப அதிர்ச்சியில் நான் அவரைக் காணும்போது எதைக் கதைக்க வேண்டுமென நினைத்திருந்தேனோ அவற்றை எல்லாம் மறந்துவிட்டேன்.

கலைஞர் மீது கொண்ட பற்று பாசத்துக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றையெல்லாம் இங்கு நினைவு கூர்வதில் பெருமையடைகின்றேன்.

1949ஆம் ஆண்டு தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அதேகாலப் பகுதியில் இலங்கையில் தந்தை செல்வா தலைமையில் இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தமிழரசுக்கட்சி என்ற இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அன்றைய தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் பெரும்பாலும் தாய்த் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்பாடுகளை அடியொற்றியே அமைந்திருந்தன.

1956ஆம் ஆண்டு பத்து வயது பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி ஏந்தி அக்கட்சியின் தேர்தல் ஊர்வலத்தில் கலந்து கொண்டேன். அக்காலப்பகுதியில் தமிழக தி.மு.க. தலைவர்களின் சொற்பொழிவுகளைத் தமிழரசுக்கட்சியினர் தங்கள் வெளியீடுகளில் மறுபிரசுரம் செய்வதோ அல்லது தி.மு.க. சார்பான பத்திரிகைகளைத் தருவித்து இலங்கைத் தமிழர்கள் மத்தியில் விநியோகிப்பதோ வழக்கமாயிருந்தது.

நான் அன்றைய பத்திரிகைகளான ''திராவிட நாடு'' ''மாலைமணி'' ''முரசொலி'' முதலிய பத்திரிகைகளையும் திராவிட முன்னேற்றக்கழகம் சார்பான வேறு பல பத்திரிகைகளையும் மிக ஆர்வத்தோடு வாசிக்க ஆரம்பித்தது மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களின் போட்டோக்களையும் பார்த்துப் பரவசமடைவது வழக்கம்.

சில பத்திரிகைகள் வரிசைக் கிரமமாகப் பேரறிஞர் அண்ணா. ஈ.வி.கே. சம்பத்து, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், கலைஞர், மதியழகன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரின் போட்டோக்களைப் பிரசுரிப்பது வழக்கம்.

அந்தக் காலகட்டத்தில் கலைஞர் வசனமெழுதிய பராசக்தி, மனோகரா முதலிய சினிமாப் படங்கள் அனல் தெறிக்கும் கலைஞரின் அர்த்தமுள்ள வசனங்களைச் சுமந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் தேசமெல்லாம் ஒரு புதிய தமிழ் உணர்வலையை உருவாக்கியது.

கலைஞரின் வசனங்களால் கவரப்பட்ட நான் பராசக்தி, மனோகரா படவசனங்களைச் சிவாஜி கணேசன் பேசிய அதேகுரலில் பல விழாக்களிலும் பேசிப் பாராட்டுகள் பெற்றேன்.

1960ஆம், 70ஆம் ஆண்டுகளில் எனது கிராமத்திலும் பிற மாவட்டங்களிலும் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நானும் பங்கேற்பது வழக்கமான ஒன்றாகும்.

அந்தக் காலத்தில் கலைஞருக்கு அழகான தலைமுடி இருந்தது. அவர் நேர்வகிடு இழுத்துக் கறுப்புக் கண்ணாடியும் அணிந்து தோளில் மண்ணிற (Brown) சால்வையும் போட்டுக் கொண்டு மேடைகளில் பிரச்சாரம் செய்வது வழக்கம். எனக்கும் அந்தக் காலத்தில் நல்ல தலைமுடி இருந்தமையால் அவர் போலவே நேர் வகிடு இழுத்து மண்ணிறச் சால்வையும் தோளில் அணிந்து தேர்தல் பிரச்சார மேடைகளிலும் இலக்கிய விழாக்களிலும் கலந்துகொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். என்னை மேடையில் பார்த்தவர்கள் பலரும் 'நீ கலைஞர் சாயலிலேயே இருக்கின்றாய்' எனச் சொல்லும்போது நான் மிக மகிழ்ச்சியடைவேன். இதுவும் கலைஞர் மீது மிகவும் அதிகமாகப் பாசமேற்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

சாதாரண குடும்பத்தில் உதித்துத் தன் தனித்திறமையால் பல சாதனைகளின் நாயகனாய்ப் பல திறமைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு சில உலகத் தலைவர்களுள் தானும் ஒருவர் என்பதை நிரூபித்து நிற்கும் எங்கள் கலைஞரின் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என நினைக்கும்போது எனது இதயம் இன்பத்தில் துள்ளுகின்றது.

1969ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் இருந்து விலகித் தமிழரசு மூளை என வர்ணிக்கப்பட்ட திரு வ. நவரத்தினம் தலைமையில் தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற இயக்கத்தை ஆரம்பித்தவர்களுள் நானும் ஒருவன். கலைஞரின் எழுத்து, எண்ணம், கருத்து ஆகியவற்றை உள்வாங்கி வாழ்ந்தவனாகையால் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி அரசை அமைப்பதே பொருத்தமானது என்பதை வலியுறுத்தி எங்கள் கட்சிக்கான பிரச்சாரத்தை முன்னெடுத்தேன்.

1973ஆம் ஆண்டளவில் கலைஞரின் பெயரால், திரு. நவசோதி என்பவரின் தலைமையில் கொழும்பில் இயங்கிய கருணாநிதி பொதுப்பணி மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்து சில காலம் சேவையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

1975ஆம் ஆண்டு கொழும்பு மருதானை பொறியியல் கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றத்தினர் வெளியிட்ட தமிழ் விழா மலரில் பிரசுரிப்பதற்காக அவர்கள் சார்பில் ''கடல் கடந்த தமிழர்களுக்கெல்லாம் காவல் தெய்வமாம் கலைஞர் அவர்களே'' என்று ஆரம்பிக்கும் மூன்று பக்கங்களுக்கு அதிகமான ஒரு நீண்ட கடிதத்தை எழுதி அனுப்பிக் கலைஞர் அவர்களிடமிருந்து விழா வைப் பாராட்டி எழுதிய இருபக்கக் கவிதையை மலரில் பிரசுரித்தோம்.

1976ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் ஒரு கட்சியை உருவாக்கி வட்டுக்கோட்டையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தனித் தமிழீழம் அமைக்கும் தீர்மானத்தை ஏகோபித்த வரவேற்புடன் பிரகடனப்படுத்தி 1977 இல் நடந்த தேர்தலில் எங்கள் கட்சியின் வெற்றி வாய்ப்பைத் தட்டிப் பறித்தார்கள். இதன் விளைவாக 1980ஆம் ஆண்டளவில் எனக்கு அரசியலில் இருந்த நாட்டத்தை அறவே கைவிட்டேன்.

1977யிலும் 1983யிலும் நடந்த இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டத் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடக்கும் அரச பயங்கரவாதத்தையும் அதை எதிர்த்து நடக்கும் ஆயுதப் போராட்டத்தையும் கருத்திற் கொண்டு 1986ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் குடியேறினேன்.

அரசியலையும் நாடகத்தையும் மறந்து வாழும் மனநிலையை நான் இன்று உருவாக்கிக் கொண்டாலும் கலைஞரின் எழுத்தைப் படித்துக் கருத்தைச் சுவைக்கும் ஆர்வத்தை நான் என்றுமே கைவிட்டதில்லை.

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்தும் இனவெறிப் படுகொலைகளை எண்ணி மனம் குமுறிக் கொண்டிருந்த நான் 1996ஆம் ஆண்டு கலைஞர் மீண்டும் முதல்வராக வந்தபோது இலண்டனில் வெளி வந்த ராஜகோபாலின் ஈழகேசரி பத்திரிகையில் ''கலைஞரே நீ நினைத்தால் முடியாதா'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். அக்கட்டுரையில், ''கலைஞரே! தமிழரே! கடல்கடந்து வாழும் தமிழர்க்கு எல்லாம் காவல் தலைவனாய் விளங்கும் எங்கள் தமிழகத்தின் சோழவேந்தே! நீ நினைத்தால் முடியாதா? எழுஞாயிறு என எழுந்திரு கலைஞரே! எங்கள் தமிழினத்தை வதைத்து ஒழிப்பவனைப் பழிதீர்த்து உன் பணி முடித்திடு! உன் புகழ் என்றும் வாழும். நினைத்துப்பார் நீ தமிழுக்காய் வாழ்ந்த வாழ்வை! இன்று தமிழ் மானம் தலை குனியாமல் வென்றிடவே எழுந்திடுவாய் கலைஞரே! தமிழர் தலைவரே!'' என்று அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

2001ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை ஜெயலலிதா அவர்களிடம் பறி கொடுத்தபோது நான் பின்வருமாறு ஒரு கட்டுரையை இலண்டன் 'புதினம்' பத்திரிகையில் எழுதினேன். ''கலைஞரே உங்களுக்கு இந்த அரசியல் தேவை தானா? ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம் ஆகியோருடன் அரசியல் நடத்திய உங்களுக்கு, இந்த நடிகையுடன் அரசியல் நடத்த வேண்டியது அவசியம்தானா? இந்த அரசியலை விடுத்துக் கம்பனைப்போல், கவி காளிதாசனைப்போல் காலத்தால் அழியாத காவியங்களை உருவாக்கி உலகம் உள்ளளவும் உங்கள் புகழ் மங்காத பணியில் ஈடுபடலாமே'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

இப்படிப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த போதும் கலைஞரின் நினைவோடு பயணித்தவன் நான்.

மேற்சொன்ன காரணங்களால் கலைஞரை நேரில் கண்டதும் என்ன செய்வதென்று அறியாது அந்தக் காலத்திய அவரின் நேர்வகிடு இழுத்து காட்சிதந்த அவரின் அழகிய தலைமுடி இருந்த அவரின் தலையைச் சுட்டிக்காட்டித் தொட்டு வணங்கி வந்தேன். இந்த மகிழ்ச்சியில் பக்கத்தில் இருந்த பேராசிரியர்க்கோ, ஆர்க்காட்டாருக்கோ, தம்பி தளபதி ஸ்டாலினுக்கோ வணக்கம் சொல்ல வேண்டுமென்பதைக்கூட மறந்து விட்டேன். பின்னர் அதையிட்டு மனம் நொந்தேன். ஐம்பதாண்டுகளாக நான் கலைஞர் மீது வைத்திருந்த பாசத்தின் வேகத்தால் என் கண்கள் மற்றவர்கள் பக்கம் திரும்பாமல் போய்விட்டது.

மகா பாரதக்கதை உண்மையான சம்பவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்று என்றோ அல்லது வெறும் புனைகதைதான் என்ற தாக்கத்திலோ இறங்க நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு மறுக்க முடியாத உண்மை. அக்கதையில் வரும் பலவிதமான கதாபாத்திரங்களின் குணாதிசயங்களுடன் இன்னும் பலர் எங்கள் நாடுகளில் உலா வருகின்றார்கள். காட்டிக் கொடுப்பவர்கள். துரோகத்தனம் செய்பவர்கள், வஞ்ச நெஞ்சம் கொண்டவர்கள் என்று படுமோசமான குண நலத்துக்குச் சொந்தக்காரர்கள் எங்கள் மத்தியில் மனித உருவில் நடமாடுகின்றனர்.

அக்கதையில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நடந்த குருசேத்திரப்போரில் கிருஷ்ண பரமாத்மாவான கண்ணன் தனது வியூகம், ராஜ தந்திரம், மதிநுட்பம், திறமை ஆகியவற்றைப் பிரயோகித்துப் போரில் எந்த ஆயுதத்தையும் கையில் எடுக்காமல் பாண்டவரின் வெற்றியை நிச்சயப்படுத்தினான்.

கண்ணனின் வியூகமும் உதவியும் இல்லாமல் இருந்தால் பாண்டவரின் வெற்றி கேள்விக்குறியாகவே இருந்திருக்கும்.

இதேபோல இன்று நடக்கும் தமிழீழப் போரில் கலைஞர் அவர்கள் கண்ணபிரான் குருசேத்திரப்போரில் என்ன பாத்திரத்தை ஏற்றிருந்தாரோ அதே பாத்திரத்தைத் தமிழீழப் போரில் ஏற்று இலங்கையில் நடக்கும் அரச பயங்கர அட்டூழியத்தை வீழ்த்தி நீதியை நிலைநிறுத்தித் தமிழர்களுக்கான வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி அரசை அமைக்க வழி காணவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். 70 ஆண்டுகளுக்கு மேலாகப் பொது வாழ்வில் இருக்கும் கலைஞர் அவர்கள்தாம் பெற்ற அனுபவம், அறிவு, திறமை, ராஜ தந்திரம் அனைத்தையும் பிரயோகித்து மத்திய அரசு மூலமாக இலங்கை அரசையும் புலிகளையும் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்பு முறையை ஏற்கச் செய்து அந்த நாட்டில் இரத்தக்களரியை நிறுத்தி சமாதானச் சுடரை ஏற்றிவைக்க வேண்டும். இதுவே எனது எதிர் பார்ப்பாகும். *

# மலைநாட்டுத் தமிழர் உரிமை நிலைநாட்டப்படுமா?

முனைவர் அரு. கோபாலன், ஆசிரியர், எழுகதிர் திங்களிதழ்

ஈழத் தமிழர் தலைவர் ஒருவர், ''தமிழன் இல்லாத நாடில்லை; உலகத்தில் தமிழனுக்கென்றொரு நாடில்லை'' என 1950களிலேயே குறிப்பிட்டார். அது பற்றி எந்தத் தமிழனும் கவலைப்படாததால், இன்று ''தமிழன் அடிபடாத நாடில்லை; தமிழனுக்காக அழக் கூட உரிமையில்லை'' என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்திய விடுதலைப் போருக்கு, இலங்கை விடுதலைப் போருக்கு உழைத்து, விடுதலையின் பயனை இங்கு இந்தி மொழி பேசுவோருக்கும், இலங்கையில் சிங்களம் பேசுவோருக்கும் கொடுத்துவிட்டு, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்ததைவிட அவலமுற்று, அடையாளமிழந்து தமிழன் எப்படித் தத்தளிக்கிறானோ, அது போலவே மலேயாவின் விடுதலைக்கும் முதன் முதலில் கருவி ஏந்திப் போராடியவர்கள் தமிழர்களே. மலேசியாவில் அப்படிப் போராடி 'தூக்கில் தொங்கிய கணபதியை' கலைஞர் போன்றோர் நாடகமாக்கி நடத்தியதால் நம் தமிழகம் அறியும்.

## சுதந்திரத்திற்காகத் தூக்கில் தொங்கிய கணபதிகள்

அக்கணபதிபோல் எத்தனை எத்தனையோ கனல் தமிழர்கள் மலேயா விடுதலைக்காக மலாய்க்காரர்களையும், சீனர்களையும் சேர்த்துக்கொண்டு பொதுவுடைமைப் புரட்சி நடத்திப் புழுதியாய்ப் போனதைத் தமிழகம் அறியாது. ஏனென்றால் சீனத் தலைமையின் வழிப்பட்டு நின்றதனால், தமிழகத்துப் பொதுவுடைமைக் கட்சியினரே அதுபற்றிப் பேசவில்லை: காரணம், தங்களின் மலாய்த் தோழர்களும், சீனத் தோழர்களும் அதற்காக மனவருத்தப் படக்கூடாது என்ற சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் பாசம்!

ஆனால், அதற்காக ஆங்கில ஏகாதிபத்தியம் மலேயாவுக்கு விடுதலை கொடுக்கிறபோது, அங்கிருந்த தமிழர்களின் பாதுகாப்புக்கு வழி செய்யாமலே வேண்டுமென்றே விட்டுச் சென்றது.

## பிரித்தானியாவின் கண்டிப்பு

இத்தனைக்கும் ''மலேயா என்பது மலாய்க்காரர், சீனர், இந்தியர் (தமிழர்) என்ற மூன்று தேசிய இனத்தவரின் நாடு. அம்மூன்று தேசிய இனத்தவரும் ஒத்து வந்தால்தான், சமவுரிமையோடு சகவாழ்வு நடத்துவோம் என்று எழுதித் தந்தால்தான் சுதந்திரம் வழங்குவோம்'' என்று பிரித்தானியாவால் கண்டிப்பாக அறிவிக்கப்பட்டு, அதற்கேற்ப மலாய் இனத்தவர் சார்பில் துங்கு அப்துல் ரகுமான் அவர்களும், சீன இனத்தவர் சார்பில் லீகுவான்யூ அவர்களும், இந்திய (தமிழ்) இனத்தவர் சார்பில் வீ.தி. சம்பந்தன் அவர்களும் ஒன்றாக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகே பிரித்தானியா மலேயாவுக்கு 31-8-1957இல் விடுதலை வழங்கியது.

அதனைச் சுட்டிக்காட்டி அங்குள்ள சீனர்களுக்கு எந்தவித உரிமைப் பங்கமும் ஏற்படாமல் சீன அரசு பாதுகாக்க, இந்திய அரசோ, அங்குள்ள இந்திய வமிசாவளியினர் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று நடந்து கொள்வதாலேயே நம்மவர்கள் நாதியற்றவர்களைப்போல் நடத்தப்படுகிறார்கள்.

## வட இந்தியர் தலைமை

மலேசிய இந்தியர்களில் பெரும்பான்மையினராகத் தமிழர்கள் இருப்பது இதற்கு முதற்காரணம். இரண்டாவது காரணம், 1939ஆம் ஆண்டு வெளிநாட்டு இந்தியர்களை அந்தந்த நாடுகளிலும் ஒரே அமைப்பின் கீழ் திரட்டவும், அவர்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும், இந்திய விடுதலைக்கு முன்பே பேராயக்கட்சி (இந்தியத் தேசிய காங்கிரசு) சார்பில் உரிய ஏற்பாடுகளைச் செய்ய பண்டித நேருவின் தலைமையில் ஒரு குழு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் குழு ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று 'காங்கிரசு' என்ற பெயராலேயே 'மலேயன் இந்தியன் காங்கிரஸ்' (Malayan Indian Congress) என்பது போலும் அமைப்புகளைத் தோற்றுவித்து, வெளிநாட்டு இந்தியர்களில் தமிழர்களே பெரும்பாலோராக இருந்தாலும் வட இந்தியர்களையே பொறுக்கியெடுத்து அவற்றின் தலைவர்களாக நியமித்துவிட்டு வந்தது.

## இந்தி பேசும் சுதந்திர நாடுகள்

அப்படி வடஇந்தியர் ஆதிக்கம் இந்திய விடுதலைக்கு முன்பும், அந்தந்த நாட்டு விடுதலைக்கு முன்பும் ஏற்படுத்தப்பட்டதால்தான் 'மொரிசியசு' போன்று இந்திய வம்சாவளிச் சுதந்திர நாடுகள் பல இன்று 'ஐ.நா. உறுப்பு நாடுகள்' என்ற தகுதியோடு இருந்தும், அங்கெல்லாம் முதலில் கொண்டு செல்லப்பட்டவர்கள் தமிழர்களாகவே இருந்தும், இன்றும் அங்கெல்லாம் தமிழ் வம்சாவளியினரே மிகுதியாக இருந்தும், அவை 'இந்தி பேசும் நாடுகள்' என்று சொல்லும் நிலையில் உள்ளன.

இலங்கையிலும், மலேசியாவிலும்கூட நேரு ஏற்படுத்திய வட இந்தியத் தலைமையே தொடர்ந்திருக்குமாயின், ஒருவேளை இன்று அவைகூட இந்திய வம்சாவளிச் சுதந்திர நாடுகள் (இந்தி பேசும் நாடுகள்) என்ற பட்டியலில் இடம்பெற்றிருக்கக்கூடும்.

## இந்திய அரசு கண்டுகொள்ளாத இரகசியம்

ஆனால், இலங்கையில் 1939இல் 'மோத்தா' என்பவர் தலைமையில் நேருவால் தோற்றுவிக்கப்பட்ட

'இலங்கை இந்தியத் தொழிலாளர் காங்கிரசு' கட்சியின் தலைமையை, தமிழரான சௌமிய மூர்த்தி தொண்டமான் தன் முயற்சியைக் கொண்டு கைப்பற்றியதால், அங்குள்ள இந்திய வம்சாவளியினரின் (தமிழரின்) குடியுரிமை - வாக்குரிமைகள்கூடப் பறிக்கப்பட்டும் இந்திய அரசு கண்டுகொள்ளாததைப் போல, மலேயாவில் பட்டாச்சார்யா, தீவி, பூத்சிங் போன்ற வடஇந்தியர் தலைமையில் நேருவால் தோற்றுவிக்கப்பட்ட மலேயன் இந்தியன் காங்கிரசின் தலைமையைத் தமிழரான வீ.தி. சம்பந்தன் கைப்பற்றியதால், இன்றும் சங்கிலி முத்து சாமிவேலு என்ற தமிழரே அதன் தலைவராக இருப்பதால், இந்திய அரசு கண்டுகொள்ள மறுக்கிறது.

## மூன்றாமிடத்திற்குப் போன மோசடி

மேலும், மலேயா விடுதலை பெறுகிறபோது தமிழக வம்சாவளி மக்களிடம் செல்வாக்கோடிருந்த சம்பந்தனும், இலங்கை வம்சாவளி மலேயாத் தமிழர்களிடம் செல்வாக்கோடிருந்த மாணிக்க வாசகமும் போட்டி அரசியல் நடாத்தியதாலும், இதனை மலேயா இந்தியரில் சிறுபான்மையினராக இருந்த வடஇந்தியர் ஊதிப் பெருக்கிக் குழப்பத்தை ஏற்படுத்தியதாலும், அன்று அங்கு வாழ்ந்த தமிழ்மக்களையெல்லாம் மலேயாக் குடியுரிமைபெறச் செய்ய மலேயன் இந்தியக் காங்கிரசு தவறிவிட்டது. தமிழர்களில் பெரும்பான்மையோரிடம் இந்தியக் குடியுரிமையைத் தக்கவைத்துக் கொள்வதே பாதுகாப்பானது என்ற எண்ணமும் தோற்றுவிக்கப்பட்டது.

**இல்லையென்றால், மலேசியக் குடிமக்களில் இன்று மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கும் தமிழர்கள் இரண்டாமிடத்தில் இருந்திருப்பார்கள்.**

## மலாய்த் தலைமையின் திறமை

தமிழ்த் தலைமை இப்படிக் கோட்டைவிட்டாலும், விழிப்பாக இருந்த மலாய் மக்களின் தலைமை, 1963இல் அப்போது இந்தோனேசிய ஆதிக்கத்திலிருந்த போர்னியோவைச் சேர்ந்த மலாய்மொழி பேசும் சாபா, சரவாக் ஆகிய இரு மாநிலங்களையும் இணைத்துக் கொண்டு மலாய்மக்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டது. (இதனால் மலேசியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் அப்போது மோதல் ஏற்பட்டது.)

அதுபோல் 1946இல் தனியாக இருந்த சிங்கப்பூர், மலேயாவில் சீனர் தொகையைப் பெருக்கும் நோக்குடனேயே 1948இல் மலேசியக் கூட்டாட்சியில் இணைந்தது. அதேவேளை மலேசியா முழுவதும் பரவி வாழ்ந்த சீன மக்கள் சிங்கப்பூரில் குவியுமாறும் செய்யப்பட்டனர். அதே உத்தியைக் கையாண்டு மலேசியா முழுவதும் பரவலாக இருந்த தமிழர்களைப் பினாங்கில் குவியுமாறு செய்யத் தமிழ்த் தலைமைக்கு ஆலோசனை கூறப்பட்டும் அது பொருட்படுத்தப்படவில்லை.

## பினாங்கை கோட்டை விட்டமை

ஆம்; மலேசியாவில் தமிழர்கள் தொழிலாளர்களாக முதலில் கொண்டு செல்லப்பட்டது பினாங்கிலே தான். 1960கள் வரை பினாங்குத் தீவு ஏறத்தாழ ஒரு தமிழர் தீவு போலவே விளங்கியது. இதை இங்குக் குறிப்பிடக் காரணம், சிங்கப்பூரையிட்டு மலேசியா முழுவதும் சீனர் செல்வாக்குப் பெருகுகிறது என்று நினைத்த பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அதைத் தனிநாடாகப் பிரிந்து செல்ல வழி செய்தார். அதுபோல் பினாங்கும் ஆகியிருக்கலாம்.

(இன்று சிங்கப்பூரில் சீனர் தொகை 80 விழுக்காட்டுக்கு மேல் இருப்பினும் அந்நாட்டின் தந்தை லீகுவான் யூ அவர்களின் ஏற்பாட்டில் அது சீனர்- மலேயர் -தமிழர் மூவின நாடாகவே அனைத்துத் துறையிலும் நடத்தப்பட்டு ஆசியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.)

## பலிகொள்ளப்படும் தமிழர் உரிமைகள்

தமிழ்த் தலைவர்களிடம் தொலைநோக்குப் பார்வை இல்லாததால் பினாங்கும் அப்படியொரு தமிழ்த்தேசமாகும் வாய்ப்புத் தொலைந்தது. அதனால் தான் தமிழர்கள் இன்று மூன்றாந்தர மக்களாக நடத்தப் படுகின்றனர். மலேசியத் தமிழர்களின் மொழியுரிமை, கல்வியுரிமை, தொழில் வாய்ப்புரிமை அனைத்தும் படிப்படியாகப் பலி கொள்ளப்படுகின்றன.

## காந்திய வழியில்...

எனவேதான் அங்குள்ள தமிழ் மக்கள் அமைதிவழியில் போராடத் துணிந்துள்ளனர். அதுவும் மலேசிய அரசை எதிர்த்துக்கூட அல்ல, தங்கள் உரிமைகளுக்கு உத்தரவாதம் தேடித்தர வேண்டும் என்று, தங்களை அங்குக் கூட்டிச் சென்ற - 1824 முதல் இடையில் 4 ஆண்டுகளைத் தவிர 1957 வரை மலேயாவை ஆட்சிசெய்த பிரிட்டிசாரை வலியுறுத்திதான், தலைநகர் கோலாலம்பூரில் பிரிட்டிஷ் தூதரகத்திடம் மனுக்கொடுப்பதற்காகத்தான் 25-11-2007 அன்று மலேசியத் தமிழர்கள் பேரணி நடத்தியுள்ளனர்.

அதுவும் எந்தத் தமிழர் தலைவரின் படத்தையும் ஏந்தியல்ல; அகிம்சா மூர்த்தி, உலக உத்தமர், இந்தியாவின் தந்தை காந்தியாரின் படத்தைக் கைகளில் ஏந்தித் தான் சென்றுள்ளனர்.

அப்படி அமைதியாக ஊர்வலம் சென்ற 10,000க்கும் மேற்பட்ட மலேசியத் தமிழர்களை அமிலம் கலந்த தண்ணீரைப் பீய்ச்சியடித்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் வன்முறைப் பிரயோகம் செய்தும் கலைத்த மலேசியக் காவல்துறையினர், அகப்பட்டவர்களைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்ததுடன், தண்டமும் விதித்துள்ளனர்.

## தமிழகத்தின் குரலாய்க் கலைஞர்

இதனால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள இழப்புகளும் இன்னல்களும் சொல்லும் தரமன்று. இதனைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில்தான் தமிழக முதலமைச்சர் கலைஞர், ''மலேசியாவில் போலீசார் தமிழர்களை நடத்தியவிதம் மன வேதனை அளிக்கிறது. இந்திய வம்சாவளியினர் தாங்கள் ஒதுக்கப்படுவதாகக்

கூறிப் பேரணி நடத்தியுள்ளதாகத் தெரிகிறது. மலேசியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது தங்களுக்குத் தெரியும். சமவுரிமைக்காகப் பேரணி நடத்தியவர்கள் மகாத்மா காந்தியின் உருவப்படத்தை ஏந்திச் சென்றுள்ளனர். அவர்களைக் கலைக்க மலேசியப் போலீசார் தண்ணீரைப் பீய்ச்சியடித்துள்ளனர். கண்ணீர்ப் புகையையும் பயன் படுத்தியுள்ளனர். அத்துடன் 240 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இச்சம்பவங்களால் தமிழக மக்கள் வேதனையடைந்துள்ளனர். மலேசியாவில் வாழும் தமிழர்கள் மீதான இத்தாக்குதல் குறித்த கவலையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இது தொடர்பாகச் சரியான நடவடிக்கையை உடனடியாகத் தாங்கள் எடுத்தால் நன்றியுடையவனாக இருப்பேன்'' என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மடல் எழுதியுள்ளார்.

## மலேசிய அமைச்சரின் வரம்புமீறல் போக்கு

இதைக்கூடப் பொறுக்க முடியாமல் 'நஸ்ரி அஜீஸ்' என்ற ஒரு மலேசிய மூத்த அமைச்சர் ''கருணாநிதி இருப்பது தமிழகத்தில். அவருடைய மாநிலத்தில் ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ளன. அதைப்பற்றித்தான் அவர் கவலைப்படவேண்டும். இங்குள்ள பிரச்சினை பற்றி அவர் கவலைப்படத் தேவையில்லை. இப்பிரச்சினையில் கருணாநிதி கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துப் பேசாமல் இருந்தால் போதும்'' என்று அதைக் கண்டித்திருக்கிறார்.

## இன்னொரு அமைச்சரின் எரிச்சல்

கலைஞரின் மடல் காரணமாக இந்திய நாடாளுமன்றத்தில் இது பற்றிக் காரசாரமாக விவாதம் நடைபெற, இந்திய வெளியுறவுத் துறையமைச்சர் பிரணாப் முகர்ஜியும், பிரதமர் மன்மோகன் சிங்கும் தங்கள் கவலையை வெளியிட்டதுடன், ''உரிய வழியில் இந்திய அரசு இதைக் கையாளும்'' என்றும் அறிவிக்கப்பட்டது.

இதைக்கூடத் தங்கள் நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவதாகப் பொருள்படுத்தி, மலேசிய வெளியுறவு அமைச்சர் சையத் ஹமித் அல்பார் என்பார் இந்தியாவுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ''இங்கு வாழும் குடிமக்களை எவ்விதம் கையாள்வது என்பது மலேசிய அரசுக்குத் தெரியும். இது முழுக்க முழுக்க மலேசியாவின் உள்நாட்டு விவகாரம். இதில் எந்தவொரு நாடும் தலையிடுவதை அனுமதிக்க முடியாது'' என்று கூறிய அவர், ''மலேசியக் குடியுரிமை பெற்றவர்கள் யாராக இருப்பினும் அவர்களது பூர்வீகம் எந்த நாடாக இருப்பினும் அது பற்றிக் கவலையில்லை. அவர்கள் இங்குள்ள சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்களே. அதை மீறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுப்போம்'' எனக் கூறியதுடன் ''மலேசியாவில் வாழும் பூர்வீகக் குடிமக்களின் உரிமை குறித்துப் பிற நாடுகள் கேள்வி கேட்குமாயின் வருங்காலத்தில் மலேசியா பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது'' எனத் தேவையின்றியே குமுறிக்கொட்டியுள்ளார். 'பூமிபுத்திரா' என்று கூறிக்கொண்டு, மலாய்க்காரர்களல்லாத மலேசியர்களின் உரிமைகளைப் பறித்து வரும் கொடுமை அவர் நெஞ்சையுறுத்த அது இப்படி வெளிவந்திருக்கிறது.

சரி; மலேசியக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதற்காகப் பிறநாட்டுப் பூர்வீகம் கொண்டவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாமா? அவர்கள் தங்களுக்குள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்குக் கூட உரிமை கிடையாதா?

## ஒரு மலேயரின் மனச்சான்று

இதற்கு அதே மலேசிய நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரான அன்வர் இப்ராகிம் எனும் மலாய்க்காரரே சரியானபடி பதில் அளித்துள்ளார். ''தங்கள் கருத்துகளை இராஜீய வழியில் தெரிவிக்க ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமையுண்டு?'' என்று கலைஞர் கருத்தை ஆதரித்த அவர், ''காவல்துறை தடியடி நடத்தியது உள் நாட்டு விவகாரம் அது பற்றி அன்னியர் யாரும் எதுவும் பேசக்கூடாது என மலேசிய அரசு கூறக் கூடாது. ஏனெனில், பாலஸ்தீனியர்களை மலேசியா ஆதரித்து வரும் நிலையில் இஸ்ரேலும் இவ்வாறு கூறினால் என்ன செய்வார்கள்?'' என்று கேள்வி எழுப்பிய அவர், மலேசிய இந்திய வம்சாவளியினர் நடத்திய பேரணிக்கு முழு ஆதரவு தெரிவித்ததுடன், அங்குள்ள தமிழர்களில் பெரும்பான்மையினர் ஏழ்மையில் வாழ்வதை ஒப்புக் கொண்டிருக்கிறார். அத்துடன் பூமிபுத்திராவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ''எந்தக் கொள்கையும் இனவெறி சார்ந்ததாக இல்லாமல் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்'' என்றும் புகன்றுள்ளார்.

## மலேசியப் பிரதமரின் தேவையற்ற ஆத்திரம்

இருந்தும் மலேசியாவின் இன்றைய பிரதமர் அப்துல்லா படாவி அவர்கள் ''இதுவெல்லாம் பொய்ப் பிரச்சாரம்'' என்று ஒரே போடாகப் போட்டிருப்பதுடன் ''மலேசியாவில் இனப்பாகுபாடு-இனவெறி இருப்பதை நிரூபித்துவிட்டால் நான் பதவி விலகத் தயார்'' என்று சினத்தோடு கூறியிருக்கிறார். ஆனால் ''இந்திய வம்சாவளியினர் (தமிழர்கள்) சமவுரிமையோடு நடத்தப்படுவார்கள்'' என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ''நாங்கள் எப்படி இழிவாக நடத்தினாலும் அதை அவர்கள் வெளியே சொல்லக்கூடாது. அவர்களுக்காகத் தமிழ்நாடு அழக்கூடாது. இந்தியா அனுதாபம் தெரிவிக்கக்கூடாது'' என்பதுதான் மலேசிய அமைச்சர்களின் குரலில் தொனிக்கிறதேயொழிய, மனிதாபிமானம், இனங்களிடையே சமரசப் பார்வை என்பன அவர்களிடமிருந்து வெளிப்படவில்லை.

### சீனாவைக் கண்டு மிரளாதீர்!

மலேசியாவில் இந்தியர் (தமிழர்)களுக்கு அடுத்தபடியாக உள்ள சீனர்கள், அதாவது 60 விழுக்காடு மலாய்க்காரர்கள், 25 விழுக்காடு சீனர்கள், 10 விழுக்காடு இந்தியர்(தமிழர்)கள் என உள்ள மலேசிய மக்கள் தொகையில் சிறுபான்மை நிலையிலேயே இருக்கும் அவர்கள் இதுபற்றி மூச்சு விடாததும், சீனா அறவே

கண்டுகொள்ளாததும் வியப்பாக உள்ளது. ஆம்; பக்கத்துப் பர்மாவிலும்கூட சீனா இப்படித்தான் நடந்துகொண்டது.

இந்தியா இதனை மனத்திற்கொண்டு தனது வம்சாவளியினருக்கு ஏற்பட்டிருக்கும் இழுக்கையும் இன்னலையும் துடைக்கத் துணிவாக முன்வர வேண்டும். சீனா அமைதியாக உள்ளதே என்று அதைக் கண்டு மிரளக்கூடாது.

## ஏன் இந்தப் பின்வாங்கல்?

ஆனால், 'தமிழினத் தலைவர்' எனக் கூறிக் கொள்ளும் கலைஞரோ, "நான் மலேசிய அரசைப் பற்றி எந்த விமர்சனமும் செய்யவில்லை. அங்குள்ள தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமையைத்தான் சுட்டிக் காட்டிப் பிரதமருக்கும் கடிதம் எழுதினேன்" என்று நழுவியுள்ளார்.

ஆறரைக் கோடித் தமிழர்களின் முதலமைச்சர் எதற்காக இப்படி நழுவ வேண்டும்? துணிவாக "மலேசியத் தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்று" என்று இந்திய அரசுக்கு அறிவுறுத்த வேண்டிய இடத்திலன்றோ தமிழ் மக்கள் அவரை ஏற்றிவைத்திருக்கின்றார்கள்!

## ஈழத்தை இழுக்கும் சதி

இந்திய அரசு இதில் உடனடியாக நடவடிக்கையெடுக்கவில்லையென்றால், மலேசியத் தமிழர் உரிமைகள் நிலைநாட்டப்படவில்லையென்றால், உலகம் முழுவதும் இந்திய வம்சாவளி மக்கள் கதி அதோகதியாகிவிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மலேசிய இந்திய வம்சாவளியினரில் 90 விழுக்காட்டினர் தமிழர்களே என்பதால், தமிழக அரசு இதில் நேரடியாகவே தலையிடுவதற்கு ஞாயம் இருக்கிறது. கூட்டாட்சி என்பது தமிழ் நாட்டிலிருந்து நடுவணரசு வரிவசூல் செய்வதற்கு மட்டுமல்ல, தமிழர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் பாதுகாப்பதற்கும்தான் என்பதை முதல்வர் எடுத்துக்காட்ட எந்தத் தடையுமில்லை. இங்கே "மலேசியத் தமிழர்கள் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார்கள். ஈழத்தமிழர் போராட்டத்திற்கு நிதியுதவி செய்கிறார்கள்" என்பதாகச் சொல்லி, இந்திய அரசை இதில் தலையிடாமல் இருக்கச் செய்யச் சில சக்திகள் முயல்வதாகத் தெரிகிறது. இதற்கான பதில் மேற்சொன்ன முன்னாள் மலேசியத் துணைப் பிரதமர் அன்வர் இப்ராகிமின் சொற்களிலேயே உள்ளது. ஆம்; பாலஸ்தீனர்கள் முஸ்லிம்கள் என்பதால், அவர்களின் உரிமைகளை மறுக்கும் இஸ்ரேலியர்களுக்கெதிராக மலேசிய அரசு செயல்படலாமென்றால், இலங்கையில் தமிழர்களின் உரிமைகளை மறுக்கும் சிங்களர்களுக்கு எதிராக மலேசியத் தமிழர்கள் ஏன் செயல்படக் கூடாது? இந்திய அரசு ஏன் தலையிடக் கூடாது?

## தேவையற்ற இந்துத்தவ நிலை

அதே நேரத்தில் 'இந்து உரிமைகள் செயற்படை' என்ற அமைப்பும், வேதமூர்த்தி என்ற அதன் தலைவரும் இந்த விவகாரத்தில் முன்னிலை வகிப்பது இந்துக்களல்லாத இந்தியர் (தமிழர்) பால் ஒருவித நெருடலை உண்டுபண்ணியிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்க முன் வராத இந்துத்துவ அமைப்புகள், மலேசியாவில் மட்டும் மட்டற்ற அக்கறை காட்டுவது அந்த நெருடலுக்குக் காரணமாகும்.

ஆம்; கடல் கடந்த நாடுகளிலுள்ள நம் உடன் பிறப்புகளிடம் மதத்தை நுழைப்பது அவர்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பதாகும். அங்கெல்லாம் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் கட்டிக்காத்துக் கொண்டிருப்பவை கோவில்களே என்பதால், மலேசியாவில் 1000க்கும் மேற்பட்ட கோவில்கள் இடிக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்துத்துவ நெறி என்பது சமற்கிருத மொழி. பண்பாடுகளையே முன்னிருத்தி, தமிழுக்குப் பகையாக நிற்பதால், அதனை நாம் ஆதரிக்க முடியாது; கூடாது.

எது எப்படி இருந்தாலும் இன்று அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் மலேசியத் தமிழர்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பது ஒவ்வொரு உலகத் தமிழரின் கடமையாகும். உடனே தலையிட்டு அவர்களுக்கு ஞாயம் கிடைக்கச் செய்வது தமிழக, இந்திய அரசுகளின் பொறுப்பாகும். ✱

# செல்வி தர்ஷியா பாஸ்கரலிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம்



ருக்ஷ நர்த்தனாலயா இயக்குநர் 'நாட்டியத் தாரகை' திருமதி நளாயினி இராஜதுரை அவர்களிடம் நாட்டியக் கலையைப் பயின்ற செல்வி தர்ஷியா பாஸ்கரலிங்கம் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம், இலண்டன் வின்ஸ்டன் சர்ச்சில் அரங்கில் 27-10-07 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இலக்கிய விமர்சகரும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளருமான, நித்தியானந்தன் தலைமையேற்றார். கனடாவைச் சேர்ந்த 'நடனக் கலை வித்தகர்' திருமதி வெனான்சி ஜோர்ஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், கலை விமர்சகரும் பத்திரிகையாளருமான திரு. எஸ். மகாலிங்கசிவம் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். நாட்டியக் கலை ஆர்வலர்கள் பலரும் இதில் திரளாகக் கலந்து கொண்டனர்.

செல்வி தர்ஷியா மேன்மேலும் நாட்டியத் துறையில் புகழ்பெற்று விளங்குமாறு இலண்டன் சுடரொளி வாழ்த்துகிறது.

தாயக வலம்

# இலங்கை அரசியல் - ஒரு நோக்கு

# சொற்பதங்களுக்குள் நின்று முரண்பட்டுக் கொள்ளாமை

- சர்வன்

சொற்பதங்களுக்குள் நின்று முரண்பட்டுக் கொள்ளாமல் ஒற்றை ஆட்சியை நன்கு பாதுகாக்கவல்ல ஒருவரை ஆட்சியாளராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்று தென்னிலங்கை மக்கள் தமது கொள்கைகளை நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடிவு செய்யும் காலம் நெருங்கி வருவது தெரிகிறது. கட்சிகள், சின்னங்கள், கொடிகள் பற்றிய முரண்பாடுகளிலிருந்தும் மக்கள் விலகிவிடும் நிலையும் எதிர்காலத்தில் வரலாம்.

இவ்வகைச் சிந்தனை தென்னிலங்கைக்குப் புதிய தல்லவாயினும் பல கட்சி ஆட்சிமுறையும், பல்லின மக்கள் வாழும் நிலையும் அவர்களைப் பல சொற பதங்களுக்குள் முரண்பட்டு நிற்கச் செய்தன என்பதை இதுவரை நாம் கண்டுள்ளோம். அதுவும், தேசிய இனம் என்னும் நிலை நாட்டில் முரண்படாமல் ஏனைய விடயங்களில் மட்டும் முரண்பட்டு, அரசியலில் பல கட்சி முறையிலான போட்டிகளுள் மக்கள் ஈடுபட்டிருந் தனர் என்பதே உண்மை.

மொழி, இனம், மதம் என்னும் விடயங்கள் தவிர்ந்த பிற விடயங்களில் முரண்பட்டு நின்ற தென் னிலங்கையின் கட்சிகளுக்கு இப்போது மேலும் ஒரு விடயத்தில் பொதுக்கருத்து உருவாகியிருக்கிறது. அதாவது ஒற்றையாட்சி நிலைப்பாட்டினை ஏற்றுக் கொள்வதென்பது. சமஅந்தஸ்து என்ற சுலோகம் பழைய இடதுசாரிகளோடு போய் மறைந்தது. தம்மை மார்க்சிசவாதிகளாகவும் காட்டிக்கொள்ள விரும்பும் ஜே.வி.பி.யினரும், இன்றைய ஆளும் தரப்புத் தலை மையும் ஒற்றையாட்சியின் காவலர்களாக உள்ள நிலை இதுவரை இருந்தது. மாறாக, ஐ.தே.க.வும் தமிழர் தரப்பும்கூட சமஷ்டியை ஆதரிக்கும் நிலைப்பாடும் இதுவரை இருந்தது. இவற்றுள் தென்னிலங்கையைத் தளமாகக் கொண்ட ஐ.தே.க. அண்மையில் தனது கொள்கையை மாற்றிக்கொண்டுவிட்டது. சமஷ்டியைக் கைவிட்டு விட்டதாக அறிவித்துள்ளது. மொத்தத்தில், இனிமேல் சமஷ்டிக்காகக் குரல்கொடுக்க தென்னிலங் கையில் ஒரு கட்சியும் இல்லை என்பது நிதர்சனமா யுள்ளது. சுருக்கமாகக் கூறின் இலங்கையின் அரசியல் அரங்குகளில் எடுத்துப் பேசுவாரற்ற ஒரு சொல்லாக சமஷ்டி இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. வெளிநாடுகளின் தீர்வுத் திணிப்புகளைத் தனியாக வைத்துக்கொள்ளலாம். சமஷ்டியைக் கேட்டு, அதற்காகப் போராடிய தமிழர்களும் அதனைக் காலாவதியாகவிட்ட நிலையிலும், சமஷ்டியை ஏற்படுத்தியாவது பிரிவினைக் கோரிக்கையைச் சாகடித்துவிடலாம் என்னும் நம்பிக் கையில் அதனை விமர்சித்தும், அவ்வப்போது கிடைக் கக்கூடிய வாக்குகளைச் சுருட்டிக்கொண்டும் வந்த தென் னிலங்கையின் சக்திகளும் அதனைக் கைவிட்ட நிலை யிலுமாக, இப்போது ஒட்டுமொத்தமாக சமஷ்டி இலங்கைத் தீவில் கைவிடப்பட்டுக் கடலினுள் வீசப் பட்டிருக்கிறது.

ஐ.தே.க.வின் முதல்வரிசை உறுப்பினர்கள் தாம் சமஷ்டியைக் கைவிட்டதை அறிவித்துள்ளனர். முக்கிய மாக, சொற்பதங்களுக்குள் முரண்பட்டு நிற்பதை விடுத்து அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கூறி தமது நிலைப்பாட்டினை வெளியிட்டிருக்கின்றனர். இந்த நிலைப்பாட்டின் பின்னணி யாது? எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது?

சமஷ்டியைக் கைவிடுவது என்னும் தீர்மானம் ஐ.தே.க.வின் உயர்மட்டக் குழுவின் உத்தியோகபூர்வ முடிவாகவோ, ஒரு கொள்கைப் பிரகடனமாகவோ அல்லாமல் கட்சியின் முதல்வரிசை உறுப்பினர்களின் முடிவாக வெளிவந்துள்ளது. அத்துடன், அதிகபட்ச அதிகாரப்பகிர்வுக்கு வரையறைகள் தெரிவிக்கப்பட வில்லை. என்னென்ன அதிகாரங்கள் என்னென்ன அளவுகளில் பகிரப்படும் என்றோ, அல்லது பகிரப் படும் அதிகாரங்களை மத்திய அரசு மீளப்பெறுமானால் அதனைத் தடுப்பதற்கான பாதுகாப்புகள் எவையென்றோ தெளிவாக அறிவிக்கப்படவில்லை. சர்வகட்சிக் குழு விலும் முன் வைக்கப்படாத நிலையில் ஐ.தே.க. தனது முடிவைக் காத்திரமான முறையில் முன்வைக்கவில்லை என்றே கொள்ளலாம்.

ஒன்றிணைந்த இலங்கையில் அதிகப்படியான அதிகாரப் பரவலாக்கம் என்பது சமஷ்டி என்னும் வரை யிலானதெனவும் கொள்ளலாமல்லவா? இதனால் ஒரு தெளிவற்ற நிலை தெரியவிடப்பட்டிருக்கிறது. இன்றைய அரசியல் நிலையின் பின்னணியில் ஜே.வி.பி ஆதரவை பெற்றுக்கொண்டு புதிய அரசை அமைக்கும் ஐ.தே.க. வின் விருப்பத்தையும் இது காட்டுகிறது. ஜே.வி.பி.யின் ஆதரவைப் பெறுவதிலுள்ள பிரதான தடை ஐ.தே.க. வின் சமஷ்டி நிலைப்பாடாகவே இருந்தது, என்பதன் பின்னணியில் குத்துக்கரணங்கள் நோக்கப்படல் வேண்டும்.


இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு; பயங்கரவாதத்திற்கு இராணுவத் தீர்வு என்று ஐ.தே.க. அறிவித்துள்ளமை ஜே.வி.பி.யுடன் தான் நெருங்கிவரு வதற்குள்ள விருப்பத்தின் இன்னுமொரு வெளிப்பாடே. ஆயினும், அது அரசின் சிந்தனையை ஏற்கும் நிலைப்

பாடும் ஆகும். அதன்வழியே இராணுவ நடவடிக்கை களை அங்கீகரிக்கும் நிலைப்பாடுமாகும். மேலும், ஏனைய கட்சிகள் (தென்னிலங்கையின்) ஏற்றிராத சமஷ்டி கொள்கையைத் தாம் வைத்துக்கொண்டிருப் பதில் பயனேதுமில்லை என்று ஐ.தே.க.வின் தலைவர் களில் ஒருவர் தெரிவித்துள்ளார். இவற்றின் பின்னணி யில் நோக்கும் போது ஜே.வி.பி.யின் கொள்கைகளுடன் சமரசம் செய்துகொண்டு ஆட்சியைப் பிடிக்கும் முயற்சி களினூடாக அரசின் கொள்கைகளை வலுப்பெறச் செய் வதனால் தென்னிலங்கை ஒரு பொதுக் கருத்தை ஏற்கும் நிலைநோக்கி நகரும் நிலை தெரிகிறது. சொற்பதங் களுக்குள் முரண்பாடுகளைக் கைவிடும் நிலை, கட்சி களுக்குள் முரண்பாடுகளைக் கைவிடச்செய்யும் நிலை வரை வளர்க்கப்படலாம்!

மேற்படி பொதுக்கருத்து அல்லது பொது உடன் பாடு என்னும்படியான சொற்பதங்களுக்குள் நின்று முரண்பட்டுக்கொள்ளாநிலையானது, பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்த்துவிடலாம் என்னும் நம்பிக்கை யினால் உயிரூட்டம் பெறும் ஒன்று ஆகும். இந்த இரவல் புடவையின் நிழலில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்று ஐ.தே.க. கனவு காண்கிறது. இந் நிலையில் இதுவரை காலமும் ஐ.தே.க.வை ஆதரித்து நின்ற சிறுபான்மையினத்தவர்களும் சிறுபான்மையினத் தலைமைகள் பக்கம் சாயத்தலைப்படுவர்.

எதிர்க்கட்சித் தலைவராக இன்று உற்றவர், ஆட்சித் தலைவராக உள்ளவருக்குத் தகுந்த ஒரு மாற்று அல்ல என்னும் ஜே.வி.பி. தலைமையின் அபிப்பிராய வெளிப்பாடு, பொதுக்கருத்தின் அடிப்படையில் ஒற்றை யாட்சியைக் காக்கவல்ல தலைமையைத் தென்னிலங்கை தேர்ந்தெடுக்கும்போது ஐ.தே.க.வின் தலைமைக்குப் பல உண்மைகளைப் புரியவைப்பதாயிருக்கும். *


## மலையக இலக்கியக் கர்த்தாக்கள்




இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட உழைப்பாளிகளே மலையகத் தமிழர் ஆவர். இவர்களே காடாகவும் மலைப் பிரதேசமாகவும் இருந்த மண்ணைச் செழிப்புள்ள வளமுள்ள மண்ணாக்கிய பெருமைக்குரியவர்கள். மலையகத் தமிழர்கள் தமிழ்மொழி, தமிழ்க் கலை கலாச்சாரத்தைப் பேணித் தமிழன் என்ற பெருமையுடன் வாழ்ந்து வருபவர்கள். அத்தகைய ஒரு வாழ்க்கை அமைவதற்கு வழி வகுத்தவர்கள் மலையகத் தமிழ் எழுத்தாளர்களே. மலையகத்தில் மனித இயந்திரங்களாக மாற்றப்பட்டுவிட்ட இந்தத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் திசை திருப்பி அவர்களையும் வெளியுலகம் மனிதர்களாகக் கருதும் மனப்பாங்கினை ஏற்படுத்தப் பாடுபட்ட இலக்கியக் கர்த்தாக்களுள் கோதண்டராம நடேசையர் (1892-1947) முக்கியமானவர். அவரைத் தொடர்ந்து மலையகத்தில் பல இலக்கியக் கர்த்தாக்கள், எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றனர். அவர்களுள் முக்கியமான இலக்கியக் கர்த்தாக்கள் பதினொருவரின் தொகுப்பே ''மலையக இலக்கியக் கர்த்தாக்கள்'' என்னும் நூல் ஆகும்.

மலையக எழுத்தாளர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தவேண்டுமென்ற சுடரொளி வெளி யீட்டுக் கழகத்தின் அடிப்படை இலட்சியமே இந்நூலின் பிரசவம். இலக்கியக் கர்த்தாக்களின் வரலாற்றை எழுதியவரும் தொகுத்தவரும் நூல் தேட்டத்தின் ஆசிரியர் நூலகவியலாளர் திரு. என். செல்வராசா அவர்கள். இந்நூல் முதல் வெளியீடாகும். தொடர்ந்தும் மலையக எழுத்தாளர்களின் வரலாறு நூலாக வெளியிடப்படும். தந்தை செல்வா கூறியபடி மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மட்டுமன்றி மலையக எழுத்தாளர்களின் உயர்வுக்கும் நாம் கைகொடுக்க வேண்டும். சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய உலகத் தமிழ்க் கவிதைப்போட்டியில் மலையகக் கவிஞர் பலர் பங்குகொள்ள வாய்ப்பளித்ததோடு, பரிசும் பெற்றுள்ளனர். ''மலையக இலக்கியக் கர்த்தாக்கள்'' எல்லா நூல் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன. அதேவேளை இந்நூலை வாங்கி ஆதரவு நல்குமாறு எல்லா வாசகர்களையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். இந்நூலை வெளியிடுவதற்கு ஏற்பட்ட செலவை ஈடுசெய்ய தாராள உள்ளம் கொண்ட அன்பர்கள் விரும்பும் தொகையை அன்பளிப்பாக வழங்கி உற்சாகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்நூலைப் பெற விரும்புவோர் தங்கள் பெயர், முகவரி, அஞ்சல் குறியீட்டெண், மின்னஞ்சல் முகவரி முதலான தகவல்களையும் "Chuderoli Publication Society" என்ற பெயருக்கு £ 5.00 காசோலை/மணி ஆர்டரையும் அனுப்பி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**CHUDEROLI PUBLICATION SOCIETY**

15, Rutland Road, London E7 8PQ, UK e-mail : itsampanthan@hotmail.com

# சிந்தித்து இனிமேல் செயல்படு தோழா!

'புதுமைப் பாவலர்' **பொன்னரசு,** பெங்களூர்

இமையாம் எங்கள் மலேசியத் தோழா
இடுக்கண் நீயும் கொடுப்பது முறையோ?
'தமிழினம் என்றோர் இனம்ஒன் றுளதா'
திமிராய் யூசுப் யாகோப் பேச்சிற்கு
தமிழினம் கண்டனக் குரல்கொடுப் பதற்கும்
அமைதிப் பேரணி அனுமதி மறுப்பதோ?-நாங்கள்
அமுத அகிம்சை சத்திய காந்தியின்
அன்பின் வள்ளுவர் வழிவந் தவர்கள்.

வியர்வை சிந்தியே உழைத்துஉழைத்து
வெற்றுப் பொட்டலை விளைநில மாக்கி
நயன்பட கட்டிடம் கட்டிடும் வரையில்
நட்புடன் இருந்தாய்; எல்லாம் முடிந்ததும்
கயமை கொடுமை வஞ்சனை புரியக்
கற்றாய் எங்கள் தலைவரைச் சுட்டாய்!
இயல்பாய் எவரையும் கேளிர் என்றே
எண்ணுவோர் எமக்கோ கேடுநினைத்தாய்!

இத்தனை ஆண்டுகள் இருந்தது போலே
இறுதி வரையில் சோதரர் பால்நீ
மண்ணில் மனிதநல் நேயத் துடனே
இருப்பதுன் கடமையே என்னுயிர்த் தோழா!
உன்னுள் ஒருவனின் தீச்செய லால்தான் - நம்மை
உலகமே உற்றுப் பார்பதைப் பாராய்!
பண்ணிய பாதகச் செயலத னாலே
பாரே சிரிக்க ஊர்கெடச் செய்வதோ?

மதியுடன் மாடாய் உழைத்தவர் பால்உன்
மனத்தில் சூதுடன் சினம்மிகக் கொள்வதோ?
பதட்டத் துடன்தினம் வாழ்வதை விடவும்
பற்றுடன் மனித நேயம்பே ணுவோம்!
புதிதாய் மீண்டும் வேற்றுமை மிகுந்தால்
புண்மை அடையுமே மலேசிய நல்மண்
சிதைவடைந் திடுமே இதுதான் முடிவோ?
சிந்தித் தினிமேல் செயல்படு தோழா!

# சுனில்-சோபனா தமிழ்த் திருமணம்

உலகத் தமிழர் மையப் பொதுச் செயலாளரும், இலண்டன் சுடரொளி இதழின் தமிழகப் பிரதிநிதியுமான உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்களின் திருமகள் சோபனாவுக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஆ. ஜெகநாதன் அவர்களின் திருமகன் மருத்துவர் சுனிலுக்கும் சென்னை ஜே.எஸ். திருமண மண்டபத்தில் 23-11-07 அன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திருமண சடங்குகளின் உள்ளார்ந்த பொருளை விளக்கிக் கூறி தமிழ் நெறிப்படி திருமணத்தை நடத்தி வைத்தார் சத்தியவேல் முருகன்.

முன்னாள் அமைச்சர்கள் இராம. வீரப்பன், கா. வேழ வேந்தன், முன்னாள் துணை வேந்தர்கள் முனைவர் வா.சே. குழந்தைசாமி, முனைவர் ஔவை நடராசன், மேஜர் டாக்டர் ராஜா, காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், தொழிலதிபர் நல்லி குப்புசாமி, முதுநிலை வழக்கறிஞர் இரா. காந்தி, பத்திரிகையாளர் லேனா தமிழ்வாணன், பல் மருத்துவர் ஜே.ஜி. கண்ணப்பன், 'பாலம்' கல்யாண சுந்தரம், சென்னை நகர முன்னாள் மேயர் சா. கணேசன் முதலான சான்றோர் பெருமக்களும் பல்வேறு இலக்கிய அமைப்புகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர். மலேசியா, சிங்கப்பூர், பிரான்சு, மொரிசியசு, அமெரிக்கா முதலான நாடுகளில் இருந்து பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

இலண்டன் சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன் ஏற்பாட்டில் வைத்திய கலாநிதி எஸ். நவரத்தினம் தம்பதிகள், வைத்திய கலாநிதி சி. ஞானச்செல்வன் தம்பதிகள், வைத்திய கலாநிதி சி. சோமசேகரம் தம்பதிகள், அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் நிறுவனர் நா. சீவரத்தினம், திக்கரை முருகன் திருப்பணிச் சபைத் தலைவர் சிவா மகேசன், கிருபானந்தன் உமா தம்பதிகள், ஞானவடிவேல் கௌசல்யா தம்பதிகள் ஆகியோர் சார்பில் வாழ்த்து மடல் அளிக்கப்பட்டது.

இல்வாழ்க்கையைத் தொடங்கும் இளம் இணைப் பறவைகள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்கவென சுடரொளி வாழ்த்துகிறது.

*வண்ணப் படங்கள் பக்கம் 26இல் பார்க்க*



## 'இப்படியும் மனிதர்கள்' நாடகம்!

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நடைபெற்ற விழாவில் ''இப்படியும் மனிதர்கள்'' என்னும் சமூக நாடகம், சைவ முன்னேற்ற மூத்தோர் சங்கத்தினரால் மேடை ஏற்றப்பட்டது. திருமதி. புவனேஸ்வரி சபாரட்னத்தின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட இந்நாடகம், நிஜத்தின் நிழல்களாக, எம் சமூகத்தில் உலாவிவரும் சில மனிதர்களின் மாறுபட்ட குணங்களைச் சித்திரித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந்நாடகத்தில் பங்கேற்ற வர்களை இப்படத்தில் காணலாம். இடமிருந்து வலம் திருமதி. புவனேஸ்வரி சபாரட்னம், திரு. நடா வேலாயுதம், திருமதி. ஸ்ரீமதி பொன்னுத்துரை, திருமதி. அன்னலஷ்மி மூர்த்தி, திருமதி. திரிபுரசுந்தரி கணேசரட்னம், திருமதி. சரோஜா கனகசபேசன், திருமதி. தங்கரட்ணம் சரவணா.

ஒரே கூரையின் கீழ்

## உங்கள் சகல பல், வாய் சம்பந்தமான வியாதிகளுக்கும்

We treat you Royally

# எல்லா வயதினருக்கும் பல், வாய் சம்பந்தமான சிகிச்சைகள் செய்யப்படும்

உங்கள் பூரண திருப்திக்கு உத்தரவாதம் அளிக்கும்

பிரபல பல் வைத்திய நிபுணர்

# டாக்டர் ஆதிகணபதிசோமசுந்தரம்






**Cosmetic Dentistry**
அழகுபடுத்தும் பல் சிகிச்சை






**Geriatric Dentistry**
முதியோர் பல் பராமரிப்பு




**Braces**
கிளப் போடுதல்



**Root Canals**
பல் வேர்களை அடைத்தல்




**Gum Diseases**
முரசு கரைதலை நிறுத்துவதற்கான சிகிச்சை



**Wisdom Teeth Extraction**
ஞானப்பல் எடுத்தல்



**Dentures**
கட்டுப்பற்கள்



**Bleaching**
பற்களை வெண்மையாக்குதல்

- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- கிளிப் போடுதல்
- பற்களை வெண்மையாக்கல்
- ஞானப்பல் எடுத்தல்
- கட்டுப்பற்கள்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்
- இன்னும்பல.....

# 416-750-9969

**2191 WARDEN AVENUE, SUITE 300, SCARBOROUGH, ONT. M1T 3N9**
**(Warden & Sheppard)**

## மாபெரும் 'தைப்பொங்கல் இசை விழா - 2008'

பிரபல தென்னிந்திய நடிகர்கள் பாடகர்கள் கலைஞர்கள் பங்குகொண்டு உங்களை மகிழ்வித்துக் கலக்கப்போகும் மாபெரும் 'தைப்பொங்கல் இசை விழா - 2008'.

உங்கள் நினைவுகளை விட்டு அகல முடியாத இன்னிசை இரவாகவும் தாய் நிலச் சிறார்க்கு நிதியுதவி வழங்கிய மன நிறைவையும் அளிக்கும் 'தைப் பொங்கல் இசை விழா - 2008' இரண்டாம் வருடம் வெண்புறா நிறுவனம் நிகழ்த்துகின்றது.

இலங்கைத் தீவில் அரசபடைகளின் தொடர்ச்சி யான போர் முன்னெடுப்புகளால் தாக்கப்பட்டு அங்கங் களை இழந்து ஊனமுற்றுள்ள ஆயிரக்கணக்கான சிறார் களுக்குச் செயற்கைக் கால்களை வழங்குவதற்கும், மருத்துவ உதவிகளைச் செய்வதற்கும், பாதிப்படைந் துள்ள சிறார்களின் கல்வி வசதிகளை ஒழுங்கு செய்து கொடுப்பதற்கும், அவர்கள் எழுந்து நடமாடி அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு அவசியமான சக்கரக் கதிரைகள், கைத்தடிகள் போன்றவற்றைக் கொடுத்து உதவுவதற்கும் வேண்டிய பாரிய நிதியைத் திரட்டும் நோக்கங்களில் ஒன்றாகவே இந் நிகழ்ச்சியை வெண் புறா நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது.

வூட்கிறினில் (Woodgreen) அமைந்துள்ள அலெக் சாண்டிரா மாளிகையின் பிரமாண்டமான மண்டபத்தில் தை மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் பங்கு பற்றி மகிழ்வதுடன் தாயகத்தில் அல்லலுறும் சிறாரது நல்வாழ்விற்குத் தங்கள் பங் களிப்பை வழங்கி இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகத் தொடர்புகளுக்கு
வெண்புறா அலுவலகம் - 0870 609 1053

## தையாள் வந்தாள்!

புதிய பாரதி, கனடா

சூரியக் கதிர்கள் காணச்
சில்லிடும் காற்று வீச
ஏருளம் காட்டும் தையின்
எழிலெலாம் கனிகள் மேவப்
பேருளம் மகிழ்வு கொள்ளப்
பூத்திடும் தமிழ்மண காட்சி
சேருல கெல்லாம் சொல்லச்
சிறந்ததே பொங்கல் அம்மா!

போரிடும் வாழ்க்கை ஒன்றைப்
புகுத்திய வாதை ஆட்சி
காரிடும் நிலப்பண் மீது
கடும்பகை குதறக் கண்டும்
ஊரிடும் கதறல் சாவும்
ஒட்டரும் படையும் இட்ட
வாரிடும் கண்ணீர்க் குள்ளும்
வந்தது தையின் நாளே!

கொன்றுமே தமிழர் சாகக்
கூட்டமாய் நிற்கும் சிங்கர்
வென்றுமே தருவார் என்ற
விசமிடும் எட்டர் சாதி
இன்றுமே வந்தான் என்ற
இழிகதைச் சரிதம் கண்டும்
மன்றிலே தமிழர் தையை
மதித்துமே பொங்கல் வைத்தோம்!

வெற்றியே வெற்றி காண்போம்
விசமிகள் ஓடக் காண்போம்
சுற்றிய பகைதுள் ஆகும்
சுதந்திர ஆட்சி பொங்கும்
எற்றிய பகைவன் ஓட்டர்
எல்லோரும் வீழ்வர் தாய்மண்
முற்றிலும் தமிழர் வெல்லும்
முகத்தொடு தையாள் வந்தாள்!

## சிசெல்சு தீவில் பொங்கல் விழா

சிசெல்சு தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா சிசெல்சு தீவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அங்குள்ள பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் மார்கழி 28 ஆம் நாள் நடைபெற்ற விழாவில் தமிழகத்திலிருந்து திரைப்பட இயக்குநர் வி. சேகர், கவிமுரசு அப்துல் காதர் ஆகிய பெருமக்கள் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

சிசெல்சு தமிழ் மன்றத் தலைவர் சி. பொற்செல்வன் தலைமையேற்க, மங்கள இசைக்குப்பின் திருமதி மகாலட்சுமி மகேந்திரன் குத்து விளக்கேற்ற, செல்வி ஜனனி பாஸ்கரின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. செல்வி விசாலி இராமகிருட்டினனின் நடனத்துக்குப் பின் மாரிமுத்து அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சி. பொற்செல்வன் அறிமுகக் கவிதையையும் வாசித்தார். உ. சகாபுதீன், செ. ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புகுந்த நாடா? பிறந்த நாடா? எனும் தலைப்பில் மக்கள் இயக்குநர் வி. சேகரும் தமிழர் வாழ்விலோர் திருநாள் எனும் தலைப்பில் கவிமுரசு அப்துல்காதரும் சிறப்புரை நிகழ்த்தினர். இறுதியில் கே. சுப்பிரமணியன் நன்றியுரை நவின்றார். க. பழனி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

# சுயநிறைவு காண வீட்டுத்தோட்டம்

க.பொ. தம்பிராசா

*சென்ற இதழ்த் தொடர்ச்சி*

## முளைக் கீரை

**சா**தாரண (முளைக் கீரை) விதையை நன்கு சொகுசாகப் பண்படுத்திய, பசளை போட்ட நிலத்தில் தூவி லேசாகக் கிளறி விட்டுத் தண்ணீர் ஊற்றிவர ஒரு மாதத்தின் பின் கீரை கிடைக்கும். வீட்டுத் தேவைக்கு என்றால் வேரோடு பிடுங்காமல் இலைகளை மட்டும் கிள்ளி எடுத்தால் மீண்டும் கீரை கிடைக்கும். விற் பனைக்கு என்றால் வேரோடு பிடுங்கிக் கட்டுக்கட்டாக விற்பனை செய்வதுண்டு. புல், பூண்டுகளைப் பிடுங்கி விட்டு, பசளை போட்டு, தேவையானால் கிருமிநாசினி தெளித்தால் நல்ல பலன் பெறலாம். கிருமி நாசினி தெளித்தால் ஒரு கிழமைக்குப், பின்னர் தான் கீரை பிடுங்க வேண்டும். அதையும் நன்கு தண்ணீரில் அலசித் தான் பாவனைக்கு எடுக்க வேண்டும்.

சில கீரைச் செடிகளை வளரவிட்டால் பெரிதாக வளர்ந்து பூக்கும். அதில் இருந்து விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எல்லாப் பயிர்களில் இருந்தும் விதை கட்கு எனச் சில காய்களைப் பிடுங்காமல் விட்டு, அவற்றைக் காயவைத்துப் பாதுகாத்தால் அடுத்த வருட மும் பயன்படுத்தலாம். விதைக் கிழங்குகளையும், மர வள்ளித் தடியையும் அப்படிப் பாதுகாக்க வேண்டும்.

பொன்னாங்கண்ணி, வல்லாரை, கங்கூடன் போன்ற கீரை வகைகள் முன்னர்த் தென்பகுதிகளில் இருந்துதான் எமக்குக் கிடைத்தன. இப்போது தமிழ்ப் பகுதிகளிலும் உண்டுபண்ணப்படுகிறது. வீட்டுத் தோட்டத்தில் பயிரிட ஒன்பது அங்குலப் பள்ளமான சிறுப் பாத்திகளை அமைத்து, அதில் நன்கு ஊக்கிய கூட்டுப் பசளைகளை மண்ணில் கொட்டிக் கலந்து, கூடிய தண்ணீர் ஊற்றி வேருடன் உள்ள கீரைத்தண்டுகளை நட்டு உண்டு பண்ணிக் கொள்ளலாம். மற்றப் பயிர்களைவிட இக் கீரைவகைக்குக் கூடுதலான நீர் தேவை. இடையிடையே பசளை போடுவதுடன் கிருமி நாசினிகளையும் பயன் படுத்த வேண்டி வரும்.

ஊடுபயிர் செய்கை முறையும் உண்டு. வெங் காயம் போன்ற காலம் குறைந்த பயிர் வகைகளைச் செய்கை பண்ணும்போதே இரசவள்ளி, கருணைக் கிழங்கு போன்றவற்றை நட்டால், ஒரே நிலத்தில் இப் பயிர்கள் பலனை முன்னும், பின்னும் பெறலாம்.

கத்தரி போன்ற பயிர் செய்த நிலத்தில் அடுத்த தடவை வேறு பயிர் செய்ய வேண்டும். இது சுழற்சி முறைப் பயிர் செய்கை எனச் சொல்லப்படும். நிலத்தின் தன்மை பேணப்படுவதற்காகச் சணல் போன்ற பயிரை உண்டுபண்ணி வளரும் இடைப்பருவத்தில் பயிர் பச்சையாக நிலத்தில் புதையக்கூடிய வகையில் கொத்தியோ உழுதோ விடப்படுவதுண்டு.

மேலதிகமாக நிலம் பாவிக்கப்படாமல் இருந் தால், சேனைப்பயிர் எனச் சொல்லப்படும் கூடிய சத்து கொண்ட குரக்கன், சாமி, வரகு, சோளம், உளுந்து, பயறு போன்றவற்றை உண்டுபண்ணலாம். இவை அதிக உடல் உழைப்பின்றிப் பலன் தரக் கூடியவை. மேட்டு நிலத்தில் மழைக் காலத்தின் முன்னரும் பள்ள நிலமாகில் மழைக் காலத்தின் பின் பகுதியிலும் லேசாகக் கொத்தி விதைத்துவிட்டால் முளைத்துவிடும். பயறு மட்டும் காய்கள் காய்ந்த உடன் அவற்றை மட்டும் கொய்து எடுக்க வேண்டும். இல்லையேல் முதல் வந்தவை முற்றிக் காய்ந்து வெடித்து நிலத்தில் கொட்டிவிடும். மற்றப் பயிர் வகை பருவமடைந்து காய்ந்த பின் ஒரே முறையில் அறுவடை செய்யலாம்.

பூண்டு, கடுகு, மல்லி, வெந்தயம், இஞ்சி, மஞ்சள் போன்றவற்றையும் உண்டு பண்ணலாம். ஐப்பசி மாதத்தில் பூண்டை ஒவ்வொரு பல்லாகப் பிரித்து நட்டால் முளைக்கும். மற்றவற்றை மழைக்கால முடிவில் விதைத்தும் நட்டும் பயன் பெறலாம். மஞ்சள், பச்சைக் கிழங்கு கிடைப்பது அரிது. இருக்கும் இடத்தில் பெற்றுப் பெருக்கிக் கொள்ளலாம். மல்லியை லேசாக உடைத்து தான் விதைக்க வேண்டும். மனிதர்களின் உணவில் பழங்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன. சிறு காணி என்றால் மா, பலா போன்ற பெரிய பழ மரங்களை உண்டு பண்ண முடியாது. அவற்றின் நிழல் அதிக இடத்தை மூடிக்கொள்ளும். பப்பாளி, தோடை, மாதுளை போன்றவற்றையும் கொடித் தோடை வாக்கத்தையும் உண்டுபண்ணலாம். கொடித்தோடை இலகுவாக உண் டாகக் கூடியது. கதியால்களை நட்டுக் குறுக்கே தடி களைக்கட்டி அதில் படர விடலாம். பழுத்த பழங்களைக் கோடைக் காலத்தில் கரைத்துக் குடிக்க நல்லவை. இட வசதியைப் பொறுத்துச் சிறிய மரங்களாக இருந்து பலன் தரும் விலாட் மரங்கன்றுகளை உண்டுபண்ணலாம். மற்ற இன மாங்கன்றுகளையும் வருடா வருடம் கத்தரித்துச் சிறிய மரமாகக் கட்டுப்படுத்திப் பயனடையலாம்.

தென்னை மரத்திலும் குறுகிய காலப் பலன் தரும் இனம் உண்டு. இளநீருக்காகச் செவ்விளை இனத் தென்னம் கன்றுகளை இடவசதியைப் பொறுத்து நடலாம்.

## கூட்டுப் பசளை :

சாதாரணமாக வீடுகளில் முற்றத்தையோ காணி யின் மற்றப் பகுதிகளையோ கூட்டி, சுத்தம் செய்யும் போது சேரும் சருகு மற்றும் குப்பைகளை எரிப்பது வழக்கம். அது தவறு. கதியால் போட்டுக் கிடுகாலோ ஓலையாலோ சிறு கூடு கட்டி அதில் கொட்டினால் உக்கிப் பசளையாகும். பச்சை இலை, ஆடு மாட்டின் எச்சம் சேர்த்தால் அதிகப் பயன் உண்டு. இப்படி இரண்டு இடத்தில் சேர்க்கவேண்டும். முதல் வருடக் கலவை உக்கியபின் அடுத்த வருடம் பயன்படும். கொட்டும் கலவையில் கம்பி, கண்ணாடி, தகரம், பிளாஸ்டிக் போன் றவை தவிர்க்கப்பட வேண்டும். லேசாக மண்ணைத் தூவித் தண்ணீர் தெளித்து வெயிலில் படாமல் மூடி வைக்க வேண்டும்.

சமையலின் போது சேரும் அரிசி கழுவும் நீர், கஞ்சி, காய்கறிகளின் கழிவு, பழங்களின் தோல், தோட் டத்தில் சேரும் புல், கதியால்களில் கிடைக்கும் குழை போன்றவை ஒரு ஆட்டிற்கோ, மாட்டிற்கோ போதும். கால்நடையின் மூலமும், சில நாட்டுக் கோழிகள் மூலமும் பயன்பெறலாம். திட்டமிட்டு நேரத்தையும், நிலத்தையும் பயன்படுத்தினால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

❋

சிறுகதை

# வாய்ப்பு

வித்தியாலய அதிபர் ஆள்விட்டுக் கூப்பிட்டதிலிருந்து லீலாவுக்கு இதயம் படக் படக்கென்று அடித்தபடி என்னவாயிருக்கும்? என்று மனத்தைக் குழப்பிக் கொண்டேயிருந்தாள். ஐயாத்துரை மாஸ்டர் வயலில் கச்சான் புடுங்கிக்கொண்டிருக்கின்றார். அவர் மனத்தில் அவசரம் தெரியவில்லை. ''இஞ்சையப்பா தேத்தண்ணியைக் குடிச்சிட்டு அதிலை ஒருக்கா போட்டு வாருங்கோ ஏதேனும் பிரச்சினையோ தெரியாது'' லீலா அவசரப் படுத்தினாள். ஐயாத்துரை மாஸ்ரர் அப்படியே செய்தார். சைக்கிள் அரை மைல் தூரத்திலிருக்கும் கல்லூரியை நோக்கிப் புறப்பட்டது.

ஜனனி பதினோராம் ஆண்டில் படிக்கின்றாள். யாழ்ப்பாணத்து அகதிக் குடும்பம், உறவும் இல்லை, பகையும் இல்லை. ஒன்றுமே இல்லை என்ற நிலையில் மனிதாபிமானம் நீட்டிய கரத்தை எட்டிப்பிடித்தபடி காட்டு நிலத்துண்டில் கொட்டில் கட்டி இருக்கின்றது அக் குடும்பம். கெட்டிக்காரப் பிள்ளைகள்தாம், ஆனால் அதிபர் அவசரமாக அழைத்ததில் ஏனோ ஒரு அச்சம் இருந்தது. சைக்கிளை மரத்தின் கீழ் நிறுத்திய ஐயாத்துரை மாஸ்டர் அதிபரின் அறையை நோக்கி நடந்தார். ''ஐயா வாருங்கோ! நாளைக்குக் காலை 10 மணிக்கு அக்கராயன் மகாவித்தியாலயத்தினைப் பரிசளிப்பு விழா என்று அறிவித்திருக்கின்றார்கள். உங்கள் மகள் ஜனனி முதலாமிடத்தில் பாஸ் பண்ணியிருக்கின்றாள். முதலாம் பரிசு பணமாக ஐயாயிரம். தடை, தாமதம் ஒன்றும் இருக்கப்படாது நேரத்துக்கு வந்திடவேணும்.''

அதிபர் பரமேஸ்ரவன் மாணவர்களை அச்சுறுத்திப் பழக்கப்பட்ட வாயினால் கடிதம் ஒன்றை நீட்டியபடி கூறினார். அதிபருக்கே மாலை போடலாம் போல இருந்தது. நன்றி கூறிக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வீடு நோக்கிப் புளுகத்துடன் ஓடினார் அந்த ரியூசன் மாஸ்ரர், வாய்ப்புகளை வலிந்து தேடி அதற்காக அலையும் கூட்டம் இருக்கவே இருக்கின்றது. ஆனால் வாய்ப்புகளை விதி திணிக்கும் போதும் அதனை விடாது பற்றிக்கொண்டு செயற்பட வலிமை வேண்டுமே என்று அவர் மனம் அங்கலாய்த்தது. நல்லவனாக வாழ்ந்தால் நல்லவை எல்லாம் நடக்கும் என்று தப்பாகவே உலகத்தைப் புரிந்து கொண்ட ஏமாளி அவர். வல்லமை என்பது அவர் வீட்டில் நரிக்கொம்பு. இதனால்தான் வல்லவனாக இல்லையே என்பது அவருக்கு நிரந்தரக் குறை.

அக்கராயன் மகாவித்தியாலயம் கிளி நொச்சி மாவட்டத்தில் எங்கோ இருப்பது தெரியும். முல்லைத் தீவின் உடையார் கட்டில் இருக்கும் இவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் எங்கும் போனதே இல்லை. இங்கு உயிர்களைப் பாதுகாப்பதுடன் மட்டும் திருப்திப் பட்ட நிலையில் எதிர்கால நல்வாழ்வுக்கு ஆதாரமாகப் பிள்ளைகளின் கல்வியை மட்டும் நம்பியிருக்கும் இழப் பதற்கேதுமற்ற குடும்பம். ஐந்து மைல்கள் போவதே ஒரு நீண்ட பயணம் எனற நிலை. அன்று மாலையே புறப்பட வேணடும். உடைந்த பாலத்தடியில் இறங்கி சைக்கிளைத் தள்ளிச்சென்று லத்தைக் கடந்த பின் மீண்டும் ஏறிப் புல்லுக்கட்டைகள், நாயுண்ணி பற்றைகளை விலத்தி சைக்கிள் சென்றது.

இரண்டு மணிக்குக் கல்லூரி விட்டு ஜனனி வருமுன்பே லீலா ஆயத்தமாகியிருந்தாள். வந்த வேகத்தில் அரையும் குறையுமான ஆயத்தங்களுடன் குடும்பம் வீதியில் இறங்கிவிட்டது. முதலில் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலடிக்குப் போகவேண்டும். அது எதிர்பார்க்க முடிந்த கரைச்சல். சண்டைக்கு முந்திய காலத்தில் கொழும்பில் பிரமச்சாரியாக வாழ்ந்த காலத்தில் முறிகண்டியில் நீண்ட தூர பஸ்கள் நிற்கும். அதனால் ஐயாத்துரைக்கு நன்றாகப் பழக்கப்பட்ட இடம். ஆனால் அங்கிருந்து அக்கராயன் போகமட்டும் தெரியாது. அங்குள்ள பலரையும் போலக் கையும், காலுமே துணை என்று நம்பிக்கொண்டும் ஆண்டவனை நினைத்துக்கொண்டும் புறப்பட்டுவிட்டால் விசாரித்துப் போகலாம் என்று கோணேஸ் மாஸ்ரர் உற்சாகமளித்துக் கதைத்ததில் ஓரளவு துணிச்சல் இருந்தது. மூத்த பிள்ளை கல்விமான்களால் பாராட்டப்படும் வைபவத்தைப் பார்ப்பதில் உள்ள ஒரே ஆர்வம் பின் நின்று தள்ளியது. மிகவும் தட்டுப்பாடான உயிர்க்காப்பு மருந்துகள் டப்பிகளில் போடப்பட்டுக் கைப்பையில் திணிக்கப்பட்டிருந்தன. வழிவழியே கடைகள் இருக்கும் உண்பதற்கோ குடிப்பதற்கோ எதையும் வாங்கிக்கொள்ளலாம் என்று ஒரு தவறான விளக்கத்தினால் மனம் நிறைந்திருந்தது. உற்சாகமாகவும் இருந்தது.

முறிகண்டி வரையில் மூன்று வாகனங்களில் சென்று இறங்கும்போது மாலை ஆறு மணியாகி விட்டிருந்தது. சூடான வடைகள் மூவருக்குமாக ஆறு வாங்கியாயிற்று. அதுவே இரவுக்கும் சாப்பாடாக இருக்கும் என்பது அப்போது தெரியாது. சூரியன் மறையவில்லை. சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மூவருக்கும் நம்பிக்கை மட்டும் இருளடைந்து கொண்டு வந்தது. அக்கராயனில் நாளை காலை பத்து மணிக்கு விழாவில் நிற்கவேண்டும். அது வரையுள்ள பத்து மைல்களைக் கடந்து செல்ல வேண்டும். இரவினூடாக, காடுகளினூடாக வெளிச்சமும் ஆட்கள் புழக்கமும் அற்ற பாதையூடான பயணம், வன்னேரிக்குளத்து யானைகளையும், பாம்பு பல்லிகளையும் சமாளித்து, இருதய நோயைக் குளிசைக்களால் சமாளித்துச் சென்றடைய வேண்டும்.

சந்தியில் நிற்பதற்குப் பொறுமை இடமளிக்கவில்லை. வாகனங்கள் எதுவும் போகவில்லை. விசாரித்

ததில் இனி பஸ் இருக்காது என்று சிலர் அரைகுறை நம்பிக்கையுடன் கூறினர். சில பார வாகனங்கள் ட்ரக்டர்கள் விறகு, லொறி. ஒன்றிரண்டு கைகாட்டி மறித்தபோது ஏற்கவில்லை. நேரம் வீணாகுவதை ஒரு பொழுதும் சகிக்காத ஐயாத்துரை மாஸ்ரர் நடக்கத் தொடங்க மகள் ஜனனியும், மனைவி லீலாவும் தொடர்ந்து நடந்தனர். ஒவ்வொருவர் தோளிலும் ஒவ்வொரு தோல் பை தொங்கியது.

அடிக்கடி பொக்கற்றைத் தொட்டுப் பார்த்து மருந்துகள் இருப்பதை உறுதி செய்துகொண்டு அப்பா முன்னே நடந்தார். அவசரத்திலும் 250 ரூபா கொடுத்து வாங்கிய பற்றரியைப் போட்டுக் கையிலெடுத்துக் கொண்ட 'ரோச்' ஒரு கையில், பற்றரி மட்டுமல்ல மேலதிகமாக ஒரு பல்ப் கூட தயார் நிலையில் இருந்தது. சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் செல்வது போன்ற மன ஆயத்தத்துடன் மூவரின் பயணம் நடையில் தொடர்ந்தது. முதல் ஐந்து மைல்களைக் கடக்கும் வரையில் சில வாகனங்கள் வீதியால் சென்றன. அவை எவையும் பயணிகள் பயணிக்கும் வாகனமல்ல. ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொரு பிரச்சினையுடன் இழுத்து... இழுத்தும், புழுதிகளால் குளித்தும் சென்றன. பார்க்கவே பரிதாபமான காட்சி. ஒரு மோட்டார் சைக்கிளில் ஐந்து பேர், ஒரு மிதி வண்டியில் 4 பேர் என்று சென்றனர். இரவு பத்து மணியளவில் கடந்து சென்ற ஓரிரு வாகனங்கள் வீசிய வெளிச்சத்தில் அந்த கிரிவல வீதி எங்கிருக்கின்றது என்பதை இனங்கண்டறிய முடிந்ததில் மகிழ்ச்சியாக இருந்தது. வாகனப் பலன் அவ்வளவுதான். இனிமேல் மனோபலம்கூடத் தோற்கும்நிலை வந்தது. வீதியில் சன சஞ்சடி இல்லை. வீதி எது என்பதே தெரியவில்லை. கிரிவல வீதியின் இரு புறங்களிலும் காடு. குருவிகளின் ஒலி, சிறு விலங்குகளின் அரவம் இடைக்கிடை கேட்டன. வீடுகள் இல்லை. இருந்தாலும் 200 ரூபாவிற்கு மண்ணெண்ணெய் வாங்கி எரிப்பதற்கு மகாராஜாக்களாக அந்த அகதிகள் இருப்பார்களா? இத்தனைக்கும் மத்தியில் திருடர்கள், கொள்ளையர்கள் எதிர்ப்பட்டால் என்ன செய்வது? யானைக்காடு என்று எல்லோரும் எச்சரிக்கையாகப் பழகும் இடத்தினூடாக அக்குடும்பம் நடு இரவு 12 மணிக்குப் பயணம் செய்கின்றது. கையில் இருக்கும் ரோச் மட்டும் தவறு மானால் மறு நாள் அவர்களின் சுவடுகூட இராது என்று நம்பலாம்.

''அப்பா, ஒரு வெளிச்சம் தெரியுது, வீடாக்கும்'' ஜனனி குதூகலம் தொனிக்கக் கூறினாள். அவளது குரல் கலங்கி வெளிப்பட்டது. லீலா சொன்னாள். ''ஓமப்பா காட்டு மரங்களை யாரோ எரிக்கினம். ஒரு கொட்டிலும் தெரியுது. வாங்கோ கதைப்பம். இனிமேல் ஒரு அடி கூட எடுத்து வைக்க இயலாது. எனக்கு மயக்கம் மயக்கமா வருகுது'' இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அனுபவங்களை லீலா முதன் முறையாக வெளியிட்டாள். முன்னே நடந்த அப்பா பின்னே ரோச் அடித்துப் பார்த்துக் கொண்டார். ஜனனி தள்ளாடியபடி கடைசியாக வந்தாள். மூவரின் நிலையும் ஒன்றாக இருந்தது. இந்நேரத்தில் மழையும் வந்தால்...! என்று திகைக்கவே பயமாக இருந்தது. வாயிலிருந்து பேச்சுகளே வருவதாக இல்லை. காட்டு மரங்கள் எரியும் வெளிச்சத்தில் அடிக்கட்டைகளை விலத்தி விலத்தி அந்தக்கொட்டிடில் வாசல் வரை...

முதலில் நாய்கள் குரைத்து வீட்டாரை எழுப்பின. ''கொஞ்சம் தண்ணி தாங்கோ'' என்றது தான் தாமதம். ''இப்படி இருங்கோ'' உரப்பையினால் செய்த கொட்டில் கதவைத் திறந்து வெளியே வந்த வீட்டார் திண்ணையைக் காட்டிக் கூறினர். தண்ணீர் வந்தது. மூவரும் மாறி மாறிக் குடித்தனர். நடந்து வாறியள் போலக் கிடக்கு. நடுச்சாமம், யானைக்காடு, இதிலைக் கிடந்திட்டு விடிய போங்கோ'' உறவினருமல்லாத நண்பருமல்லாத அந்த வீட்டார் ஒருமித்துக் கூறினர். ''இன்னும் எட்டு மைல் போகவேணும். வாகனங்களும் இல்லை. குமார் பிள்ளையோட...'' மனிதம் மறித்தது. கைவிளக்கின் ஒளியில் பேச்சுகள் நடந்தன. ''நாங்கள் நாளை காலை பத்து மணிக்கு அங்கை நிற்கவேணும்... பஸ் ஓடுறதொண்டு ஆட்கள் கதைச்சவை. அந்தத் துணிவில் தான் வெளிக்கிட்டனாங்கள்! நாளைக்குக் காலை பத்து மணிக்கு ஒரு பஸ் இதாலை போகும். அதைப் பிடிக்கலாம். இந்தத் திண்ணையில கிடந்திட்டு விடியப் போங்க'' சிறிது நேரம் மௌனம். ''காலை பத்து மணிக்கு ஏறினால் அங்கை போக 12 மணியாகி விடும். வந்தும் பிரயோசனம் இல்லாமல் போய்விடும்'' இது ஐயாத்துரை, எவரிடமிருந்தும் பதிலில்லை. முறி கண்டியில் வாங்கிய வடைகள் வயிறுகளுக்குள் இறங்கின. அரவணைத்து ஆறுதல் கூறிய கரங்களுக்கு நன்றி கூறிவிட்டு மீண்டும் நடை ஆரம்பித்தது. நேரம் ஒரு மணியிருக்கும். இந்த அபார துணிச்சலை இவர்களுக்கு யார் கொடுத்தது? மாசேதுங்கின் நீண்ட பயணக் கட்டுரைகளா?


அந்த ஒக்டோபர் மாதத்தின் 31ஆம் திகதி மாலை கொட்டும் மழையில் 18 மணித்தியாலங்கள் இடையில் நிற்காமல் யாழ்ப்பாணத்திலிருந்து தென் மராட்சி வரை நடந்து பெற்ற பயிற்சியால் கிடைத்த மன உரம் தானா? மேலும் ஒரு மைல் தூரம் நடுக்காட்டி னூடாக, நடு நிசியில்.. ஒரு சறுக்கல் சத்தத்துடன் அப்பா சறுக்கிப் பாதைக்கு வெளியேயிருந்த பள்ளத்தினுள் விழ அவரை இழுத்துப் பிடிக்க ஓடி வந்த மற்றவர்களும் விழுந்து விடவே பயணத்தை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. தூரத்தில் தெரியும் ஒரு வெளிச்சம் வரை மீண்டும் தடக்கித் தடக்கி அவர்கள் நடந்தனர். காட்டுக்கட்டைகளைப் போட்டு எரித்துக் கொண்டிருந்த ஒரு அகதிக் குடும்பம் வழி மறித்தது. வைக்க முடியாத நிலையில் அவர்கள் அந்தக் கொட்டிலினுள் அடைக்கலமாகினர். மிகையான ஆர்வமும், துணிச்சலும் ஆபத்தைத் தேடி விட்டன. ஐயாத் துரை நீட்டி நிமிர்ந்து கிடந்தார். அந்த வீட்டார்

ஒரு ஓலைப்பாய் கொடுத்து உதவினர். நெஞ்சுவலி சிறிது சிறிதாக அதிகரித்து வந்தது. இது எதிர்பார்க்கப் பட்டதுதான். ஆனாலும் நேரம் பின்னிரவு 2 மணி. மருந்துகளுக்கு அடங்கும் பரிமாணத்தில் இல்லைப் போலிருந்தது. அந்த வீட்டார் அன்புடனும் ஆதரவுட னும் நடந்தது ஆறுதலாக இருந்தது. டாக்டர்களின் அறிவுரைப்படியான குளிசைகள் போடப்பட்டன. நாக்கின் கீழ் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு குளிசைகள் வைக்கப்பட்டன. லீலா ஒரு புறமும் ஜனனி மறுபுறமும் இருந்து கொண்டனர். அந்த வீட்டாரின் மண்ணெண் ணெய் விளக்குப் பெரிதும் உதவியது. தேநீரும் சுடுநீரு மாக மாறி மாறி வைத்துக் கொடுத்தனர். ''வராமல் விட்டிருக்கலாம்'' நீண்ட பெருமூச்சுடன் ஜனனி கூறினாள். அதே வார்த்தைகள் மற்றவர்களின் வாய் வரை வந்திருந்தனவென்றாலும் வெளிப்படவில்லை. பிள்ளையின் மனம் பாதிப்படைந்து விடலாம் என்பதால் வெளிப்படவில்லை. அப்பா அமைதியாக உறங்கினார். அக்கராயன் கல்லூரியில் இயங்கும் கல்வி அலுவலகத்தில்தான் அந்தக் குடும்ப நண்பர் தனபால் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தனர். அந்த இடப் பெயர்வு யார் எங்கு இருக்கின்றார்கள் என்பதையே தெரியாமல் செய்து விட்டிருந்தது. எப்படியாவது அங்குச் சென்று அவரைச் சந்தித்துவிட்டால் பெரும் ஆறுதலாக இருக்கும் என்றும் அவரே லீலாவையும் ஜனனியையும் உறவினர்களிடம் சேர்த்து விடுவார் என்று தனது இறுதி நினைவுகளை ஓட விடுகின்றார் அப்பா. அதுவரை தனது உயிர் போகாமலிருக்குமா என்பதுதான் அவரின் மனத்தை வாட்டியது. தனது நினைவுகளை வெளிக்காட்டாமல் அமைதியாக உறங்கு வது போல் கிடந்தார். மன உறுதி இதய நோய்க்கும் மருந்து போலும்! விபரீதம் எதுவும் நடைபெறவில்லை. மறுதினம் காலையும் துணிச்சலுடன் நடையாகவே அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சென்றடையும் போது நேரம் 9.30. அந்த 18 மைல் பயணத்தில் அவர்கள் சந்தித்த ஒரேயொரு தெரிந்த மனிதர் கோணாவில் யோக நாதன். நண்பர் என்ற வகையில் வழியில் சந்தித்த அவரிடம் நடந்தவை யாவற்றையுமே கூறியிருந்தனர். விழா ஏற்பாட்டாளர் களின் சமையல் வேலையிலும் ஈடுபட்டிருந்தவர் அவர்.

பான்ட் வாத்தியங்கள் சகிதம் ஒவ்வொரு பாடத் திலும் முதலாவதாகப் புள்ளிகள் பெற்ற மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தேசியக் கொடியேற்றும் வைபவம் நடைபெற்று விழா தொடங்கியது. கல்வி அதிகாரிகள், தலைமை நிருவாகிகள், அரசாங்க அதிபர் ஆகியோர் உரையாற்றினர். பரிசில்கள் வழங்கப்பட்டன. தலைமை தாங்கிய அலோசியஸ் அடிகளாரின் விருப்பின் பேரில் பெற்றோரின் சார்பில் ஒருவர் உரையாற்ற அழைக்கப் பட்டார். திட்டமிட்டுக் காத்திருந்தவர்கள் போல ஒரு கல்வித் திணைக்கள அதிகாரி மண்டபத்தில் அமர்ந் திருந்த ஐயாத்துரையை நோக்கி வந்தார். காதோடு காதாக ''நீங்கள் பேச வேண்டும்'' என்றார். என்ன அடிப்படையில் ஐயாத்துரை இனங்காணப்பட்டாரோ தெரியாது. ஒரு வேளை கோணாவில் யோகநாதன் கதை சொல்லியிருக்கலாம். கடந்த இரவு நிச்சயமாகப் பிரியவிருந்த உயிர் பிரியவில்லை என்ற விடயம் ஐயாத்துரை மாஸ்ரரிடம் பெரும் பூரிப்பை ஏற்படுத்தி யிருந்த வேளை, பேச்சே வராமலிருந்த இரவை யோசித் தும் பார்க்கவில்லை. பெற்றோர்கள் மண்டபத்தில் நிரம்பியிருந்த நலன் விரும்பிகள் சார்பிலும் ஐயாத்துரை உரையாற்றினார். அரை மணி நேர உரையில் மண்டபம் அதிரும் வகையில் ஐந்து தடவைகள் கை தட்டல்கள். அங்குப் பேசிய எவருக்கும் இது கிடைத்திருக்க வில்லை. பேச்சு முடிவில் தலைவர் எழுந்து வந்து தனக்கு அணிவித்த பூமாலையை ஐயாத்துரை மாஸ் டருக்கு அணிவித்தார். அதற்கும் கரகோசம். அங்கிருந்த அரசாங்க அதிபர் அவரை அழைத்துச்சென்று மேடை யிலேயே அமரும்படி செய்தார். தலைவர் அங்குப் பேசினார். நான் சாப்பிடும்போது ஏனைய கறிகளை யெல்லாம் முதலில் சாப்பிட்டு விடுவேன். கடைசியாகத் தான் எனக்கு மிகவும் பிடித்த மீன் பொரியலைச் சுவைப்பேன். இன்று உங்களுக்கும் அதே அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது என்று கருத்தாழமான பேச்சு கடைசியில் தான் கிடைத்திருந்ததை இனங்காட்டிப் பேசினார். பிள்ளையைப் பாராட்டிய கல்விமான்கள் தந்தையை யும் பாராட்டும் வாய்ப்புக் கிட்டியமை அபூர்வமாக இருந்தது.

முதல்நாள் இரவு கால்நடையாகக் கடந்து வந்த பாதை வழியே ஒரு பஸ் புறப்பட்டது. பாதையின் சில இடங்கள் அந்தப் பகலிலும் இருட்டாக இருந்தன. மோச மான அலைகளை எதிர்த்துச் செல்லும் ஓடம்போல நகர்ந்த பஸ் திடீரென ஒரு இடத்தில் நின்றது. நின்றவர் கள் தமக்குள் ஆவேசமாக ஏதோ பேசுவதும் கைகளை உயர்த்திக் காட்டுவதுமாயிருந்தனர்.

ஓரமாக ஒரு சிறிய ஓலைக் கொட்டில் யானைக் கூட்டத்தினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டுக் கிடந்தது. அந்த விளக்கு வெளிச்சத்தில் தெரிந்த அதே உரப் பைகள் வெளியான தரையில் விரிக்கப்பட்டு மூன்று மனித உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. 'நடுச்சாமம், யானைக்காடு, குமர்பிள்ளை கிடந்திட்டு விடியப் போங்கோ' என்று ஒலித்த குரல்கள் அடங்கிக் கிடந்தன. ✱




இலண்டன் சுடரொளியின் மலேசிய தொடர்பாளர் இளங்கோ ராஜசிங்கம்-புவனேஸ்வரி இணை யருக்கு அண்மையில் பெண் மகவு பிறந்துள்ளது. முத்தமிழ்க் கனி எனத் தனித் தமிழ்ப் பெயர் சூட்டியுள்ளனர். முத்தமிழ்க்கனி நல்ல தமிழ்க் குடிமகளாக வளர சுடரொளி வாழ்த்துகிறது.

வாழ்வியல் வழிகாட்டி

11

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம். வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

கண்டறிந்த பலவீனங்களையும், பிரச்சினைகளையும் எப்படிச் சரிசெய்வது மற்றும் பலத்தினையும் வாய்ப்புகளையும் எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது என்பதுதான் அந்த அடுத்த கட்டம்.

அதற்குக் கீழ்க்காணும் நான்கு கேள்விகளுக்கு முறையாகப் பதிலளிக்க வேண்டும்.

**அ) எனக்கு என்ன வேண்டும்?**

**ஆ) அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

**இ) எப்பொழுது செய்ய வேண்டும்?**

**ஈ) எது அல்லது எவை செய்து முடிக்கப்பட்டதற்கு அடையாளம்?**

மேற்சொன்ன நான்கு கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமானால் முன்பு பார்த்த 54 கேள்விகளுக்கான விடைகள் தேவை.

**அ) எனக்கு என்ன வேண்டும்?**

எனக்கு 2008ஆம் ஆண்டு பள்ளி இறுதிப் பொதுத்தேர்வில் 500க்கு 490 மதிப்பெண்கள் வேண்டும்.

**ஆ) அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

நான் பல்வேறு விவரங்கள் சேகரிக்க வேண்டும்.

சரியான புத்தகங்களும் கூடுதல் மதிப்பெண் பெறத் தேவையான, 'நோட்ஸ்'ம் வைத்திருக்க வேண்டும்.

வகுப்பாசிரியர்கள் மற்றும் தேவையாயின் வேறு ஆசிரியர்களின் உதவி பெற வேண்டும்.

படிப்பதற்கான கால அவகாசத்தினையும் சூழ்நிலையையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

உடல் நலத்தினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தேர்வு எழுதிப் பழக வேண்டும்.

மதிப்பெண் பெறுதற்கான சரியான வழிகளைத் தெரிந்து அதனைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

**இ) எப்பொழுது செய்ய வேண்டும்?**

காலத்தைத் திட்டமிடுவது மிகமிக அவசியம். மனிதர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் இரண்டு வகை எனலாம்.

ஒன்று செய்யாமலிருப்பது.

மற்றொன்று செய்வதைச் செய்யவேண்டிய காலத்தே செய்யாமலிருப்பது.

**பெண்ணின் திருமணத்திற்குப் பெற்றோரின் பொறுப்பு என்ன?**

ஒருவன் தன் பெண்ணுக்குத் திருமணம் செய்ய வேண்டும். அதற்குப் பணம் சேர்க்க வேண்டும். அவரால் சேர்க்க முடியும். ஆனால் எப்பொழுது சேர்த்து முடிக்கிறாரோ அப்பொழுதுதான் 'ஜாம் ஜாம்' என்று திருமணம் செய்து வைக்கலாம்.

**அவரால் எப்பொழுது பணம் சேர்த்து முடிக்க முடியும்?**

அது அவர் எப்பொழுது சேர்க்கத் தொடங்கினார் என்பதைப் பொறுத்தது அல்லவா!

தன் மகளின் 20ஆவது வயதில் தந்தைக்குத் தன் மகளின் திருமணம் பற்றிய கவனம் வரலாம். சில தந்தைமார்களுக்குப் பெண்ணின் 28ஆவது வயதிலும்கூட அந்தப் பொறுப்பும், கவனமும் வராது போகலாம்.

திட்டமிடத் தெரிந்த தந்தை பெண் குழந்தை பிறந்த உடனேயேகூடச் சேமிக்கத் தொடங்கிவிடுவார். அந்தச் சேமிப்பு மாதம் வெறும் நூறு ரூபாயாகக்கூட இருக்கலாம்.

தனக்குப் பெண் குழந்தை பிறந்த உடனேயே, அவர் மாதம் நூறு ரூபாய் சேமித்தால் பெண்ணின் 24ஆவது வயதில் அவருடைய சேமிப்பிற்குக் குறைந்தபட்ச வட்டியான 12% போட்டுப் பார்த்தால்கூட மொத்தத் தொகை எவ்வளவு வரும் என்று நினைக்கிறீர்கள்?

நம்ப முடிகிறதா பாருங்கள் ரூ. 2,42,000 (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரம்)

''விதைக்கையில உழைக்கலன்னா, அறுக்கையில எப்படிப்பா வரும்?'' என்று எளிமையான கிராமத்து விவசாயிகூடக் கேட்பான். எந்த விஷயத்திற்கும் முன்கூட்டிய உழைப்புத் தேவை. அதற்குத் திட்டமிடல் அவசியம்.

தினம், தினம் டி.வி. பார்த்துவிட்டுப் பொழுதை மற்ற விஷயங்களில் போக்கிவிட்டுப் பரீட்சை நேரத்தில் எப்படி எழுதுவது என்று கையைப் பிசையும் மாணவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு அத்தகைய பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் நேரத்தை எப்படித் திட்டமிட இயலும் என்று இப்பொழுது பார்க்கலாம்.

## தேர்வுக்குப் படிப்பதற்கான நேரத் திட்டம் (TIME PLAN FOR STUDYING)

ஒரு மாணவனுக்கு 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஏற்கெனவே அவன் கொஞ்சம், கொஞ்சமே படித்திருக்கிறான். அவனுக்குத் தமிழ், ஆங்கிலம், கணிதம், சமூகவியல் மற்றும் அறிவியல் என்று ஐந்து தேர்வுகள் உள்ளன. அவனுக்குத் தேர்வு மார்ச்சு மாதம் நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அவனுடைய தேர்வுத் தேதிகள் வருமாறு:

| மாதம் | தேதி | கிழமை | தாள் |
|---|---|---|---|
| மார்ச்சு | 25 | செவ்வாய் | தமிழ்-I |
| மார்ச்சு | 26 | புதன் | தமிழ்-II |
| மார்ச்சு | 27 | வியாழன் | ஆங்கிலம்-I |
| மார்ச்சு | 28 | வெள்ளி | ஆங்கிலம்-II |
| மார்ச்சு | 29 | சனி | கணிதம் |
| மார்ச் | 31 | திங்கள் | அறிவியல் |
| ஏப்ரில் | 1 | செவ்வாய் | சமூகவியல் |

அவனுடைய திட்டம் எப்படி இருக்கலாம் என்று பார்ப்பதற்கு முன், பெரும்பாலோர் எப்படிப் படிக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

முதலில் ஆங்கிலத்தை எடுத்துப் படிக்க ஆரம்பிக்கலாம். கொஞ்ச நேரம் கழித்துக் கணிதத்தை முயற்சி செய்யலாம். சிறிது நேரம் கழித்துச் சரி, 'அதான் இன்னும் ஒரு மாதம் இருக்கே மெதுவாய்ப் பார்த்துக் கொள்ளலாம்' என்று தோன்றும். அல்லது, உடன் இருக்கும் நண்பர்கள் 'என்னடா நீதான் எல்லாம் நல்லா படிச்சிருக்கிறே, இன்னும் முழுசா ஒரு மாதம் இருக்கே, வாடா விளையாடப் போகலாம்' என்று அழைப்பார்கள். ஏன் சில வீடுகளில் பெரியவர்களேகூடத் தங்கள் வீட்டு வேலைகளுக்காகக் குழந்தைகளை வெளியே அனுப்பு வார்கள். ஆமாம் அதுதானே! ஒரு மாதம் இருக்கிறதே என்று 'ஓவர் கான்ஃபிடன்ஸ்' வருவது இயற்கைதான்.

**திட்டமிடலின் பலன் :** இங்குதான் நம் திட்டமிடல் உதவுகிறது. நமக்கு இருக்கும் நேரம் போதுமா அல்லது போதாதா என்று எப்படித் தெரிந்து கொள்ளுவது? அது மிகச் சுலபம். 'வெரி சிம்பிள்.'

தனக்கு என்ன தேவை என்று தெரிந்திருக்க வேண்டும்.

முன்பு நாம் சொன்னது நினைவிருக்கலாம். 'எங்கே போக வேண்டும் என்று தெரியாதவன்' நிலைதான் இதுவும்.

தனக்கு என்ன தேவை?

நான் வகுப்புகளில் பேசும்பொழுது ஒன்றை மறக்காமல் சொல்லுவேன்.

நாளைய தேவைகளுக்காக இன்றே வேலை செய்பவன்-வெற்றியாளன்.

இன்றைய தேவைகளுக்காக-இன்றேனும் உழைப்பவன் சராசரி.

நேற்றைய தேவைகளுக்காக இன்று உழைப் பவன் (கடன்/அரியர்ஸ் (!) தோற்றுப் போனவன்.

அலுவலகங்களில் பார்க்கிறோம். சென்ற வாரம் அனுப்பியிருக்க வேண்டிய ரிப்போர்ட்டுகளுக்காக இரவு பகலாக அமர்ந்து தலையைப் பிய்த்துக் கொள்பவர்கள், இன்று மதியம் மூன்று மணி மீட்டிங்கில் என்ன பேச வேண்டும் என்பதை ஒண்ணரை மணிக்குக் காரில் போகும்பொழுது சிந்திப்பவர்கள்; ஸ்கூட்டர் டயர் பஞ்சரான பிறகு, அடடா ஸ்டெப்னியை முன்பே பஞ்சர் ஒட்டாமல் விட்டு விட்டோமே என்று ஆளில்லாச் சாலையில் நின்று வருந்துபவர்கள்.

இவர்கள் எல்லோரது பிரச்சினையும் ஒன்றுதான். 'விதைக்கிறபோது தூங்கிவிட்டு அறுக்கிறபோது அரற்று பவர்கள், திட்டமிடாதவர்கள், அல்லது திட்டத்தைச் சரியாக நிறைவேற்றாதவர்கள்.

நாளைய தேவைகளில் 'நாளைய' என்றால் அதில் அனைத்து எதிர்காலமும் அடங்கும். நாளைய தேவைகளுக்கு இன்று பணி செய்ய வேண்டும் வெற்றி பெற.

## பெர்னாட்ஷாவிற்குத் தேவைப்பட்ட நேரம்

பெர்னாட்ஷா என்றுதான் நினைக்கிறேன். அவரை ஒரு இடத்திற்குப் பேச அழைத்தார்களாம். 'எப்பொழுது பேச வேண்டும்? என்று கேட்டாராம். 'எப்பொழுது வேண்டுமானாலும், தாங்கள் கொடுக்கும் தேதியில் பேசலாம்' என்றார்களாம்.

'எவ்வளவு நேரம் பேச வேண்டும்?'

'ஒருநாள் முழுக்கக்கூடப் பேசலாம்.'

'அப்படி என்றால், நாளைக்கே கூடத் தயார்.'

'அப்படியா?'

'ஆமாம், அதிக நேரம் பேச வேண்டுமானால் எந்தத் தயாரிப்பும் தேவையில்லை ஆனால் நீங்கள் ஒரு மணிநேரம்தான் பேசலாம் என்று சொல்லுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். எனக்கு ஒரு நான்கு நாள் அவகாசம் வேண்டும். ஒரு மணிநேரத்தில் நான் சொல்ல வேண்டியதைக் கோவையாகப் புரியும்படி, மனத்தில் படியும்படி சொல்ல, நான் பேச்சுத் தயாரிக்க வேண்டும். அதற்குப் போதிய அவகாசம் வேண்டும்.'

நான் பணி செய்த, ஒரு வெற்றிகரமான நிறுவனத்தில் ஆகஸ்டு மாதமே, தாங்கள் அடுத்த சனவரி முதல், திசம்பர் மாதம் வரை செய்ய வேண்டிய வேலை களுக்கான சரியான திட்டமிடல் பணி நடக்கும். அடுத்த சனவரி 1 முதல் திசம்பர் 31 வரை திருத்தமாகச் செய்த திட்டப்படிதான் அனைத்துப் பணிகளும் நடக்கும்.

எதற்கும் பதற்றம், ஆரவாரம், தவறுகள் இருக்கா. காரணம் முறையான, முன்பே செய்யப்பட்ட விவரமான திட்டமிடல். ✱

(தொடரும்)

# தமிழ் சினிமாவின் வரலாறு 5

கே.டபிள்யூ. செல்வராசா, வுட்சோச், கென்ற், இலண்டன்

**தாய் உள்ளம்** : காதல் மன்னன் ஜெமினி கணேசன் (பி.ஏ.) நடித்த முதல் படம். இதில் வில்லனாக நடிக்கிறார். 'காதல் மன்னன்' என்றதும் ஒரு முறை நான் ஜெமினி கணேசனைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் போது காலஞ்சென்ற என் மனைவி நான் எழுதியதைப் பக்கத்தில் இருந்து வாசித்துக்கொண்டே "காதல் மன்னன் ஜெமினி கணேசன் அல்ல நீங்கள்தான் காதல் மன்னன்" என்றாரே. நானும் தொடர்ந்து எழுதி இந்த வயதில் எனக்கு ஏன் இந்த வம்பு என்று காதலைப் பற்றி எழுது வதை நிறுத்தி விட்டேன். ஒவ்வொரு மனைவிக்கும் தன் கணவன்தானே "காதல் மன்னன்". இப்படத்தில் எம்.வி. ராஜம்மா ஒரு குழந்தையின் தாயாக நடிக்கிறார். ஜெமினி கணேசன் அவள்பால் காமம் கொண்டு அவள் வாழ்க்கையில் குறுக்கிட்டு அவரைக் கஷ்டப்படுத்து கிறார். இதில் வரும் பாடல் "கொஞ்சும் புறாவே நெஞ்சோடு நெஞ்சம் ஜெகம் எங்கணும் உறவாடிடும் ஜாலமிதேதோ..." என்று எம்.எல். வசந்தகுமாரி பாடு கிறார். வயலின் இசையுடன் இப்போ கேட்டாலும் காதுக்கு இனிமையாக இருக்கும். நான் 1953 ஆம் ஆண்டு என் மனைவி (அப்போ காதலி)யின் வீட்டுக்குப் போனால் என் மனைவியின் தமக்கை அக்னள் நேச ரெட்ணம் ஆங்கிலப் பாடசாலை வின்சன்றல் படித்துக் கொண்டிருந்தவர், நன்றாக வயலின் வாசிப்பார். ஒரு முறை இப்பாடலைப் பாடிக் காட்டினேன். அப்படியே அதற்கு வயலின் இழுக்க நான் பாடுவேன். என் மனைவியும் சிறுவயதிலிருந்து வயலின் கற்றவர். சங்கீத மாஸ்றர் தில்லையம்பலத்தின் சிஷ்யைகள், என் மூத்த மகள் செல்வமலர் யாழ்ப்பாண இசைக் கல்லூரியின் 3ஆவது ஆண்டு பிரிவில் (ஆகக் கூடிய பிரிவு) வயலின் தேர்ச்சிப் பத்திரம் பெற்றவர். அக்காலத்தில் வந்த படங்களில் இப்பாடல் மட்டும்தான் தனி வயலின் வாத்தியத்துடன் பாடி வந்த பாடலாகும். இப்படத்தில் எம்.எல். வசந்தகுமாரி பாடும் "கதையைக் கேளடா கண்ணே கதையைக் கேளடா, வெள்ளை நிறப்பசு ஒன்று" என்ற பாடலும் இனிமையான பாடலாகும்.

மேற்படி படங்கள்யாவும் 57-60 வருடத்திற்கு முன்வந்தவை. உங்களுக்கு 65 வயதாக இருந்தாலும் இவற்றைக் கேள்விப்பட்டும் இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். இவற்றை விட்டுப்போட்டு சிவாஜி நடித்த பராசக்தி, பாலும் பழமும், ஆலயமணி, பாகப் பிரிவினை இன்னும் பல உண்டு, நடிகவேள் எம்.ஆர். ராதா நடித்த ரத்தக் கண்ணீர், ஜெமினி கணேசன் நடித்த தேன் நிலவு, வாழ்க்கைப் படகு, கல்யாணப் பரிசு மற்றும் நெஞ்சிலோர் ஆலயம், மல்லிகா இப்படி நூற் றுக்கும் அதிகமான நல்ல படங்கள் இருக்கின்றனவே, இவற்றைப் பற்றி எழுதினால் எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கும் என்று வாசகர்கள் நினைக்கலாம். சிறிது பொறுமையாய் இருங்கள். தமிழர் கலையை, கலாச்சா ரத்தை இலக்கியத்தை ஆரம்பித்து வைத்த நம் பாட்டன் பாட்டியான கலைஞர்களை நாம் மறந்துவிடக் கூடாது. தமிழ் சினிமா இருக்கும்வரை இனிமேல் வரும் சந்ததி களும் அவர்களை மறக்கவும் கூடாது. நன்றியாகவும் இருக்க வேண்டும். தமிழ்நாட்டிலேயே இவர்களைப் பற்றிய விபரங்கள் மறைந்துகொண்டு போகின்ற கால கட்டத்தில் சுடர் ஒளி மூலம் இவர்களுக்கு அஞ்சலி செய்து எங்கேயாவது அவர்களையிட்ட வரலாறு பதியப் பட வேண்டும் என்பதே நான் இறக்குமுன் விரும்பும் கோரிக்கை. பொறுமையாக இருங்கள். 50க்கு முன் வந்த இன்னும் சில படங்கள் உண்டு. அவற்றை எழுதிவிட்டுப் பின் நீங்கள் விரும்பும் 50க்குப் பின் வந்த படங்களையிட்டு விமர்சிக்கிறேன்.

**ஸ்ரீ வள்ளி** : டி.ஆர். மகாலிங்கம் முருகனாகவும் குமாரி ருக்மணி வள்ளியாகவும் நடிக்கிறார்கள். டி.ஆர். ராமச்சந்திரன் நகைச்சுவை நடிகராக வருகிறார். ஈழத்துக் கதிர்காமத்தில் நடந்த வள்ளி திருமணக் கதை யாவரும் அறிந்ததே. இதில் டி.ஆர். மகாலிங்கம் பாடிய "மேயாத மான் புள்ளி மேவாத மான்... சாயாத கொம்பிரண்டு இருந்தாலும் இது தலைநிமிர்ந்து பாராத மான்" என்ற பாடல் மிகவும் பிரபலமானது. காரணம் சினிமா வரு முன்னரே கிட்டப்பா பாகவதர் இப்பாடலைப் பாடினார். அவர் பாடியது போலவே அப்படியே இருந்தது டி.ஆர். மகாலிங்கத்தின் குரலும் பாட்டும். இதிலிருந்து அவரைக் கிட்டப்பா பாகவதருக்கு அடுத்த பாடகனாகக் கணிக்கப் பட்டார். வள்ளியைக் காதலிக்கும்போதும் தமையன் பிள்ளையாரின் உதவியுடன் காந்தர்வ விவாகம் செய்வது வரை இவரின் நடிப்பு நன்றாக இருந்தது. டி.ஆர். ராமச்சந்திரன் தலையில் சிறகுகளாலான தொப்பி போட்டுக் கொண்டு வழமையான அவர் திருட்டு முழி யுடன் நடித்தது சிரித்து மகிழக் கூடிய நகைச்சுவையாக இருந்தது. ஸ்ரீவள்ளி இன்னும் அதிகமான பாடல்கள் நிறைந்த படம்.

**பைத்தியக்காரன்** : லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் எம்.கே.டி. பாகவதருடன் சிறையிலிருந்து விடுதலையான பின் என்.எஸ். கிருஷ்ணன் நடித்த முதல் படம். இதில் எஸ்.வி. சகஸ்ரநாமம் கதாநாயனாக நடிக்கிறார். கதை சிறைவாசம் இருந்த அனுபவத்தோடு ஒட்டியதாக சுவாரஸ்யமானதாக இருந்தது. இதில் என்.எஸ்.கே. படிக்கும் பாடலான "ஜெயிலுக்குப் போய் வந்த சிரேஷ்ட மக்களை சீர்திருத்திறங்கோ! பெல்லை அடிக்கடி அடிப்பாங்க! அங்கே ஆஜராகி நிற்கோ ணுங்கோ! கறுத்த குல்யாய் சிப்பாயும் கண்டேனுங்க..." என்று மிகவும் நல்ல கருத்துள்ள பாடல். இப்பாடலை எழுதும்போது எனக்கு 1949 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. நான் மட்டக்களப்பு மத்திய கல்லூரி ஹெஸ்ரலில் இருந்து படித்தேன். தமிழ்

இலக்கியச் சங்கத்துக்குக் காரியதரிசியாக இருந்தேன். ஒரு சங்கத்துக் கூட்டத்தில் இப்பாடலை நான் பாடி னேன். ஏனெனில் பெல்லை அடிக்கடி அடிப்பாங்க அங்கே ஆஜராக நிக்கோணுங்க போன்றவை அங்கும் இருந்ததால் ஒரு சிறைச்சாலையில் இருப்பது போன்ற பிரமை. சாப்பாட்டுக்கு பெல், படுக்கைக்கு பெல். படிக்கும் நேரத்துக்கு பெல், டாய்லெட் போக பெல் இப்படி 10 தடவைக்கு மேலாக பெல்தான். இப் பாடலைச் சிறிது மாற்றி அங்கிருந்த பெர்பாக்ட்மாரின் பட்டப் பெயர்களையும் வைத்துப் படித்தேன். உடனே கோபம் கொண்டு ஓரிரு பெர்பாக்ட்மார் உடனே வந்து நான் வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப்பார்த்து ஏமாற் றம் அடைந்தார்கள். காரணம் பைத்தியக்காரன் பாட்டுப் புத்தகம் தான் இருந்தது. அடுத்த நாள் காலை என்னை எஸ்.வி.ஓ. சோமநாதர் பிரின்சிபல் வரட்டும் என்று அவர் ஆபிசுக்குப் போனேன். பிரின்சிபாலுக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. எனவே எங்கள் தமிழ் ஆசிரியரும் அங்கு நின்றார். ஹெஸ்ரலைப் பற்றி பெர் பெக்ட்மாரைப் பற்றிக் கிண்டலாக நான் பாடியதாகப் புகார் வந்துள்ளது என்றதும் நான் ஆயத்தமாக வைத் திருந்த பைத்தியக்காரன் புத்தகத்தை எடுத்து கொடுத் தேன். தமிழ் ஆசிரியரும் அதை வாங்கி இப்பாடலைச் சத்தமாக வாசித்துக் கூறினார். இவர் இப்பாடலைத்தான் பாடியிருக்கிறார். பைத்தியக்காரன் படத்தில் என்.எஸ். கே. சிறையைப் பற்றிக் கிண்டலாகப் பாடியது. பெர் பெக்ட்மார்தான் பிழையா விளங்கியிருக்கிறார்கள் என்று பிரின்சிபலிடம் கூற ''எல்லோரும் போங்கள் என் நேரத்தை வீணாக்க வேண்டாம்'' என்று பெர்பெக்ட் மாரில் எரிந்து விழ அவர்களும் வெட்கித் தலைகுனிந்து போனார்கள். மன்னிக்கவும் இப்பாடல் அவ்வளவு பெறுமதியானது என்பதால் இதை எழுதினேன்.

**மந்திரிகுமாரி :** எம்.ஜி.ஆர். நடித்த இரண்டாவது படம். கதாநாயகியாக இருவர் வருகிறார்கள். மாதுரி தேவியும் ஏ.ஆர். சகுந்தலாவும். வில்லனாக எஸ்.ஏ. நடராஜன் வருகிறார். அருமையான பாடல்கள் நிறைந்த படம். திருச்சி லோகநாதனும் பெண் குரல் எம்.எல் வசந்த கோகிலமும் பாடுகிறார்கள். ஆற்றில் எஸ்.ஏ. நடராஜனும் சகுந்தலாவும் ஓடத்தில் செல்லும்போது பாடும் ''உலவுந்தென்றல் காற்றினிலே ஓடமிதே நாம் மகிழ ஊஞ்சலாடுதே'' என்ற பாடல் இப்போ கேட்டா லும் இனிமையாகத்தான் இருக்கிறது. எஸ்.ஏ நடராஜன் மாதுரிதேவியை மலை உச்சியிலிருந்து தள்ளிவிட கூட்டிச் செல்லும் லோகநாதனின் பாடல் ''வாராய் நீ வாராய் போகுமிடம் வெகுதூரமில்லை நீ வாராய்'' என்ற பாடல் அக்காலத்தில் பிரசித்தி பெற்ற பாட லாகும். கடைசியாக எம்.எல். வசந்தகுமாரி பாடும் ''காதற் பலியாகி நீயும் தியாகத்தின் சின்னமாய் நாட்டி னர் நெஞ்சிலே ஓவியமே ஆகினாய்'' என்ற பாடலும் படம் பார்க்கும்போது கண்ணீர் சிந்தவைக்கும் பாடல். எம்.ஜி.ஆர். இன் நடிப்பு அவரை ஒரு நல்ல நடிகனாகக் கணிக்கச் செய்தது.

**ஞானசவுந்தரி :** கொழும்பு சென்றல் தியேட்டர் திறப்பு விழாவுக்கு வந்த முதல் படம். 1947 என்று நினைக்கிறேன். டி.ஆர். மகாலிங்கம் இளவரசனாகவும் எம்.வி. ராஜம்மா ஞானசவுந்தரியாகவும் நடிக்கிறார்கள். மகாலிங்கம் தன் கணீரென்ற குரலில் பல பாடல்கள் பாடுகிறார். ஞானசவுந்தரியைக் காட்டில்விட்டு இரு கை களையும் வெட்டியபின் மரியாள் அருளால் கைகள் திரும்பக் கிடைப்பதும் இளவரசன் பின் அவளை மணம் செய்வதும் விறுவிறுப்பான கதையாகும். கிறிஸ்தவ கதை என்று அக்காலத்தில் வந்த முதல் படமாகும். இதில் பி.ஏ. பெரியநாயகி பாடும் ''கன்னி மாமரித்தாயே என் காணிக்கை கண்ணீரே'' என்ற பாடலும், ''அருள் தாரும் தேவ மாதாவே ஆதியே இன்பஜோதியே'' என்ற பாட லும் இன்றும் கத்தோலிக்க தேவாலயங்களில் பக்திப் பாடல்களாக விசேஷ தினங்களில் ஒலிக்கின்றன.

**வால்மீகி :** ஹொன்னப்பா பாகவதர் வால்மீகி யாக நடிக்கிறார். வால்மீகி மர விழுதுகளைப் பிடித்து மாடிகளில் தாவிச் செல்வது இன்றும் ஞாபகத்தில் உள்ளது. நல்ல பாடல்கள் நிறைந்த படம்.

**ராஜ ராஜேஸ்வரி :** ஹொன்னப்பா பாகவதர் கதாநாயகனாக இதிலும் நடிக்கிறார். அக்காலத்துப் பாகவதர் ஆகையால் நல்ல பாடல்கள் நிறைந்த படம். இதில் காளி என் ரத்தினம் அவர் மனைவி ராஜ காந்தமும் நகைச்சுவை விருந்தளிக்கிறார்கள். காளி என் ரத்தினம் கொன்னை வாயனாகத் திக்கித் திக்கிப் பாடு வது ஒரு தனி விசேட பாடலாக அமைந்தது. இப்படம் கல்முனை ஹரிசன் தியேட்டர் திறப்புக்கு முதல் படமாக 1946 ஆம் ஆண்டு வெளிவந்தது.

**பொன்முடி :** பி.ஏ. பார்த்தசாரதி கதாநாயகனாக வும் மாதுரிதேவி கதாநாயகியாகவும் நடிக்கும் அருமை யான காதல் கதை கொண்ட படம். பார்த்தசாரதியின் இனிமையான பாடல்களும். கதை வசனமும் கொண்ட படம். அசோகன் வில்லனாக வந்து இருவரும் பேசும் பேச்சு நன்றாக இருக்கிறது. இதில் வரும் ''வான்மழை யின்றி வாடிடும் பயிர்போல் நான் உன்னைப் பிரிந்தே வாடுகிறேன்... வெளியில் விடாமல் வீட்டினில் வைத்தே தனிமையினால் என்னைப் பூட்டினாரே'' என்று கதா நாயகி பூங்கோதை பாடுவது அக்காலத்து இனிமையான பாடல்களில் ஒன்று. பிற்பகுதியில் பார்த்தசாரதி பாடும் ''நம் ஜீவாதாரமே செல்வம் ஆகுமே ஓது... நலமுடன் நாமே செல்வம் தேடுவோம் செல்வம் தேடுவோம்'' என்ற பாடலும் அருமையானது. பார்த்தசாரதி முன்னே பாடிப் போகப் பின்னால் மக்கள் பாடிச் செல்கிறார்கள். அருமையான காதல் சித்திரம்.

**மோகனசுந்தரம் :** டி.ஆர். மகாலிங்கமும் எஸ். வரலட்சுமியும் காதல் சோடியாக நடிக்கிறார்கள். இவர்கள் காரில் செல்லும்போது பாடும் பாடல்கள் இனிமையானவை. இருவரும் ஒன்றாக பாடக் கூடியவர் களாகையால் அருமையான பாடல்கள் நிறைந்த படம்.

**ராஜமுக்தி :** எம்.கே. தியாகராஜ பாகவதரின் கடைசிப் படம். அவரின் இனிமையான பாடல்கள் இப் படத்திலும் உண்டு. இதன்பின் அவர் தனிப்பாடல்கள் சில பாடினார். ''காந்தியைப் போல் ஒரு சாந்த சொரூ பனைக் காண்பதும் அரிதாமே மகாத்மா'' ✱

*(தொடரும்)*

# பொங்கலே நீ! பொங்கிப் பொங்கு!!

## இன எழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

வேல்தொகைநூல் கலிங்கத்துப் பரணி! யாப்பு
விசைத்தொகை நூல் காரிகையே! வாழ்க்கைச் சீர்ப்புப்
பால்தொகை நூல் விழிக்குறளே! வளைந்த தீப்பால்
பழித்தொகைநூல் சிலம்பாகும்! சங்கம் பூத்த
நூல்தொகைநூல் எட்டோடு பத்தே! நீதி
நுவல்கின்ற கீழ்க்கணக்கோ அறத்தின் வீதி!
நூல்தோளர் மனுதர்ம நூலில் சிக்கி
நொடிந்தழிந்த தமிழினத்தான் எழவே இல்லை!

எலும்புகளை முறித்தெடுத்துப் பகையை வென்ற
ஏந்துமறப் போர்வேல்கள்! கோவில் தோறும்
எலுமிச்சைப் பழம்சுமக்கும் கருவி யாச்சே!
எந்தமிழா! உன்வீரம் செத்தே போச்சே!
களச்சாவு, நடுகல்கள், வணங்கல், மாறி
கண்ணாத்தா, காளியாத்தா கோயில் ஆச்சே!
நிலம்செழித்த மெய்க்கீர்த்தி, பட்டயங்கள்
நினைப்புக்கே வாராது அழிந்தே போச்சே!

புலிநிகர்த்த தன்வீரம் காட்டு தற்கே
புலிப்பல்லைத் தங்கத்தால் அணிந்தான்! அந்த
வலிவெல்லாம் வற்றிற்றே! விரல்சு மந்த
வாள்வீரம் புகையிலையாய்ச் சுருங்கிப் போச்சே!
கிளிப்பிள்ளை முன்குந்தி பலனைக் கேட்கும்
கீழ்ப்பிள்ளை ஆனானே தமிழன்! இங்கே
உளிக்கூர்மை நாவாலே பெரியார் நட்ட
உயிர்நாற்றாம் பகுத்தறிவும் மறந்தா போச்சு?

பாலமின்றிக் கடல்கடந்தான் சீதை யோடு
பலங்கொண்ட இராவணத்தான்! கடலைத் தாண்டிப்
பாலமின்றிச் சீதைகண்டான் அனுமன்! ராமா!
பகவான்நீ! உனக்கெதற்குப் பாலம்? வெற்றுத்
தோலுருவப் பொம்மையெலாம் துள்ளும் போது
தொகைப்போர்கள் வென்றவனே! இரண்டு முன்னங்
காலுருவும் நிமிராமல் தரைவீழ்ந் தாயே!
கழிசடையா தமிழாநீ? வெளியே வாடா!

சேரன்கொடி பொறித்தானே இமயம்! இன்றோ
சேதுவினைப் பொறிக்காமல் கிடக்கின் றோமே!
தீரமிகுக் கடல்வணிகம் மீண்டும் இங்கே
திரும்புதற்கு வழியற்றுத் திகைக்கின் றோமே!
தேரழுந்தி மண்புதைதல் போன்றே! நாமும்
தீக்குழியுள் இற்றோமே! தமிழ்நாட் டின்கண்
ஊரெழுந்து விழிதிறக்கும் நாளஎந் நாளோ?
உரைப்பாய்நீ! பொங்கலேநீ! பொங்கிப் பொங்கு!

# இலண்டன் மாநகரம்

## திருமதி சி. சதாசிவம் பிள்ளை

அவள் களைப்பு ஆயாசமுமாக இருந்தாலும் உள்ளே படுக்கப் பிடிக்காமல் வாசற்கதவை ஓசைப் படாமல் திறந்து வெளியே வந்து பார்த்தபடி நின்றாள்.

சத்தமின்றி மெத்த வேகமாக அழகிய சுத்தமான தெருவில் விரைந்து செல்லும் பலவிதமான கார்கள்... என்னைப் பார்க்காதே சிரிக்கக்கூட நேரமில்லை என்ற வகையில் வேகமாக நடந்து செல்லும் மக்கள். முற்றம் என்ற சிறிய இடத்தில் பூத்துச் சிரித்த பல வர்ண-பலவித மலர்கள் படீர் என்று யாரோ தலையிலடித்தது போன்ற அதிர்ச்சி! கவலை! ஊரை விட்டுச் சொந்த கிராமத்தை விட்டு வந்த சோகம் எண்ணத்தில் வந்ததும் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்து உட்காரந்தாள். குளிர் கை கால்களை உதற வைக்கவே கம்பளிச் சட்டையை அணிந்து போர்வையால் போர்த்துக் கொண்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

மனம் அழுதது. சிறிது நேரத்தில் கண்களும் கண்ணீர்ப் பெருக்கில் அடைத்துக்கொண்டு ஏதேச்சையாக சுவரைப் பார்த்தாள். அங்கே அந்த ஓவியம் மாட்டு வண்டி, நரைநிறமான ஒன்று-வெள்ளை நிறமான ஒன்று. இரு எருதுகள். வண்டியில் மூவர். பெரிய நரைத்த மீசையுடன் சாயம்போகாச் சிவப்புப் பெரிய துவாலை யைத் தலைப்பாகையாகக் கட்டியிருந்தார். அவர் வண்டி செலுத்தும் ஆசனத்தில் மற்ற இருவரில் ஒருவர் நரைத்த மீசையுடன் வெண்ணிறம் மங்கிப் போன வேட்டி. அதே போல் தலைப்பாகை. இன்னொருவர் கொஞ்சம் வயது குறைந்தவர். அதே மங்கலான உடை மாட்டிக் கொண்டி ருப்பது போன்ற பாவனை.

அந்த ஓவியம் அருமையானது என்ற எண்ணம். யாழ்ப்பாணத்தில் அதுவும் தென் மராட்சிப்பகுதியில் கிராமத்தில் இன்றைய எ.9 பாதையில் - குறுக்குத் தெருக்களில் கழுத்து மணி அசையச் செல்லும் அந்த வண்டிகள் தேங்காய், ஓலைக் கோம்பை, ஏன் சில காலத்தில் புகையிலை இன்று எல்லாமே போய் வெறிச் சோடி. மறுபடி அவளுக்கு அழுகை வந்தது.

அப்போது நகுலன் உள்ளே நுழைந்தான். என்ன படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த வீட்டில் சிலருக்கு இந்தப்படம் பிடிக்கவில்லை. ஆனால் எனக்கு மிகவும் பிடித்தது இது.

என்றோ ஒரு நாள் விடியும். விடிவு வரும். அடிமை விலங்கு ஒடியும். போருக்கு முடிவு வரும். சுதந்திர கீதம் கேட்கும். நித்தம் இந்தப் படத்தைப் பார்க்கும்போது எனக்கு அந்த எண்ணம் வரும். சொன்னவன் மேலே பேசாமல் உள்ளே அறையினுள் சென்றுவிட்டான். குமுறும் உள்ளங்கள் சொந்த மண்ணுக் காக ஏங்கும் உள்ளங்கள் எத்தனை எத்தனை.

## இலண்டன் தமிழரின் சிறப்புகள்

பேராசிரியர் **கோபன் மகாதேவா,** இலண்டன்

அலையலையாய்ப் பிரச்சினைகள் ஓயாது எழுந்திடினும்
இலண்டன்வாழ் தமிழர்கள் ஒருபோதும் சோம்பிஇரார்.
பலபரந்த வழிகளிலே இனம்காக்க உழைக்கின்றார்
கலைகளைப் பேணுகிறார், கோவில்கள் நடத்துகிறார்.

அரசாங்க சுகாதாரச் சேவையிலே வைத்தியராய்த்
தரமாகத் தொழில்செய்து தமிழ்மானம் காத்திடுறார்.
எந்திரிகா, கணக்காளர், முகாமையர், வழக்கறிவோர்
தந்திரங்களையும் கற்றுத் தமிழினையும் பேணுகிறார்.

ஆறாயிரம் மைல்கள் அப்பாலே இருந்திடினும்
மாறாத பொன்போலத் தாயகத்தைத் தாங்குகிறார்.
பத்திரிகைகள் நடத்திப் பணமிழந்து வீழ்ந்தாலும்
எத்துணையும் தளராது எம்தளத்தைப் பேணுகிறார்.

அறிவுக்கு இடம்அளித்து ஆண்டாண்டு தோறும்
சிறியோரை ஊக்கிச் சித்திபெறச் செய்கின்றார்.
பலசரக்கோ பல்உணவோ பவுணநகையோ விற்பார்.
கலகலப்பாய் ஊடகத்தால் ஒற்றுமையை ஊக்குகிறார்.

எம்தொன்மைத் தமிழின் இலக்கியங்களைப் பேணித்
தம்மால் இயன்றமட்டில் தாமும் நூல்ஆக்குகிறார்.
இலண்டனிலே வாழும் மற்றைய இனங்களிலே
நலமுள்ள வர்களுடன் நல்லெண்ணம் தேடுகிறார்.

ஈழத்துத் தமிழரெல்லாம் இவ்வாறாய் இலண்டனிலே
மாழோம், மறுதலிக்கோம், வாழ்வோம், என்றும்,எங்கும்,
என்று...இனம் உயர்த்தும் ஆதனங்கள் எலாம் சேர்த்து...
என்று,தமிழ் ஈழம் உதிக்கும்? என்று காத்திருக்கார்!

## 'மெல்லத் தமிழினி வாழும்'

பாவலர் மதலைமணி

கணிப்பொறி யில்எளி தாய்பயன் படுத்த
கன்னித் தமிழ்க்குறி யீடே சிறந்த ததுவே!
நுனிவிரல் கொண்டு மென்பொருள் கட்டளை
நொடிப்பொழு திலேஏற் றேசெயல் படுமே!

இணையத் தளத்திலே எளிதாய்த் தேடிட
ஏதுவாய் உள்ளது நம்மின் மொழியே
மனையி லிருந்தே வையகவ லைவிரிவை
மகிழ்வோடு திறந்தே தேவையைப்பெற லாமே.

மென்பொருள் கற்ற தமிழர் உலகெலாம்
மூலைமுடுக் கெல்லாம் பரவியுள் ளனரே!
எண்ணிலா மொழியில் தமிழ்மென் பொருள்கள்
இரண்டாம் இடத்தை வகிக்கின் றனவே!

தொன்மை, இலக்கிய வளம்,கலை, நடுநிலை
பண்பாடு, பொதுமைப் பண்பு,தனித் தியங்குதல்,
பன்மொழிக்குத்தாய்,பிற மொழி தாக்க மில்லாமை
என்றுபதி னைந்து சிறப்புளத் திதுவே.

செம்மொழி யானதாலே பல்கலைக் கழகங்களில்
சீராரந்த இருக்கை யும்கிடைத் திடுமே.
நம்மொழி இலக்கியம் படைப்புகள் யாவுமே
எம்மொழி யினுக்கும் செல்லவாய்ப் பானதே.

இத்தகு பெருமை மிகுந்திடும் செம்மொழி
ஏற்றம் மிகவும் பெற்றே, உலகின்
எத்திக் கும்புகழ் பெற்றுப் பரவியே
எழும்பியே மெல்லத் தமிழினி வாழும்.

### கண்டதும் உண்டதும்

சுடரொளி வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும் மிக அற்புதமாக விளங்குகின்றது. தமிழுணர்வையும் எழுச்சியையும் உலகத் தமிழரிடையே கொண்டு செல்வதில் முதன்மையாகவும் முன்னுதாரணமாகவும் விளங்குகின்றது. என்னுடைய மனமுவந்த வாழ்த்தும், ஆதரவும் சுடரொளிக்கு என்றுமுண்டு எனத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அன்புடன்

**க. பாக்கியம்,** மலேசிய சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கம்

---

தாங்கள் மிகுந்த உழைப்பேற்று 'இலண்டன் சுடரொளி' இதழைக் கருத்துப் பெட்டகமாக உருவாக்கி வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. பல்வேறு பயனுடைய கருத்துக் கட்டுரைகளும் கனிக் கவிதைகளும் இன்ப மூட்டுகின்றன. தங்கள் சீரிய பணியைப் போற்றுகின்றேன். வாழிய தங்கள் உயரிய ஒப்புரவுள்ளம்.

**கவிவேந்தர் கா. வேழவேந்தன்,** முன்னாள் அமைச்சர்

### ராகாலயா மாணவியரின் சலங்கை பூஜை



நாட்டிய ராகாலயா பள்ளியின் சலங்கை பூஜை விழா சென்னை பாரதீய வித்யா பவன் அரங்கில் 3-1-08 அன்று கோலாகலமாக நடைபெற்றது. உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளர் இரா. மதிவாணன் தலைமை தாங்கினார். தாகூர் கல்வி நிறுவனங்களின் தலைவர் செவாலியர் இராஜாபாதர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். நர்த்தகி ஷோபனா சுனில் வாழ்த்துரை வழங்கினார். நாட்டிய ராகாலயா பள்ளியின் இயக்குநர் கலைமாமணி தேவி முனுசாமி சிறப்பாக நட்டுவாங்கம் செய்தார். நாட்டிய குருவும் பாடல் ஆசிரியையுமான கலை மாமணி உஷா பரமேஸ்வரனின் குரலிசைக்கு மாணவிகள் நடனமாடினர். சலங்கை பூஜையில் கலந்து கொண்டு நடனமாடிய சிறுமிகள் யமுனா, திவ்யா, தீபிகா, ஆர்த்தி, மைதிலி ஆகியோர் பரத நாட்டியத் துறையில் புகழ் பெற்று விளங்க இலண்டன் சுடரொளி வாழ்த்துகிறது.

கதை நேரம்-11

# சரியான தடத்தில் செல்லுகிறீர்களா?

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

இராணுவத்தில், மேஜர் பதவியிலிருந்த அதிகாரிக்குத் தன் வீரர்களை 24 கி.மீட்டர் தூரம் நடக்க வைத்து, அழைத்து வருமாறு, அவருடைய மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. அது ஒரு கடுமையான வெயில் காலம். தன்னுடைய இராணுவ வீரர்களை மூன்று வரிசைகளில் நிற்கச் செய்தார். வீரர்களும் தங்களுடைய துப்பாக்கி மற்றும் முதுகில் சுமக்கும் பைகளுடன் நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்து மேஜர் கூறினார். மேலிடத்திலிருந்து கட்டளை வந்திருக்கிறது. ''நீங்கஎல்லாம் 24 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டும். இடப் பக்கம் திரும்புங்கள் வேகமாக நடங்கள்'' என்று உத்தரவிட்டார். இராணுவ வீரர்களும் கிளம்பினார்கள்.

அவர்கள் 24 கி.மீ. கடந்து, அங்கே உள்ள கிராமத்தை அடைந்து வரிசையில் நின்றபோது, மேஜர் இராணுவ ஜீப்பில் வந்து இறங்கினார். வீரர்களைப் பார்த்துக் கூறினார். ''என் அருமை இராணுவ வீரர்களே, ஒரு சிறிய தவறு நடந்துவிட்டது. நாம் கிழக்கு திக்கில் 24 கி.மீ. தூரம் நடந்து செல்வதற்குப் பதிலாக மேற்கு திக்கில் 24 கி.மீ. தூரம் வந்துவிட்டோம். இராணுவத்தின் சட்ட திட்டங்களை நாம் மீற முடியாது. ஆகவே, நாம் மீண்டும் பழைய இடத்திற்குச் சென்று அங்கிருந்து 24 கி.மீ. செல்ல வேண்டும். அதாவது இன்னும் நீங்கள் 48 கி.மீ. நடக்க வேண்டும். உங்களில் யாருக்கெல்லாம் இப்போதே நடந்து செல்ல முடியுமோ, அவர்கள் இருக்கும் இடத்திலேயே, நில்லுங்கள்; யாரால் நடக்க முடியாது என்று எண்ணுகிறீர்களோ அவர்கள் மட்டும் ஓரடி முன்னால் வந்து நில்லுங்கள்!

முதல் வரிசையில் நடுவில் இருந்த ஓர் இராணுவ வீரனைத் தவிர, மீதி அத்தனை பேரும் ''எங்களால் நடக்க முடியாது!'' என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஓரடி முன்னால் வந்து நின்றனர். மேஜருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வீரர்களின் இயலாமையை எண்ணி அவருக்கு ஆத்திரமாக வந்தது. கண்டபடி திட்டிவிட்டு, இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்த, அந்த வீரனைப் பாராட்டினார். ''இந்த வீரனைப் பாருங்கள்! இப்படியல்லவா இருக்க வேண்டும்! 48 கி.மீ. தூரம் நடக்கத் துடிப்பாக இருக்கும் இந்த வீரனை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இவனுக்குப் பதவி உயர்வு கிடைக்கப் போகிறது! ஒரு பதக்கமும் அளிக்க இருக்கிறேன்'' இப்படிக் கூறிய மேஜர் அவனிடம் திரும்பிப் பார்த்து, ''என்னப்பா, 48 கி.மீ. தூரமும் நடக்கத் தயாரா?'' என்று கேட்டான். அவன் அதற்கு, ''ஐயா, அந்த ஓர் அடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியாமல்தான் நான் இங்கேயே நிற்கிறேன்!''

அவ்வப்போது கடன் வாங்கத் தொடங்கி விட்டீர்கள்-கடன் வாங்குவது தொடர்கதையாகிவிட்டது என்றால் உடனே நிறுத்தி எப்படி எல்லாவற்றையும் சரி செய்வது? என்று முடிவெடுக்க வேண்டும். எப்போதாவது ஒரு முறை மது அருந்துவது என்ற நிலை மாறி, அடிக்கடி மதுவருந்துதல் என்ற நிலை உருவானால்-உடனடியாக நீங்களே தலையிட்டு உங்களையே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆனால், நாம் மேற்கண்ட தவறுகளைச் செய்ய ஆரம்பித்த பின்னர் அவற்றை நிறுத்துவதில்லை. அவற்றைத் தொடர அனுமதிக்கிறோம். கடைசியில் ஒரு நிலை வருகிறது. மீள முடியாத நிலை!

உங்கள் மகன் மேலும் அதிக தாமதத்துடன் வீட்டுக்கு வருவான். சில இரவுகளில் வீட்டிற்கே வருவதில்லை நீங்கள் மிகப்பெரிய கடனாளியாகிவிடுவீர்கள், வட்டி கொடுத்துக் கட்டுப்படியாகாமல் வாழ்க்கை முழுக்கத் திண்டாடுவீர்கள். நீங்கள் மீனைப் போல் மதுவிலே நீந்தி, மூழ்கி, மிதந்து உங்கள் முழு உடல் நலனையும் இழப்பீர்கள்.

இப்படித்தான் பலருடைய வாழ்க்கை கருவறையிலிருந்து தொடங்கிக் கல்லறையில் முடிகிறது. அவர்கள் அடிமைகளாக மாறிவிடுகிறார்கள். குறிப்பாக மது. போதை மாத்திரை அடிமைகள், குற்றவாளிகள் பெரும்பாலும் நல்ல நிலைக்குத் திரும்புவதேயில்லை. அவர்கள் கடந்து வந்த பாலத்தை அவர்கள் திரும்பிப் போக முடியாத வண்ணம் கொளுத்தி விடுகிறார்கள். ஆனால் ஆரம்ப நாள்களிலேயே திருத்திக் கொண்டிருந்தால்...?

நீங்கள் சரியான திசையில்தான் சென்று கொண்டிருக்கிறீர்களா? ✱

# என்ன பயன்

சீ.என். துரைராஜா, ஜே.பி இலங்கை

ஏ... தமிழா ஏ தமிழா
நீ சிந்திக்க மாட்டாயா
சிந்தனை என்பது...
நல்லதை நினைக்க மாட்டாயா?
நாடுபோற்ற செயல் வீரராகாயா?
தொல்லைகள் நீங்க உன்றன்
துடுப்பினை எடுக்கமாட்டாயா?
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றி மூத்தகுடியென
முகவரி இடுவதில் என்னபயன்?
கற்பிழந்து தவிக்கின்றோர் எத்தனை பேர்
பட்டினியால் மடிபவர் எத்தனை பேர்
பந்தபாசம் இழந்தோர் எத்தனைபேர்
அகதிகளாய் அல்லல்படுவோர் எத்தனை பேர்
ஆதரவற்றுத் திரிபவர் எத்தனை பேர்
அத்தனைக்கும் விடை சொல்பவர் யார்?
ஒற்றுமை என்ற ஒன்று நம்
திமிழினத்தில் உருவாகவே மாட்டாதா?
பெற்றவள் தவிக்கின்றாள்
பிதற்றுவதில் என்ன பயன்?

# அகதிகள் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட நிலையில் நீங்கள் தாயகம் திரும்ப விரும்புகிறீர்களா?

உடன் **IOM** இன் இலவச தொலைபேசியுடன்
தொடர்பு கொள்ளுங்கள்

# 0800 783 2332



விமானச் சீட்டு
பயண ஒழுங்குகள்
சிறு வியாபாரம்
ஆரம்பிக்க
குறுகிய கால
தங்குமிட வசதி
மேலதிக பொதிக் கட்டணம்
மீளக்குடியேற பண உதவி
தொழில்சார் பயிற்சிகள்
தொழில் வாய்ப்புகள்
கல்வி
போன்ற வசதிகளை
நாம் செய்து
கொடுப்போம்.

## IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens, Artillery Row, London SW1P 1PR
*Liverpool office:* 5th Floor. Corn Exchange, Fenwick Street, Liverpool. L2 7QL. Tel: 0151 225 0142
*Glasgow office:* 38, Queen Street, Glasgow G1 3DX. Tel: 0141 548 8116
*Bristol Office:* Park House Business Centre, 10 Park Street, Bristol BS1 5HX. Tel: 0117 907 4777

**www.iomlondon.org**

IOM is an independent, international organization. It is **not** part of the UK Government.
We will help you to return home only if you wish to do so.

Actions co-financed
by Community Funds

# 24 Hours - 365 Days

## All Domestic & International Air Tickets Available Across the Counter

IATA

TAAI

## madura travel service (p) ltd.

11-3, Gandhi Irwin Road, Egmore, (Opp. Egmore Railway Station)
Chennai - 600 008, Tamilnadu, India
Ph : 28192002, 28193858, 28192970, Fax : 28191813
Email: india@maduratravel.com Web: www.maduratravel.com

Book of Records Limca Achiever

Estd. 1986


madura WELCOME

TAMILNADU

Tourist No. 1 Guide



## www.worldtamilnews.com


India's First Internet Radio

"தேமதுரத் தமிழோசை – உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"


World's 1st Tamil Internet Radio



Always at your service, call me.

'Kalaimamani' V.K.T. BALAN
Chairman & Managing Director
Cell : 98410 78674